விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

Registered as a Newspaper in Srilanka

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 சித்திரை 25 வெள்ளிக்கிழமை (08.05.2015) தொலைபேசி 222 3378, தொலைநகல் 222 7829 ஒலி 140




கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம் 1000/= மட்டுமே


# புதிய ஆட்சியில் நான் ஹிட்லரையே காண்கிறேன்

## அதிகாரங்களை துஷ்பிரயோகிப்பதாக மகிந்த குமுறல்



(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரி, பிரதமர் ரணில் தலைமையிலான புதிய ஆட்சியின் செயற்பாடுகள் எனக்கு சர்வாதிகாரி ஹிட்லரை நினைவூட்டுகின்றன. இங்கு நல்லாட்சிக்கு பதில் பழிவாங்கும் முயற்சியே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். (23ஆம் பக்கம் பார்க்க)

## பசிலுக்கு மீண்டும் மறியல் நீடிப்பு

(கொழும்பு)

முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ எதிர்வரும் 20ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

திவிநெகும திணைக்கள நிதி மோசடி குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு 24ஆம் பக்கம் பார்க்க....

## சட்டம் அனைவருக்கும் பொதுவானது – சரத்

(கொழும்பு)

நாட்டில் ஆட்சியாளர் மட்டுமன்றி, ஆட்சியாளரின் அப்பாவாக இருந்தாலும் சட்டத்திற்கு மதிப்பளிக்க வேண்டும் என ஜனநாயக கட்சியின் தலைவர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

ஹோமாகம பகுதியில் இடம்பெற்ற மக் 24ஆம் பக்கம் பார்க்க....

## விமானக்குண்டுகள் வளலாயில் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.வளலாய் பகுதியில் அண்மையில் மீள்குடியேற்றத்திற்கு அனுமதிக்கப்பட்ட பகுதியிலிருந்து நான்கு விமானக் குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

குறித்த பகுதியில் கடற்றொழிலுக்குச் செல்லும் வழியில் குண்டுகள் காணப் 24ஆம் பக்கம் பார்க்க....

## நிதிக்குற்றவியல் விசாரணையில் அரசியல் பழிவாங்கல் இல்லை

### நடவடிக்கைகள் சுயாதீனமானவை – அரசு

(கொழும்பு)

நிதிக் குற்றவியல் விசாரணைப் பிரிவின் நடவடிக்கைகள் சுயாதீனமானவை எனவும், எவ்வித அரசில பழிவாங்கல்களும் கிடையாது எனவும் அரசாங்கம் அறிவித்துள்ளது.

நிதிக் குற்றவியல் விசாரணைப் பிரிவு கடந்த அரசாங்கத்தின் ஊழல் மோசடிகள் தொடர்பில் விசாரணைகளை நடத்தி வருகின்றது.

நிதிக்குற்றவியல் விசாரணைப் பிரிவு தொடர்பில் வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள சில விடயங்களில் மாற்றம் செய்யப்பட வேண்டிய போதிலும் விசாரணைகள் இடை 23ஆம் பக்கம் பார்க்க....

## சம்பூர் கடற்படை முகாம் வேறிடத்துக்கு மாற்றப்படும்!

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டம் சம்பூர் கடற்படை முகாமின் பயிற்சி நிலையம் வேறிடத்திற்கு மாற்றப்படவுள்ளதாக கொழும்பில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பின்போது கிழக்கு மாகாண ஆளுநர் ஒஸ்டின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

### கிழக்கு ஆளுநர் அறிவிப்பு

இலங்கை கடற்படையினரின் பொறுப்பில் கடற்படையினருக்கான பயிற்சி நிலையம் அமைந்திருந்த 237 ஏக்கர் காணியும் அந்தக் காணிகளின் உரிமையாளர்களான இடம்பெயர்ந்துள்ள மக்களிடம் திருப்பிக் கையளிக்கப்படும் என் 23ஆம் பக்கம் பார்க்க....

## இளைஞர் ஒருவர் சடலமாக மீட்பு

(கரணவாய்)

நெல்லியடி புனித அந்தோனியார் தேவாலயத்திலிருந்து இளைஞர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நெடுந்தீவு 11ஆம் வட்டாரத்தைச சேர்ந்த ஜேசுரட்ணம் ஆரோக்கியராஜ் (வயது 19) என்ற இளைஞரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

தனது தாயாருடன் நேற்றுமுன்தினம் நெல்லியடிக்கு வருகை தந்த இளைஞன் இர்வு தேவாலயத்தில் தங்கியுள்ளார்.

இந்நிலையிலேயே நேற்றுக் காலை தூக் 24ஆம் பக்கம் பார்க்க....

## பெருமளவு சொத்துக்களை ராஜபக்ஷவினர் வெளிநாடுகளில் மறைத்து வைத்துள்ளனர்



### புலனாய்வு பிரிவு கண்டறிந்துள்ளதாக மங்கள தகவல்

(கொழும்பு)

ராஜபக்ஷ குடும்பத்தினர் வெளிநாடுகளில் சுமார் 18 பில்லியன் டொலர் பெறுமதியான சொத்துக்களை மறைத்து வைத்துள்ளதாக அது பற்றி விசாரணைகளை நடத்தி வரும் புலனாய்வு பிரிவினர் கண்டறிந்துள்ளதாக வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று முற்பகல் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

ராஜபக்ஷ குடும்பத்தினர் மறைத்து வைத்துள்ளதாக கூறப்படும் சொத்துக்களை கண்டறிய 4 நாடுகள் உதவிகளை வழங்கி வருகின்றன.

ராஜபக்ஷ குடும்பத்தினர் வெளிநாடுகளில் சுமார் 18 பில்லியன் டொலர் பெறு 24ஆம் பக்கம் பார்க்க....

## கோத்தபாய மீண்டும் விசாரணைக்கு அழைப்பு

(கொழும்பு)

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ நிதிக் குற்றவியல் விசாரணைப் பிரிவிற்கு அழைக்கப்பட உள்ளார்.

எதிர்வரும் 11-ம் திகதி கோத்தபாயவிடம் விசாரணை நடத்தப்பட உள்ளது.

கடந்த அரசாங்க ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற ஊழல் மோசடிகள் தொடர்பில் கோத்தபாய ராஜபக்ஷவிடம் விசாரணை நடத்தப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கெனவே கோத்தபாயவிடம் லஞ்ச ஊழல் 23ஆம் பக்கம் பார்க்க....

## மக்களின் காணிகளை மீட்டெடுக்க அரசிடம் தொடர்ந்து கோருகிறோம்

### சம்பூர் காணிகள் இன்று விடுவிக்கப்படும் – மாவை

(யாழ்ப்பாணம்)

வட கிழக்குப் பிரதேசத்தில் இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கின்ற பொது மக்களுடைய நிலங்கள் அனைத்தும் முழுமையாக விடுவிக்கப்பட வேண்டுமென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான புதிய அரசிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்ச்சியாகக் கோரிக்கை விடுத்து வருவதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளரும் யாழ் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

காணி ஆக்கிரமிப்புக்கள், அபகரிப்புக்கள், மீள்குடியேற்றம் என்பன தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க தலைமையிலான விசேட செயலணிக் குழுக் கூட்டத்திலும் அடுத்த வாரமளவில் நடைபெறவிருக்கும் ஜனாதிபதி தலைமையிலான நிறைவேற்றுச் சபைக் கூட்டத்திலும் கட்சியின் தலைவரால் விசேடமாக அறிக்கையொன்றும் சமர்ப்பித்து கலந்துரையாடப்பட உள்ளதாகவும் மாவை சேனாதிராசா குறிப்பிட்டார்.

யாழ். மார்ட்டின் வீதியிலுள்ள இலங்கைத் 23ஆம் பக்கம் பார்க்க....

## மணற்கொள்ளையர்கள் பொலிஸார் மோதல்

### பொலிஸ் உத்தியோகத்தர் உட்பட இருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், வடமராட்சி மணற்காட்டுப் பகுதியில் பொலிஸார் மீது தாக்குதல் நடத்திய மணற்கொள்ளையர்கள் மீது பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்திய சம்பவமொன்று நேற்று இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் பொலிஸ் உத்தியோகஸ்தர் ஒருவர் உட்பட இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

இச்சம்பவத்தினால் வடமராட்சியில் நேற்றையதினம் பதற்ற நிலை காணப்பட்டிருந்தது.

கொள்ளையர்களின் தாக்குதலில் படுகாயமடைந்த எம்.அச்சல (வயது 32) என்ற பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரும், பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்த துன்னாலை, குடவத்தையைச் சேர்ந்த த.தர்சன் (வயது 27) என்ற 24ஆம் பக்கம் பார்க்க....

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

### கதிரித்தம்பி பூபாலசிங்கம்



சாரத வீதி, சங்கத்தானை சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கதிரித்தம்பி பூபாலசிங்கம் 07.05.2015 அன்று காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரித்தம்பி -பூமாதேவிவின் பாசமிகு மகனும், பரிமளத்தின் அன்புக் கணவரும், புஸ்பலதா, புவனேஸ்வரி, கோகிலகிருஸ்ணன் (பிரான்ஸ்), வாகிசன், பிறேமதர்சினி (பிரான்ஸ்), நகுலேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவரூபன், பிரகலாதன் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (08.05.2015) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மிருசுவில்,
கொடிகாமம்.

(சி-926) தகவல்:-சபேசன் (மருமகன்)

# 15 எம்.பிக்களை கைது செய்யவே நீதிமோசடி விசாரணை பிரிவு ஆரம்பிப்பு

## அரசியல் தேவை என விமல் குற்றச்சாட்டு

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கு முன்னர் 10 முதல் 15 நாடாளுமன்ற உறுப்பினர்களை சிறையில் அடைக்கும் நோக்கத்திலேயே நிதி மோசடி விசாரணைப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

அரசியல் தேவைக்காக இந்த விசாரணைப் பிரிவு ஏற்படுத்தப்பட்டதாகவும் அடக்குமுறை மாத்திரமே அதில் முழுமையாக மேற்கொள்ளப்படுவதாகவும் வீரவன்ஸ கூறியுள்ளார். கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவி யலாளர் சந்திப்பில் அவர் இதனை குறிப்பிட்டு ள்ளார்.

நிதி மோசடி விசாரணைப் பிரிவில் ஆஜர் படுத்த வேண்டுமாயின், நாடு பெருந்தொகை பணத்தை இழக்க காரணமான இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரையே முதலில் ஆஜர்படுத்த வேண்டும். எனினும் அவர் எந்த பிரச்சினையுமில்லாமல் இருந்து வருகிறார்.

அதேவேளை ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவான இணையத்தளங்கள் அடுத்தது யார் கைது செய்யப்பட உள்ளனர் என்பது பற்றிய செய்திகளை வெளியிட்டு வருகின்றன எனவும் விமல் வீரவன்ஸ கூறியுள்ளார். (செ-11)

# குறிப்பிட்டு கூறும்படி பசிலுக்கு எவ்வித நோய்களும் கிடையாது

முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவிற்கு குறிப்பிட்டு கூறும் அளவிற்கு எவ்வித நோய்களும் கிடையாது என கொழும்பு சட்ட வைத்திய அதிகாரி உத்பல ஆட்டிகல தெரிவித்துள்ளார்.

கடுவெல நீதவான் தம்மிக்க ஹேமபாலவிற்கு சமர்ப்பித்த அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. பசில் ராஜபக்ஷவின் உடல் நலக்குறைவு தொடர்பில் முழு அளவில் சோதனை நடத்தப்பட்டதாகத் தெரிவித்துள்ளார். எனினும் அவ்வாறு குறிப்பிட்டுக் கூறும அளவிற்கு நோய்கள் எதுவும் கிடையாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அம்புலன்ஸ் வண்டியில் நீதிமன்றிற்கு ஆஜராகிய பசில் ராஜபக்ஷ, அம்புலன்ஸ் வண்டியை விட்டு இறங்காதிருந்தார் என தெரிவிக்கப்படுகிறது. பசில் ராஜபக்ஷவை, நீதவான் ஹேமபால சென்று பார்வையிட்டுள்ளார்.

திவிநெகும மோசடி வழக்குடன் தொடர்புடைய பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் டாக்டர் நிஹால் ஜெயதிலக, திவிநெகும பணிப்பாளர் நாயகம் ஆர்.ஏ. கே.கே. ரணவக்க மற்றும் திவிநெகும வங்கியின் தலைவர் பீ.பி. திலக்கசிறி ஆகியோரின் உடல் நிலை குறித்தும் அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதவான், கொழும்பு சட்ட வைத்திய அதிகாரிக்கு உத்தரவிட்டுள்ளார். (செ-11)

## கல்விமாணி மாணவர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வி நிறுவகத்தில் கல்விமாணி பட்டப்படிப்பை மேற்கொள்ளும் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய கற்கை நிலையத்தின் மூன்றாம் வருட மாணவர்களுடனான (2011/2013) முக்கிய சந்திப்பு நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறும்.

சம்பந்தப்பட்ட மாணவர்களை தவறாது சமுகமளிக்குமபடி நெல்லியடி மத்திய மகா வித்தியாலய கற்கை நிலையத்தின் இணைப்பாளர் செ.சேதுராஜா கேட்டுள்ளார். (ந)


## யா/நெல்லியடி மத்திய கல்லூரி

### பணி நயந்து வாழ்த்துகின்றோம்



எமது அதிபர்

உயர்திரு.செல்லத்துரை சேதுராஜா

(BA, PGDE, M Phil, MSc (mgt), PGDEM, SLEAS III)

கல்லூரி அதிபராக
கண் நிறைந்த சேவையாற்றி
மண்ணவர்கள் புகழ்ந்திடவே
எல்லையில்லா இன்பமுடன்
வல்லபல பட்டங்கள்
வாங்கிக் குவித்தவரே
எல்லா நிலைகளினும்
ஏற்றுமுறு வாழ்வுபெற்று
பல்லாண்டு பல்லாண்டு
பல்லாண்டு வாழியவே

கல்விப் பணியில்...

ஆசிரியர்-நு/றம்பொடை தமிழ் மகா வித்தியாலயம்
1984.03.12-1986.06.30
அதிபர்-நு/றம்பொடை தமிழ் மகா வித்தியாலயம்
1986.07.01-1988.01.14
கொத்தணி அதிபர்-றம்பொடை பாடசாலைகள்
1988.01.15-1995.05.02
பகுதித் தலைவர் -யா/பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி
1995.05.03-1998.01.05
உதவிக் கல்விப் பணிப்பாளர் -திட்டமிடலும் முகாமைத்துவமும்
வடமராட்சி வலயக் கல்வி அலுவலகம்
1998.01.06-2000.03.19
கல்வி விரிவுரையாளர்-கிழக்குப் பல்கலைக்கழகம்
2000.03.20-2001.09.23
உதவிக் கல்விப் பணிப்பாளர்-திட்டமிடல்
வடமராட்சி வலயக் கல்வி அலுவலகம்
2001.09.24-2001.12.01
அதிபர்-யா/நெல்லியடி மத்திய கல்லூரி
2001.12.02-2015.05.10

-பணியாளர் பேரவை-
நெல்லியடி மத்திய கல்லூரி

(சி-924)



வட மாகாண அதிபர்கள் சங்கம்

**அதிபர்கள் சங்கமம்-2015**

இடம்
ரில்கோ விருந்தினர் விடுதி-யாழ்ப்பாணம்
(TILKO JAFFNA CITY HOTEL)

காலம்
10.05.2015 ஞாயிற்றுக்கிழமை மு.ப 9.30 மணி

தலைமை
திரு.ச.சிவநேஸ்வரன்
(அதிபர் -யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி
தலைவர், வட மாகாண அதிபர்கள் சங்கம்)

முதன்மை விருந்தினர்
கௌரவ த.குருகுலராஜா
(கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சர்,
வடக்கு மாகாணம்)

கௌரவ விருந்தினர்
திரு.இ.இரவீந்திரன்
(செயலாளர், கல்வி, பண்பாட்டலுவல்கள்
விளையாட்டுத்துறை அமைச்சு, வடக்கு மாகாணம்)

சிறப்பு விருந்தினர்கள்
திரு.செ.உதயகுமார்
(மாகாணக் கல்விப் பணிப்பாளர், வடக்கு மாகாணம்)
மற்றும்
வடக்கு மாகாண வலயக் கல்விப் பணிப்பாளர்கள்

(சி-925)

வட மாகாண அதிபர்கள் சங்கம்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# குற்றம் நிருபிக்கப்பட்டால் தண்டனை வழங்கப்படும்

யாழ்.நீதிமன்றில் நடைபெற்ற வழக்கில் ஹெரோயின் சந்தேக நபரை பிணையில் விடுவிப்பதற்கு ஆட்சேபனை தெரிவிக்காத பொலிஸாரின் குற்றம் நிரூபிக்கப்பட்டால் உரிய தண்டனை வழங்கப்படும்.

இவ்வாறானதொரு சிலரின் செயற்பாடு களை வைத்துத்தான் ஒட்டுமொத்த பொலி ஸாரினை மக்கள் தவறாக எண்ணி விடுகின் றனர் என வடக்கு மாகாண சிரேஷ்ட பொலி ஸ்மா அதிபர் லலித் ஏ.ஜெயசிங்க தெரிவி த்துள்ளார்.

காங்கேசன்துறையில் அமைந்துள்ள சிரேஷ்ட பொலிஸ்மா அத்தியட்சகரின் அலுவ லகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலா ளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

குறித்த வழக்கின் முதல் அறிக்கையில் ஹெரோயின் சந்தேக நபருக்கு பிணை வழங் கு வதில் ஆட்சேபனை என குறிப்பிடப்பட்டு ள்ளது. எனினும் நீதிமன்றில் பிணை வழங்கு வதற்கு ஆட்சேபனை எதுவும் தெரிவிக்க வில்லை.

இது பாரிய குற்றமாகும். இது தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்பட்டு ஆட்சே பனை தெரிவிக்காத பொலிஸாரின் குற்றம் நிரூபிக்கப்படால் உரிய தண்டனை வழங்கப் படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

வடக்கு மாகாண மக்களுக்கு சிறந்த சேவை யினை வழங்குவதே எமது நோக்கமா கும். இங்கு சட்டத்தை மாத்திரம் நாம் முன் னெடுக்கவில்லை சேவையினையும் சேர் த்தே முன்னெடுத்து வருகின்றோம்என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

# ரணிலை நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு உத்தரவு

(கொழும்பு)

**பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச்செயலாளர் கபீர் ஹாசிம் உள்ளிட்டவர்களை எதிர்வரும் 20ஆம் திகதி நுகேகொட நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு நுகேகொட நீதவான் சஹான் மாப்பா பண்டார நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளார்.**

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேனவிற்கு ஆதரவு வழங்குவதற்கு எடுத்த தீர்மானம், ஐக்கிய தேசியக் கட்சியின் யாப்பிற்கு முரணானது என வழக்குத் தாக் கல் செய்யப்பட்டது.

மத்திய மாகாண சபையின் ஐக்கிய தேசி யக் கட்சி உறுப்பினர் சித்ரா ஸ்ரீமனி மனதி லக்க மற்றும் மேல் மாகாண சபை ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர் கிங்ஸ்லி லால் பிரநாந்து ஆகியோரால் தாக்கல் செய்திருந்த மனுவை விசாரணைக்கு எடுத்த போதே நீதிபதி இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

கட்சி யாப்பின் 9ஆவது சரத்திற்கமைய ஜனாதிபதி வேட்பாளர் ஒருவரைத் தெரிவு செய்யும் முறைக்குப் புறம்பாக கட்சித் தலைமை செயற்பட்டுள்ளதாக மனுதாரர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

மேலும் மைத்திரிபால சிறிசேனவிற்கு ஆதரவு வழங்கவில்லை என்ற ரீதியில் ஐக்கிய தேசிய கட்சியின் எந்த ஒரு உறுப் பினர்களுக்கு எதிராகவும் ஒழுக்காற்று நடவ டிக்கைகளும் மேற்கொள்ளவும் முடியாதென அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளார்கள். (இ-5)

# இரத்த சுத்திகரிப்பு வைத்திய முகாம்

நொதேண் சென்றல் வைத்தியசாலையில் நாளை மறுதினம் இரத்த சுத்திகரிப்பு (Dialysis) வைத்திய முகாம் இத்துறைகளில் தேர்ச்சி பெற்ற வைத்திய நிபுணர்களால் காலை 9 மணி முதல் நடைபெறவுள்ளது. இவ் வைத் திய முகாமில் வைத்திய நிபுணர்களிடம் இலவ சமாக ஆலோசனை பெற்றுக் கொள்ள முடி யும். இலவச ஆலோசனை பெற விரும் புவோர் முன்கூட்டியே 021 222 9988, 021 222 9977, 021222 2263 என்ற தொலை பேசிக ளுடன் தொடர்பு கொண்டு பதிவு செய்யும் வண் ணம் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (இ-5)

# நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வு

வடக்கு மாகாணப் பாடசாலைகளுக்கு நியமனம் செய்யப்பட்ட ஆசிரிய உதவியா ளர்களில் ஆசிரியர் பயிற்சி நெறியினை பூர்த்தி செய்த 343 ஆசிரிய உதவியா ளர்க ளுக்கு இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு 3 தரம்-1(ஆ) இற்கு நியமனம் வழங்கப்பட விருப்பதால் குறிப்பிடப்பட்ட ஆசிரியர்களை நாளை 9 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு வருகை தந்து தங்களது நியம னக் கடிதங்களை பெற்றுகொள்ளுமாறு வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செய லாளர் இ.இரவீந்திரன் தெரிவித்துள்ளார்.

இவ்வைபவத்தில் கலந்து கொள்ளும் பெண்கள் இள வர்ண சாறியுடன், ஆண்கள் கறுப்பு வர்ண நீள் காற்சட்டை மற்றும் வெள்ளை நிற சேட் அணிந்து வருதல் வேண்டுமெ னவும் அறிவித்துள்ளார். (இ


## வேலையாட்கள் தேவை

லைடன் புடைவை நிலையத் திற்கு விற்பனையில் அனுபவம் உள்ள பெண் பிள்ளைகள் தேவை. இரு வெற்றிடங்கள் உள்ளன. (பழக விரும்புபவர்களும் விரும்பத்தக்கது)

(சி-907)

**லைடன் புடைவை நிலையம்,**
**410, ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**



வாழ்க்கையில் **வெறுப்பா?**

பிரச்சினை எதுவானாலும், எம்முடன் தொலைபேசியில் அல்லது நேரில் பேசுங்கள். இரகசியங்களைப் பேணுவோம்.

(C-478)

காலை 9.00 – பி.ப 1.00
மதச்சார்பற்றது

**கைகொடுக்கும் நண்பர்கள்**

104, 4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
**021 222 8117, 0779008776**


## தென்மராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் -(வரையுள்ளது)

## கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான

# அறிவித்தல்

வடக்குக் கிழக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் பதிவாளரும் அவர்களினால் ஆக்கப்பட்டு 1998.05.19 ஆம் திகதிய 1028/6 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான "வடக்குக் கிழக்கு மாகாண நிர்வாக எல்லைக்குட்பட்ட பகுதியில் இயங்கி வரும் வரையறுக்கப்பட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளைக்குழுக்களைத் தெரிவு செய்வதற்கான விதிகளின்படி வடக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும் ஆகிய திருமதி மதுமதி வசந்தகுமார் ஆகிய நான் 1983 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கம் கொண்டதும் 1992 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்கம் கொண்டதுமான கூட்டுறவுத் திருத்தச் சட்டங்களுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க கூட்டுறவுச் சட்டத்தின் ஏற்பாடுகளிற்கமைய எனக்குரித்தாக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மேற்படி சங்கத்தின் துணைவிதி பிரிவு 23 இற்கமைய சங்கத்தின் சகல கிளைகளிற்குமான கிளைக்குழுத் தெரிவிற்கான கிளைப் பொதுச்சபைக் கூட்டங்கள் பின்வரும் கால அட்டவணையின்படி நடைபெறுவதற்காக இக்கூட்டங்களை அழைப்பதற்கும் அவற்றின் தவிசாளராகக் கடமையாற்றுவதற்கும் பின்வரும் அலுவலர்களை பெயர் குறித்து நியமித்துள்ளேன்.

* இதற்கமைய இக்கூட்டங்களில் சமுகமளித்து வாக்களிக்க உரிமையுள்ள உறுப்பினர்களுக்கு தனித்தனி அறிவித்தல்கள் சம்பந்தப்பட்ட அலுவலர்களினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

* கிளைப்பொதுச்சபைக் கூட்டத்திற்கான நிறைவெண் கூட்டத்திற்கு சமுகமளித்து வாக்களிக்கத் தகுதியுள்ள உறுப்பினர்களில் நான்கிலொரு (1/4) பங்கினர் அல்லது 25 பேர் எது குறைவோ அத்தொகையாகும்.

* தவிசாளர் குறித்த கிளையின் பொதுச்சபையில் இருந்து கிளைக்குழுவிற்கான ஒன்பது (09) உறுப்பினர்களைத் தெரிவு செய்யும்படி கிளையின் பொதுச்சபையைக் கோருவார். இவ் ஒன்பது உறுப்பினர்களுள் ஆகக்குறைந்தது இருவர் (02) 18 வயதிற்கும் 35 வயதிற்கும் உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

* சபையில் இருந்து கிடைக்கப்பெறும் முன்மொழிவுகள் (09) ஒன்பது பேருக்கும் மேற்படின் தவிசாளர் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தெரிவினை மேற்கொள்ளுவார்.

* இரண்டு வேட்பாளருக்கு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட வேட்பாளர்களுக்கிடையே சம வாக்குகள் கிடைக்கப்பெறும் பட்சத்தில் திருவுளச்சீட்டு மூலம் தெரிவு மேற்கொள்ளப்படும். தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்களைத் தவிசாளர் கிளையின் பொதுச் சபையில் பிரகடனப்படுத்துவதுடன் சங்கச் செயலாளருக்கும், எனக்கும் எழுத்து மூலம் அறிவிப்பார்.

## கிளைப்பொதுச்சபைக் கூட்டங்கள் தொடர்பான விபரம்

| கிளை இல கிளையின் பெயர் | திகதி | நேரம் | கிளை பொதுச்சபைக்கூட்டம் நடைபெறும் இடம் | தவிசாளர் பெயர் |
|---|---|---|---|---|
| 01.கொடிகாமம் | 10.05.2015 | மு.ப.10.00மணி | யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி | திரு.இ.புவன்ராஜ் |
| 02.கச்சாய் பாலாவி | 10.05.2015 | மு.ப.10.00மணி | யா/கச்சாய் அ.த.க.பாடசாலை | திரு.பா.சிவபாலன் |
| 03.வினோபா | 10.05.2015 | மு.ப.10.00மணி | விநோபா சனசமூக நிலையம் | திரு.பா.ஸ்ரீகுமார் |
| 04.அல்லாரை | 10.05.2015 | மு.ப.10.00மணி | யா/அல்லாரை அ.த.க.பாடசாலை | திருமதி.அ.ரஞ்சினி |
| 05.மந்துவில் மத்தி | 10.05.2015 | மு.ப.10.00மணி | யா/மந்துவில் றோ.க.த.க.பாடசாலை | திரு.நா.குமணதாசன் |
| 06.மந்துவில் | 10.05.2015 | மு.ப.10.00மணி | யா/மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயம் | திரு.ம.கபிலன் |
| 07.இயற்றாலை | 10.05.2015 | மு.ப.10.00மணி | யா/இயற்றாலை அ.மி.த.க.பாடசாலை | திரு.க.சசிகரன் |
| 08. வடவரணி | 10.05.2015 | மு.ப.10.00மணி | யா/வரணி வடக்கு சைவப்பிரகாச வித்தியாலயம் | திரு.இ.தயாகரன் |
| 09.இடைக்குறிச்சி | 10.05.2015 | மு.ப.10.00மணி | யா/இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயம் | திரு.வி.பிரதீஸ்குமரன் |
| 10.நாவற்காடு-10 | 10.05.2015 | மு.ப.10.00மணி | நாவற்காடு கிளை மண்டபம் | திரு.ச.பாலவரதன் |
| 11.நவஜீவனம் | 10.05.2015 | மு.ப.10.00மணி | யா/மிருசுவில் றோ.க.த.க.பாடசாலை | திரு.ச.சசீந்திரன் |
| 12.வடக்கு மிருசுவில் | 10.05.2015 | மு.ப.10.00மணி | யா/மிருசுவில் அ.த.க.பாடசாலை | திரு.அ.தயாளன் |
| 13.விடத்தற்பளை | 10.05.2015 | மு.ப.10.00மணி | யா/விடத்தற்பளை கமலாசினி வித்தியாலயம் | திரு.கு.நிசாந்தன் |
| 14.எழுதுமட்டுவாழ் | 10.05.2015 | மு.ப.10.00மணி | யா/ எழுதுமட்டுவாழ ஸ்ரீகணேசா வித்தியாலயம் | திரு.பா.குருபரன் |
| 15.நாவற்காடு-15 | 10.05.2015 | மு.ப.10.00மணி | யா/நாவற்காடு கணபதிப்பிள்ளை வித்தியாலயம் | திரு. வ.நிதர்சன் |
| 16.கரம்பைக்குறிச்சி | 10.05.2015 | மு.ப.10.00மணி | யா/வரணி மத்திய கல்லூரி | திரு.பொ.கோகுலன் |
| 17.கெற்பேலி | 10.05.2015 | மு.ப.10.00மணி | வீரபத்திரர் சனசமூக நிலையம் | திரு.அ.விமல்ராஜ் |
| 18.தவசிகுளம் | 10.05.2015 | மு.ப.10.00மணி | யா/போக்கட்டி றோமன் கத்தோலிக்க த.க பா. | திரு. தி.வித்தகலாநிதி |
| 19.உசன் | 10.05.2015 | மு.ப.10.00மணி | யா/உசன் இராமநாதன் மகா வித்தியாலயம் | திரு.இ.வேல்குமார் |

குறிப்பிட்ட கிளைகளின் கூட்டங்களுக்கு சமுகமளித்து வாக்களிக்க உரிமையுள்ள உறுப்பினர்களுக்கு தனித்தனி அறிவித்தல்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. எனினும் எவரேனும் மேற்குறிப்பிட்ட தகுதியுள்ள உறுப்பினர்களுக்கு அறிவித்தல் கிடைக்காதுவிடினும் குறித்த கூட்டத்தில் இந்த அறிவித்தலை அடிப்படையாகக் கொண்டு சமுகமளிக்க முடியும் என்பதனையும் அறியத் தருகின்றேன்.

ஒப்பம்: திருமதி.மதுமதி வசந்தகுமார்,
கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும்,
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும்(வ-மா).
கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம்,
முதியோர் இல்ல வளாகம், கைதடி.

திகதி:- 07.05.2015 (சி-921)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம ஞானத்தைத் தேடி

ஆன்மீகம் 194

## பொறாமையிலிருந்து விடுதலை

...உண்மையில் அது உங்களால் விழிப்பின்றி செயற்படுத்தப்படுவதால் உண்மையான அன்பென்றே எண்ணத் தோன்றுகிறது.

ஒப்பிடுவதற்கான அடிப்படைக் காரணம், நம்மிடம் மன நிறைவில்லாததே! நம்மிடமிருக்கும் அனைத்தும் நமக்கு சந்தோஷத்தைத் தருவதில்லை. காலையிலிருந்து இரவு வரை ஒரு 24 மணி நேரத்திற்கு நீங்கள் கண்பார்வையை இழந்துவிட்டதாகக் கற்பனை செய்துகொள்ளுங்கள்.

உங்கள் கண்களை மூடிக்கொண்டு உங்கள் வேலைகளைச் செய்ய முயற்சி செய்யுங்கள். சில நிமிடங்களிலேயே உங்களுடைய வழக்கமான சகஜமான வேலைகள் கற்பனைக்கெட்டததாகி விடுவதை உணர்ந்து கொள்வீர்கள்.

ஏன் 24 மணி நேரம் வெறும் சில நிமிடங்களிலேயே கஷ்டத்தைப் புரிந்துகொண்டுவிடுவீர்கள். மீண்டும் கண்களைத் திறந்து உலகத்தைப் பார்ப்பது ஒரு மிகப்பெரும் விடுதலையாக இருக்கும். அப்பொழுது ஒரு வேளை உங்களுடைய கண் பார்வைக்காக நீங்கள் கடவுளுக்கு நன்றி சொல்லக்கூடும்!

நீங்கள் எப்பொழுதாவது உங்களைக் கண் பார்வையற்றவர்களுடன் ஒப்பிட்டுக் கொண்டு உங்களுக்குக் கண்பார்வையைக் கொடுத்ததற்காகக் கடவுளுக்கு நன்றி சொல்லியிருக்கிறீர்களா? நீங்கள் எப்பொழுதாவது உங்களுடைய கண் பார்வைக்காகத் தன்னிச்சையாக நன்றியுணர்வுடன் இருந்திருக்கிறீர்களா? இல்லை! ஏன்? ஏனெனில், உங்களுக்குக் கொடுக்கப்பட்டவற்றை எப்பொழுதும் நீங்கள் சாதாரணமாக எடுத்துக்கொள்கிறீர்கள்.



அதுதான் காரணம். அது எப்படியும் இருக்கிறது... நாம் அடுத்தது என்னவென்று பார்ப்போம் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்.

நாம் அனைவரும் இந்த மூன்று அச்சுக்களைச் சுற்றியே செயற்படுகிறோம்; செய்தல் பெறுதல் இருத்தல் இருத்தலை அனுபவிக்காமல் பெறுவதற்காகச் செய்வதே நமது எல்லாத் துயரங்களுக்கும் ஒரே காரணம்.

செய்வதால் ஒருபோதும் பெறுவதை ஈடு செய்ய முடியாது! ஒவ்வொரு முறையும் நாம் கடினமாக உழைத்து நமது ஒரு ஆசையைப் பூர்த்தி செய்து கொள்ளும்பொழுதும் நம்மை ஓட வைக்க இன்னும் பல ஆசைகள் வந்துவிடுகிறது.

நான் இப்பொழுது வேலை செய்துவிடுகிறேன். பிறகு அனுபவித்துக்கொள்கிறேன் என்று ஒரு போதும் எண்ணாதீர்கள். பிறகு நீங்கள் திரும்ப வந்து அனுபவிக்கலாம் என்று எண்ணாதீர்கள்.

(தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி





### பறக்கும் பன்றிகள்... சீனாவில் அரங்கேறும் வினோதம்!...

சீனாவிற்கு வருகை தரும் சுற்றுலா பயணிகளை கவருவதற்காக நூதனமான வேடிக்கை நிகழ்ச்சிகளை சுற்றுலாத் துறை நடத்தி வருகிறது.

மத்திய சீனாவின் Hubei மாகாணத்தில் உள்ள Shiyan என்ற ஏரியில் மிக உயரமான மரப்பாலம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

நன்கு பயிற்சி பெற்ற வெள்ளைப் பன்றிகளின் மீது சிவப்பு நிறத்தில் எண்களை பதிந்து, அவற்றை பாலத்தின் மீது கொண்டு செல்கின்றனர்.




பின்னர், பன்றிகளை பாலத்தின் மீது வரிசையாக நிற்க வைத்து நீண்ட ஒரு பிரம்பின் உதவியுடன் ஒவ்வொரு பன்றியாக தள்ளி விடுகின்றனர்.

உயரத்திலிருந்து விழும் பன்றிகள் பறந்து வருவதுபோல், தண்ணீரில் விழுந்து, அங்கிருந்து நீந்தி ஒரு குறிப்பிட்ட தூரம் வரை சென்று கரையேறுகிறது.

இந்த விநோத நிகழ்ச்சியை உற்சாகமாக கண்டு களிக்கும் சுற்றுலா பயணிகள், பன்றிகள் கீழே விழும்போது மகிழ்ச்சியாக கோஷங்கள் எழுப்புவதுடன், பன்றிகள் நீந்தும்போது உற்சாகமாக கைதட்டி மகிழ்கின்றனர்.

இந்த நிகழ்ச் சி சுற்றுலா பயணிகளிடையே வரவேற்பை பெற்றிருந்தாலும், விலங்குகளை அரசே சித்ரவதை செய்ய தூண்டி வருவதாக குற்றச்சாட்டுகளும் எழுந்துள்ளது.

இந்த குற்றச்சாட்டுகளுக்கு பதிலளித்த சுற்றுலா துறை அதிகாரியும், இந்த நிகழ்ச்சியை நடத்தி வரும் Shi Huang என்பவர் கூறுகையில், பன்றிகள் ஒவ்வொன்றிற்கும் நன்றாக பயிற்சி அளித் துள்ளதாகவும், அவற்றை எந்த வகையிலும் சித்ரவதை செய்யவில்லை என கூறியுள்ளார். மேலும், இயற்கையாகவே பன்றிகளுக்கு தண்ணீரில் நீந்துவது மிகவும் பிடித்த விடயம் என்பதால், இந்த விளையாட்டை மிகவும் உற்சாகமாக செய்து வருவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.




### முந்திரி சாக்லேட் டெஸர்ட்



**தே.பொருட்கள்:**

வெண்ணெய் - 100 கிராம்
சர்க்கரை -100 கிராம்
குளுக்கோஸ் பிஸ்கட் - 100 கிராம்
முந்திரி -25 கிராம்
கோகோ பவுடர் -3 தேக்கரண்டி
ஸ்வீட் ஜரிகை பேப்பர் -ஒன்று
செர்ரி -சிறிதளவு
திராட்சை -சிறிதளவு

**செய்முறை**

முந்திரிகளை உடைத்து பவுடராக்கவும். பிஸ்கட்டையும் உடைத்து பவுடராக்கிக் கொள்ளவும்.

வெண்ணெயை நன்கு கடைந்து கிரீம்போல் ஆக்கி அதில் பவுடராக்கிய சர்க்கரையைச் சிறிது சிறிதாகச் சேர்த்து நன்கு கலக்கவும்.

கோகோ பவுடரையும் சேர்த்து நன்கு கரண்டியால் அடிக்கவும்.

அடுத்து முந்திரி பவுடரையும் பிஸ்கட் பவுடரையும் சேர்க்கவும்.

ஒரு சதுர கிண்ணத்தில் நெய் தடவி ஜரிகைப் பேப்பரைப் போட்டு கலவையை அதில் கொட்டி சமப்படுத்தி செர்ரி திராட்சைப் பழங்களை அதன் மேல் வைக்கவும்.

பின் இதை 3 மணிநேரம் பிரிட்ஜில் வைத்து எடுக்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்த வடக்கில் விசேட நடவடிக்கைகள் முன்னெடுப்பு

## சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் தகவல்

(யாழ்ப்பாணம்)

**வடக்கு மாகாணத்தில் போதைப் பொருள் பாவனை குறித்து விசேட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது என வடக்கு மாகாண சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் லலித் ஏ.ஜெயசிங்க தெரிவித்துள்ளார்.**

காங்கேசன்துறையில் அமைந்துள்ள அவரது அலுவலகத்தில் நேற்று முற்பகல் 10.30மணியளவில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணத்தில் ஹெரோயின் மற்றும் கஞ்சா போதைப்பொருள் பாவனை பாடசாலைமாணவர்களிடையே அதிகரித்து காணப்பட்டுள்ளதாக அண்மையில் யாழ்.மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற சிவில் பாதுகாப்பு குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

இப்போதைப்பொருள் பாவனை என்பது ஒரு நாட்டிற்குள் அல்லது அந்த பிரதேசத்திற்கும் மிகவும் பாதிப்பினை ஏற்படுத்தும்.

ஒருநாட்டின்எதிரிகள்அந்த நாட்டை கைப்பற்றுவதற்கு அல்லது அழிப்பதற்கு போதைப் பொருளையே முதலில் ஆயுதமாக பயன்படுத்துகின்றனர்.

இதனையே உலக யுத்தத்தின்போதுசீனாவின்எதிரிநாடுகள் பயன்படுத்தியிருந் தன.

அதில் வெற்றியும் பெற்றிருந்தன. இந்நிலைமை யாழ்ப்பாணத்திற்கும் எற்பட வாய்ப்புண்டு.

ஆகையினால் போதைப் பொருள் விநியோகம் குறித்து பொதுமக்களுக்கு தகவல்கள் கிடைக்கப்பெற்றால் உடனடியாக பொலிஸ் உயரதிகாரிகளுக்கு தெரியப்படுத்த வே ண்டும்.

அவ்வாறு தகவல்கள் தருபவர்கள்தொடர்பில்உரிய பாதுகாப்பு வழங்கப்பட்டு நடவடிக்கையெடுக்கப்படும். ஹெரோயின் போதைப் பொருள் விநியோகம் குறித்து பொலி ஸார் மேற்கொண்டு வந்த புலனாய்வு நடவடிக்கைகள் தோல்வியில் முடிவுற்றுள்ளது.

மேலும் இது தொடர்பில் அனைத்துதரப்பினரும்பொலிஸாருக்கு ஒத்துழைப்புடன் செயற்பட்டு வடக்கில் போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்த உதவ வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

# மானுடம் சமூகவியல் ஏடு வெளியீட்டு வைபவம்

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக சமூகவியல் துறையின் வெளியீடான *மானுடம் சமூகவியல் ஏடு-06* இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் கைலாசபதி கலையரங்கில் வெளியிடப் படவுள்ளது.

சமூகவியல் சமூகத்தின் தலைவர்எஸ்.செந்தூரன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தின ராக யாழ். பல்கலைக்கழகத் தின் துணைவேந்தர் சிரேஷ்ட பேராசிரியர் வசந்தி அரசரத் தினம் கலந்து கொள்ளவுள் ளார். சிறப்பு விருந்தினராக கலைப்பீடாதிபதி பேராசிரியர் வி.பி. சிவநாதன் பங்கேற்பார்.

அறிமுகவுரையை திரு மதி பகீரதி ஜீவேஸ்வரா ராச னன் நிகழ்த்த வெளியீட்டு ரையினை முன்னாள் துணை வேந்தரும் சமூகவியல் துறைத் தலைவருமான சிரேஷ்ட பேராசிரியர் என்.சண்முகலிங்கன் நிகழ்த்தவுள் ளார். மதிப்பீட்டுரையினைரோயர்கலாநிதிஎஸ் ஜெபநேசன் ஆற்றவுள்ளார். (இ

# இலங்கை - இந்தியப் பொருளாதார பேச்சுவார்த்தை இன்று இடம்பெறும்

இலங்கை- இந்திய பொருளாதார பேச்சுவார்த்தையொன்று இன்று முற்பகல் 10.30 மணிக்கு இலங்கை கண்காட்சி மற்றும் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கை வர்த்தக சம்மேளனம் மற்றும் எம்.பி. இவென்ட்ஸ் லங்கா பிரைவட் லிமிடட் இணைந்து மூன்றாவது தடவையாக இக்கலந்துரையாடலை ஏற்பாடு செய்துள்ளன.

பொருத்தமான இந்திய வர்த்தக பங்குதாரர்களை இணைத்துக்கொள்ளும் நோக்கில் இக்கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்திய- பாகிஸ்தான் ஆகிய நாடுகளுடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை மேற்கொண்ட ஒரே நாடு என்ற சாதனை படைத்துள்ள இலங்கையில் டியூட்டி ப்ரீ சந்தர்ப்பத்தை சுமார் 1.3 பில்லியனுக்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்களுக்கு வழங்கியுள்ளது.

இக்கலந்துரையாடலின் போது பல்வேறு துறைகளை விரிவுபடுத்தும் நோக்கிலான கலந்துரையாடல்கள் இடம் பெறவிருப்பதுடன் வணிகம் தொடர்பான அடிப்படை தந்திரோபாயங்கள் தொடர்பில் பல்வேறு அமைச்சுக்களின் பிரபல பேச்சாளர்கள் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்திய-இலங்கை வர்த்தக சுதந்திர வர்த்த உடன்படிக்கை கடந்த 1998ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 28 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டது. எனினும் அவ்வுடன்படிக்கை 2000 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதலாம் திகதி தொடக்கமே நடைமுறைக்கு வந்தது. இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் சிறந்த வர்த்தக மற்றும் முதலீட்டு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடு க்கும் நோக்கில்இவ்வொப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. (இ-5)


இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1974 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 18 செவ் 7 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: A/L/ சொந்த தொழில்<br>தொ.இ: B/4453 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 67 செவ் 8 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: BA/ அரச தொழில்<br>தொ.இ: G/4472 |
| பிறப்பு: 1983 RC<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 26 1/4 செவ் 2 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: மிருகவைத்தியர்<br>தொ.இ: B/4455 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 17 1/4<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: BSC<br>தொ.இ: G/4474 |
| பிறப்பு: 1976 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 42 சூரிசெவ் 8 இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: பொறியியல் லண்டன் PR<br>தொ.இ: B/4456 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 8 சூரிசெவ் 5 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: பட்டதாரி/ விரிவுரையாளர்<br>தொ.இ: G/4475 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 79 1/2 செவ் 8 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: BSC/ பொறியியலாளர்<br>தொ.இ: B/4457 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 67 செவ் 1 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: A/L/ வங்கியாளர்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம் முக்கியம்<br>தொ.இ: G/4476 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


# இராசி பலன்

08.05.2015
(சித்திரை 25, வெள்ளிக்கிழமை)
சதுர்த்தி முற்பகல் 8.36 மணிவரை
மூலம் பிற்பகல் 12.28 மணிவரை
இராகுகாலம் 10.25-11.55 மணிவரை
சுபநேரம் 5.55-7.25 மணிவரை
அக்கினி நாள் ஆரம்பம்
அமிர்த சித்தம்

வளவன்

**மேடம்:** மகிழ்ச்சி அதிகரித்து மனமாற்றம் காணும் நாள், பூர்வீகச் சொத்துக்களால் கணிசமான தொகை வந்து சேரலாம், இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**இடபம்:** அடுத்தவர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது, வெளியூர்ப் பயணங்களின் போது பொருட்களில் கவனம் தேவை.

**மிதுனம்:** பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், தொழில் வளர்ச்சிக்கு அனுபவம் மிக்கவர்களிடம் ஆலோசனை கேட்பீர்கள், நட்பு வட்டம் விரிவடையும்.

**கடகம்:** உடல்நலம் சீராகி உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், மறைமுக எதிர்ப்புகள் மாறும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், வரவேண்டிய வரவுகள் வந்து சேரலாம்.

**சிம்மம்:** சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், பணத் தேவைகள் பூர்த்தியாகும், பிள்ளைகளின் நீண்ட நாளைய கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**கன்னி:** பேச்சில் கனிவு பிறக்கும், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், ரோக பயமுண்டு, பெரியோரை மதித்து நடப்பது நல்லது, மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

**துலாம்:** எடுத்த காரியத்தை முடிக்க சகோதர வழியில் உதவிகள் கிடைக்கும், சுறுசுறுப்பாக செயற் படுவீர்கள், சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும், பயணங் களால் பலனுண்டு.

**விருச்சிகம்:** உறவினர் வருகையுண்டு, உங்களின் வார்த்தையை பலரும் ஏற்று நடப்பர், பணப்புழக்கம் அதிகரி க்கும் நாள், எடுத்த காரியங்களை முடிப்பதில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**தனுசு:** தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், ஆரோக்கியம் சீராக ஆகாரத்தில் கட்டுப்பாடு தேவை, இரவு-பகல் பாராது பாடுபடுவீர்கள், மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது.

**மகரம்:** வீட்டை அழகுபடுத்துவதில் அக்கறை காட்டுவீர்கள், பிரபல மானவர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள், தேக நலனில் கவனம் தேவை.

**கும்பம்:** உன்னதமான வாழ்வுக்கு அடித்தளம் அமைப்பீர்கள், பொது வாழ்வில் பாராட்டும் புகழும் கூடும், தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், எடுத்தகாரியங்களில் வெற்றி காண்பீர்கள்.

**மீனம்:** பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்கள் தகுதியை உயர்த்தும், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவமொன்று இடம்பெறலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடலட்டை பிடிக்கும் தொழிலாளர்களால் வடமராட்சிக் கடலில் மீண்டும் தொல்லை

(பொற்பதி)

**வடமராட்சி கிழக்கு ஆழியவளை தொடக்கம் சுண்டிக்குளி வரையிலான கடற்றொழிலாளர்கள் தமது தொழில் நடவடிக்கைகளை செய்ய முடியாத அளவிற்கு தென்பகுதி கடலட்டை கடற்றொழிலாளர்களின் தொல்லை மீண்டும் அதிகரிக்கத் தொடங்கியுள்ளதாக கடற்றொழிலாளர்கள் கவலையுடன் தெரிவித்துள்ளனர்.**

அண்மைக்காலமாக மேற்படி கடற்பகுதியில் கடலட்டைத்தொழிலாளர்களின் தொழில் நடவடிக்கை அதிகரித்துக் காணப்படுகின்றது.

கடலட்டைத் தொழிலாளர்கள் தமது படகுகளுக்கு 25 குதிரை வலுக் கொண்ட இயந்திரங்களைப் பயன்படுத்தி தமது தொழில் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதனால் கடலின் மேற்பரப்போடு செல்கின்ற முரல் வலைகளை தென்பகுதித் தொழிலாளர்களின் படகுகள் சேதமாக்கி வருகின்றன.

இதனால் நாளாந்தம் இந்தப் பகுதி கடற்றொழிலாளர்கள் ஆயிரக்கணக்கான ரூபாய் நட்டங்களை எதிர்நோக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இதனை விட கடலட்டை பிடிப்பதற்கு தொழிலாளர்கள் பயன்படுத்தும் வெளிச்சத்தினால் மீன்கள் கரைப்பகுதிக்கு வருவது குறைவடைகின்றது.

இந்நிலை தொடருமானால் தமது தொழில் நடவடிக்கையும் வாழ்வாதாரமும் பாதிப்படையும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாக கடற்றொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர்களின் நலனை கருத்தில் கொண்டு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென கடற்றொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-3-64)

# கரவெட்டி பிரதேச செயலகத்தின் வருடாந்த விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி பிரதேச செயலக வருடாந்த விளையாட்டு விழா நாளை 9ஆம் திகதி மற்றும் 10 ஆம் திகதிகளில் யாழ். நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளதுடன் இறுதி நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை பி.ப.2 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் பிரதம விருந்தினராக வருகை தந்து இவ்விளையாட்டு விழாவினை சிறப்பிக்கவுள்ளார்.

எனவே பங்கு பற்றும் அனைத்து விளையாட்டுக்கழக உறுப்பினர்களையும் விளையாட்டு ஆர்வலர்களையும் அன்றையதினம் குறித்த நேரத்திற்கு தவறாது வருகை தந்து பிரதேச விளையாட்டு விழா சிறப்புற அமைய ஒத்துழைப்பு வழங்கி உதவுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர் என பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (இ)

# கல்வியியற் கல்லூரிகளுக்கு மாணவர்களை இணைத்தல்

(யாழ்ப்பாணம்)

2015 ஆம் ஆண்டுக்கு தேசிய கல்வியியற் கல்லூரிக்கு மாணவர்களை இணைத்துக் கொள்வதற் கான வர்த்தமானி அறிவித்தல் இன்று அரச வர்த்தமானியில் வெளியிடப் படவுள்ளது என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

அதற்கமைய எதிர்வரும் மே 25 ஆம் திகதி வரை விண்ணப்பங்களை அனுப்பி வைக்க முடியும். (இ-5)

# விபத்தில் சிக்கிய இளைஞன் வீதியில் பரிதாப நிலையில்



(சுரணவாய்)

இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்தும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் இளைஞர் ஒருவர் படுகாயங்களுக்கு உள்ளாகியுள்ளார்.

நேற்றுக்காலை 7.20 மணியளவில் புத்தூர் சந்தியிலிருந்து சுன்னாகம் செல்லும் வீதியில் இவ்விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது,

புத்தூர் பகுதியில் இருந்து இரண்டு இளைஞர்கள் மோட்டார் சைக்கிளில் சென்றுள்ளனர். அதேநேரம் சுன்னாகம் நோக்கி இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பேருந்து ஒன்று பருத்தித்துறையிலிருந்து சென்றுள்ளது. இந்நிலையில் மோட்டார் சைக்கிளும் பேருந்தும் நேருக்கு நேர் மோதுண்டதில் மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞர் ஒருவர் தூக்கி வீசப்பட்டு படுகாயங்களுக்குள்ளானார்.

முழங்காலில் எலும்பு முறிவு ஏற்பட்டு நீண்ட நேரமாக இளைஞர் வீதியோரத்தில் வலியால் துடி துடித்துக் கொண்டு இருந்துள்ளார்.

எனினும் வீதியால் சென்றவர்கள் எவரும் அவருக்கு உதவ முன்வரவில்லை. இந்நிலையில் சம்பவம் தொடர்பில் கேள்வியுற்ற செய்தியாளர் ஒருவர் உடனடியாக அச்சுவேலி அம்புலன்ஸ் வண்டிக்கு அழைப்பை ஏற்படுத்தி விபத்துக் குறித்து அறிவித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. உடனடியாக அப்பகுதிக்கு விரைந்த அம்புலன்ஸ் வண்டி மூலம் படுகாயமடைந்த நிலையில் கிடந்த இளைஞரை உடனடியாக வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றுள்ளனர்.

இதேவேளை பொலிஸாரும் விபத்துக் குறித்து அறிந்து சம்பவ இடத்திற்கு வந்து இளைஞருக்கு முதலுதவிச் சிகிச்சை வழங்கி இருந்தனர். சம்பவத்தில் புத்தூர் மருதடியைச் சேர்ந்த சிறிகுமார் (வயது-19) என்ற இளைஞரே படுகாயமடைந்தவராவார்.

பிரஸ்தாப இளைஞருடன் மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்த இளைஞர் சிறுகாயத்துடன் அங்கிருந்து சென்றுவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-3-60)

# தெளிவற்ற பிரேரணைகளால் மக்கள் மத்தியில் குழப்பநிலை

## அவைத்தலைவர் தெரிவிப்பு

வடமாகாண சபையில் தெளிவற்ற பிரேரணைகளை கொண்டுவருவதன் மூலம் மக்கள் மத்தியில் விளக்கமின்மையும் குழப்பமும் ஏற்படுவதாக வட மாகாண சபையின் அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், வடமாகாண சபை பிரேரணைகளை மட்டும் நிறைவேற்றும் சபை என விமர்சனங்கள் பலராலும் பேசப்பட்டு வருகின்றன.

அது ஒரு வகையில் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தாலும் பிரேரணைகள் நிறைவேற்றுவதில் பல வகைகள் இருப்பதை அனைவரும் தெரிந்து கொள்ளவேண்டும்.

பல்வேறு பிரேரணைகள் சபையில் சமர்ப்பிக்கப்படுகின்றன. ஆனால் சில பிரேரணைகள் தான் தீர்மானங்களாக நிறைவேற்றப்படுகின்றன.

வடமாகாண சபையில் இதுவரை நடைபெற்ற 28 அமர்வுகளில் 188 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இத்தீர்மானங்கள், வடமாகாணத்துக்குள் நிறைவேற்றப்பட வேண்டிய தீர்மானங்களாகவும் மத்திய அரசுக்கு தெரிவிக்க வேண்டிய தீர்மானங்களாகவும் சர்வதேசத்திற்கு அனுப்ப வேண்டிய தீர்மானங்களாகவும் வகைப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றில் வடமாகாணத்தில் செயற்படுத்தக்கூடிய தீர்மானங்கள் குறித்து தற்போது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகின்றன. மத்திய அரசுக்குதெரிவிக்க வேண்டிய தீர்மானங்கள் உரிய இடங்களுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

ஆனால் அவை நிறைவேற்றப்படும் என்று எதிர்பார்க்கமுடியாது. அவை வடமாகாணத்தில் உள்ள குறைபாடுகள், பிரச்சினைகளை தெரிவிப்பதாக இருக்கும். மத்திய அரசுக்கு இதை தெரிவிப்பது எமது கடமையாக இருப்பதால் அவற்றை தீர்மானங்களாக கொண்டுவந்து நிறைவேற்றுவதால் எமது நோக்கம் நிறைவேறுகின்றது. இது ஒரு பதிவாகவும் அமைகிறது. அடுத்ததாக சர்வதேசத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள தீர்மானங்கள் இவை பெரிதாக பேசப்பட்ட பிரேரணைகள் எமது உணர்வுகளை வெளிக்காட்டக்கூடியதாகவும் வெளிநாட்டு உள்நாட்டு பத்திரிகைகளை திருப்திப்படுத்துவதற்கான பிரேரணைகளாகவும் இருக்கின்றன. இவற்றை தீர்மானமாக கொண்டு வந்து சர்வதேசத்திடம் உடனடியான தீர்வை எதிர்பார்க்க முடியாது. ஆனால் எமது உணர்வுகளை, வரலாறுகளை பதியக்கூடிய ஒரு சந்தர்ப்பமாக இருக்கின்றது. இவ்வாறு தீர்மானங்களில் வித்தியாசமான பல பார்வைகள் இருக்கின்றன.

வடமாகாண சபையில் பிரேரணைகளை கொண்டு வருபவர்கள் உண்மையானதும் நடைமுறைப்படுத்தக்கூடியதும் சாத்தியப்படக் கூடியதுமானதும் உணர்வுகளை வெளிப்படுத்தக் கூடியதுமான பிரேரணைகளை சுருக்கமாக கொண்டு வரும் போது அவற்றை தீர்மானங்களாக நிறைவேற்றி நடைமுறைப்படுத்த முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)




# போக்குவரத்து பிரச்சினையைத் தீர்க்க யாழ்ப்பாணத்தில் 13பேர் கொண்டகுழு

## அமைச்சர் டெனீஸ்வரன் நடவடிக்கை

யாழ். மாவட்டத்திலுள்ள இலங்கை போக்குவரத்து துறையினருக்கும் தனியார் போக்குவரத்து துறையினருக்கும் இடையில் உள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு 13 பேர் கொண்ட குழு ஒன்றுநியமிக்கப்பட்டுள்ளதாக வடமாகாண போக்குவரத்து அமைச்சர் பா. டெனீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வடமாகாண போக்குவரத்து அமைச்சர், யாழ். மாவட்ட அரச அதிபர், இலங்கை போக்குவரத்து சபை, தனியார் போக்குவரத்து சபையினருக்கும் இடையில் கலந்துரையாடல் ஒன்று நேற்று யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது. இக் கலந்துரையாடல் தொடர்பாக அவரை தொடர்பு கொண்டு கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கை போக்குவரத்து சபை மற்றும் தனியார் போக்குவரத்து துறையினருக்கும் இடையில் போக்குவரத்து நேர அட்டவ [illegible] சேவை களை மேற்கொள்வதனால் பிரச்சினைகள் ஏற்பட்டு மக்களுக்கு பாதிப்பு ஏற்படுகின்றது.

இந்தப் போக்குவரத்து பிரச்சினை தீர்ப்பதற்காக இரு பிரிவினருக்கும் இடையேயான கலந்துரையாடல் ஒன்றினை 2 ஆம் மாதம் 25 ஆம் திகதி மன்னார் மாவட்டச் செயலகத்தில் நடத்தியிருந்தேன்.

இரண்டாவது கலந்துரையாடலை யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று நடத்தியிருந்தேன். யாழ். மாவட்டத்தில் உள்ள இ.போ.ச. தனியாருக்கு இடையிலான போக்குவரத்து பிரச்சினை தொடர்பாக என்னிடம் எவரும் கலந்துரையாடவில்லை. பிரச்சினைகளை பேசித் தீர்க்காமல் பணிப்புறக்கணிப்பு செய்ய வேண்டாம் என அவர்களிடம் நான் கோரிக்கை விடுத்துள்ளேன்.

அவர்களுடன் மேற்கொண்ட கலந்துரையாடலை அடுத்து அனைவரின் சம்மதத்துடனும் தனியார் மாவட்ட சங்க உறுப்பினர், இலங்கை போக்குவரத்து சபை உறுப்பினர், தூர சேவை சங்கத்தினர், மாவட்ட செயலக கணக்காளர், மாகாண சபை உத்தியோகத்தர் என 13 பேர் கொண்ட குழுவொன்றை நியமித்துள்ளோம்.

இவர்கள் இரு பகுதியினருக்கும் சாதகமான ஏனைய மாவட்டங்களில் உள்ளது போன்ற நேர அட்டவணையை இரண்டு கிழமைகளுக்குள் தயாரித்து என்னிடம் சமர்ப்பிக்குமாறு முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு வடக்கு மாகாணத்தில் உள்ள 5 மாவட்டங்களிலும் முறையான நேர அட்டவணையை தயாரித்து 5 மாவட்ட அரச அதிபர்களிடம் போக்குவரத்துத்துறை சார்ந்த அதிகாரிகளுடன் கலந்துரையாடலை மேற்கொண்டு பரிசீலனை செய்து தனியார் போக்குவரத்துத் துறையினருக்கு 60 வீதம் எனவும் இலங்கை போக்குவரத்து சபையினருக்கு 40 வீதம் என்ற திட்டத்தின்படி நேர அட்டவணை வழங்கப்படும்.

இந்த இறுதி முடிவின் படி போக்குவரத்து சேவைகள் நடைபெற வேண்டும். அதை மீறி நடப்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-9)

# கலாசார விழா

(யாழ்ப்பாணம்)

நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தின் மாதாந்த கலாசார விழா நாளை மறுதினம் 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப.4.30 மணி தொடக்கம் இரவு 7 மணி வரை மன்றக் கலா மண்டபத்தில் கவிஞர் சோ.பத்மநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் இசையரங்கம் மற்றும் ஓராள் அரங்க ஆற்றுகை நிகழ்வுகள் என்பன இடம்பெறவுள்ளன. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுத்தேர்தல் 2016 ஏப்ரலில்



## தேர்தல்கள் ஆணையர் கருத்து

(கொழும்பு)

**எதிர்வரும் பொதுத்தேர்தல் பொது வாக பார்த்தால் 2016ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தான் இடம்பெற வேண்டும் என தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரி வித்துள்ளார்.**

எப்படியிருப்பினும் பொதுத் தேர்தல் ஒன்று நடத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்தால் அதற்காக தேர்தல் அலுவலக அதிகாரிகள் ஆயத்தமாகவே உள்ளதாக தேர்தல் ஆணையாளர் சிங்கள செய்தி சேவை ஒன்றிற்கு தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தின் காலம் நான்கரை வருடம் நிறைவடைந்து விட்டதன் பின்னர் பாராளுமன்றத்தை கலைத்து விடும் அதிகாரம் ஜனாதிபதியிடம் உள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதற்கமைய தற்போது இடம் பெறுகின்ற பாராளுமன்றத்தின் நான்கரை வருடம் நிறை வடைந்துள்ளதனால் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் பாராளுமன்றத்தை கலைப்பதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரம் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை பொது மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிக்கமைய விரைவில் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என ஐக்கிய தேசிய கட்சி தெரிவிப்பதாகவும் தேர்தல்கள் ஆணையாளர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பிரதேச செயலக சங்கமும் பகிரங்க சேவைகள் ஓய்வூதியர் நம்பிக்கை நிதியமும் இணைந்து நடத்தும் வருடாந்த பொதுக்கூட்டம் நாளை 9 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் அகவொளி, குடும்ப வளத்துணை நிலையத்தில் தலைவர் வி.ஸ்ரீசக்திவேல் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரச அதிபர் நா. வேதநாயகன், சிறப்பு விருந்தினராக யாழ்.பிரதேச செயலாளர் திருமதி. சுகுணரதி தெய்வேந்திரம், யாழ். பிரதேச செயலக கணக்காளர் திருமதி.த.தவமன்னனும் மற்றும் கௌரவ விருந்தினராக யாழ்.பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் ஏ.சத்தியமூர்த்தி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-7)

# இன்று சர்வதேச செஞ்சிலுவை தினம்

ஹென்றி டுனாஉட்டினால் ஆரம்பிக்கப்பட்ட மனிதாபிமான தொண்டர் நிறுவனம் செஞ்சிலுவைச் சங்கமாகும். ஹென்றி டுனான்ட் பிறந்த தினமான மே 8ஆம் திகதி சர்வதேச செஞ்சிலுவை தினமாக பிரகடனப்படுத்தப்பட்டு கொண்டாடப்படுகின்றது.

செஞ்சிலுவைச் சங்கத்தின 7 கொள்கைகள்

மனிதாபிமானம்
பாரபட்சமின்மை
சுயாதீனம்
ஒருமைப்பாடு
நடுநிலமை
தொண்டர் சேவை
சர்வதேசமயம்

ஜெனீவாவில் தலைமையகமாக செயற்படும் இவ் அமைப்பு 191 நாடுகளில் மனித நேயத்தையும், சுய கௌரவத்தையும் பாதுகாக்கின்ற ஓர் அமைப்பாக செயற்பட்டுவருகின்றது. சொல்பரினா என்ற இடத்தில் ஏற்பட்ட யுத்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களை கண்ணுற்ற ஹென்றி டுனான்ட் மருத்துவ சேவைகளையும், உயிர் பாதுகாப்பு சேவைகளையும், வழங்கிய துடன், 40 ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்களின் உயிரைப் பாதுகாத்து உடல்களை உறவினர்களிடம் ஒப்படைத்தார். இந்நினைவில் இருந்து மீளாத ஹென்றி டுனான்ட் 1862இல் சொல்பரினா நினைவுகள் என்ற புத்தகத்தை வெளியிட்டு சர்வதேச ரீதியாக இவ் அமைப்பின் அவசியத்தை உலகிற்கு உணர்த்தினார். 1863இல் வேறு நால்வரை இணைத்து உலகளாவிய, சர்வதேச சங்கத்தை ஆரம்பித்தார்.

இவர் முக்கியமாக தொண்டர்கள் சர்வதேச சங்கத்துக்கு இணைக்கப்பட வேண்டும் என்ற காரணத்துக்காக 1864இல் பல்வேறு சங்கங்களையும், இராஜ தந்திரிகளையும் இணைத்து முதலாவது ஜெனீவா சாசனத்தை உருவாக்கினார். இதுதான் இன்று சர்வதேச ரீதியில் அங்கீகாரம் பெற்ற ஓர் தொண்டர் அமைப்பாக உருவாவதற்கு காரணமாகியது.

செஞ்சிலுவைச் சங்கம் வெள்ளைப் பின்னணியில் சிவப்பு சிலுவையாக உருவாக்கப்பட்டதாகும். இது ஹென்றி டுனான்ட் பிறந்த சுவிஸ் நாட்டின் தேசியக் கொடியாகிய வெள்ளை சிலுவையுடன் சிவப்பு பின்னணியை மாற்றி அமைத்ததாகும். இதுதான் செஞ்சிலுவைச் சங்கத்தின் சின்னமாக உலகம் முழுவதும் பயன்படுத்தப்படுகின்றது.

செஞ்சிலுவைச் சங்கமானது உலகளாவிய ரீதியில் செயற்படும் ஓர் அமைப்பாகும். இது செஞ்சிலுவைச் சங்கம், செம்பிறைச்சங்கம் என்ற தேசிய அடிப்படையில் செயற்படுவதுடன், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் (IFRC) சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக்குழு (ICRC) என உலகில் பெரும்பாலான பகுதிகளில் செயற்பட்டு வருகின்றது. உலகில் ஏற்படக்கூடிய அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மனித சமுதாயத்திற்கு துன்பங்களை துடைத்து, நலிவுற்றிருக்கும் மக்களுக்கு உடன் நிவாரணங்களும், மாற்று வழிமுறைகளை கொண்ட உதவிகளையும், வழங்கி வருகின்றது. இயற்கை அனர்த்தத்தால் மட்டுமன்றி ஆயுதப் போராட்டம் நடைபெறும் காலங்களிலும், அனர்த்த வேளைகளிலும், மக்களுக்கான மனிதாபிமான செயற்பாட்டினை செய்து வருகின்ற ஓர் அமைப்பாகும். தேசிய சங்கங்கள் அந்நாட்டு நிர்வாக எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் நடைபெறும் அனர்த்தங்களுக்கு முகம் கொடுத்து அப்பிரதேசத்தினருக்கு மனிதாபிமான செயற்பாட்டை நல்கி வருகின்றது.

செஞ்சிலுவைச் சங்க குழுவும், மற்றும் செம்பிறைச் சங்க சம்மேளனமும் உலகளாவிய ரீதியில் தனது மனிதாபிமான சேவைகளை நேரடியாகவும், தேசிய சங்கம் ஊடாகவும், செய்து வருகின்றன. இவ்வமைப்பானது தனது சேவையை நல்குவதால் மக்கள் மத்தியில் புது வாழ்வினை ஏற்படுத்துவதுடன் மனிதாபிமான செயற்பாடுகளை செய்து வருகின்றது.

செஞ்சிலுவைச் சங்க யாப்பானது உன்னதமான குறிக்கோளையும், கோட்பாட்டினையும் கொண்டதாகும். இதனால் தான் சர்வதேச மட்டத்தில் நிலைத்து நிற்பதற்கு ஏதுவாக அமைந்துள்ளது. சர்வ தேச சங்கங்களும், தேசிய சங்காங் களும், இக் கோட்பாட்டினை தேசிய ரீதியாகவும், சர்வதேச ரீதியாகவும் செயற படுத்தி வருகின்றன.




குடிநீருக்கான பொதுவசதி

இயற்கையால் ஏற்படக்கூடிய பூமி அதிர்ச்சி, சுனாமி, சூறாவளி, வெள்ளப்பெருக்கு, வறட்சி, மண்சரிவு, போன்றவற்றால் ஏற்படக்கூடிய அனர்த்தங்களுக்கு முகம் கொடுத்து அதில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உயிர் காப்பு சேவைகளையும், நிவாரண உதவிகளையும், செய்து வருகின்ற மனிதாபிமான தொண்டர் அமைப்பே செஞ்சிலுவைச் சங்கமாகும். அத்துடன் யுத்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு [illegible] வசதிகள், நிவாரணங்கள் போன்ற உதவிகளை வழங்கி வருகின்றது.

1936ஆம் ஆண்டு இலங்கையில் பிரித்தானிய கிளையாக இயங்கிய சங்கம் 1948ஆம் ஆண்டு சுதந்திரத்திற்கு பின் இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் என இயங்கியது. 1972ஆம் ஆண்டு இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் ஸ்ரீலங்கா குடியரசாக மாறியதுடன் ஸ்ரீலங்கா செஞ்சிலுவைச் சங்கம் என செயற்படத் தொடங்கியது.

இலங்கையில் 25 மாவட்டங்களிலும் 25 கிளைகள் செயற்பட்டு வருகின்றன. இவற்றுள் யாழ்.மாவட்டக் கிளையும் ஒன்றாகும். 1958 ஆம ஆண்டு யாழ்ப்பாணத்தில் இளைஞர் மத்தியிலும், பாடசாலை மாணவர் மத்தியிலும், உருவாக்கப்பட்ட இச் செஞ்சிலுவைச் சங்கம் 1980 ஆம் ஆண்டிற்கு பின் சிறந்த நிர்வாக அமைப்புடன் உருவாக்கப்பட்டது.

யாழ்ப்பாணச் செஞ்சிலுவைச் சங்கம் யாழ்.மாவட்டத்தில் நடமாடும் சேவை, மருத்துவ சேவை, இரத்ததானம், நிவாரணப்பணி வழங்குவதுடன் மக்களுக்கு தேவை ஏற்படும் போது அதற்கேற்ப தனது சேவையினை விரிவுபடுத்துகின்றது. 2009ஆம் ஆண்டுக்கு முன்னைய யுத்தகாலத்தில் சிரமதானம், இரத்ததானம், நடமாடும் மருத்துவ சேவை என்பனவற்றை செய்ததுடன் 24 மணித்தியால அம்புலன்ஸ் சேவையை செய்து நோய் வாய்ப்பட்ட மக்களை வைத்தியசாலையில் அனுமதித்தது யாழ்ப்பாண மாவட்ட மக்களுக்கு என்றும் நீங்காத நினைவாகும்.

2009ஆம் ஆண்டு வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து கைதடியில் தற்காலிக முகாம்களில் தங்கி யிருநத மக்களுக்கு மருத்துவ சேவையை வழங்குதற்காக, யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்று அவர்களுக்கு வைத்திய உதவிகள் வழங்கப்பட்ட பின், அவர்களை முகாமிற்கு கொண்டு வந்து போக்குவரத்து சேவைகள் செஞ்சிலுவைச் சங்கத்தால் வழங்கப்பட்டதுடன், அவர்களுக்கு நடமாடும் மருத்துவ சேவைகள், நிவாரணப்பணிகள் என்பனவும் வழங்கியது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்க உதவியுடன் 2ஆயிரத்திற் கும் மேற்பட்ட வீடுகளை வடமராட் சிப் பிரிவில் அமைத்துக் கொடுத்ததுடன், மீளக்குடியேறிய மக்களுக்கு சுகாதார சேவைகளையும், நீர்வழங்கல் சேவைகளையும், பாடசாலைகளில் மலசலகூடங்களை அமைத்தல் போன்ற செயற்பாடுகளையும் வரமராட்சிப் பிரிவில் செயற்படுத்தியது. அண்மைக்காலத்தில் மீளக்குடியமர்ந்த தெல்லிப்பழை, கோப் பாய் ஆகிய பிரதேசங்களுக்கு மலசலகூடவசதிகளையும், குடிநீர் வசதிகளையும், 28இற்கு மேற்பட்ட கிணறுகளை புனரமைத்ததுடன் 8 குழாய் கிணறுகளையும் அமைத்துக் கொடுத்தது. இது தெல்லிப்பழைப் பிரதேசத்தில் IFRCயின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டது. மேலும் டெங்கு, சிக்கன்குனியா போன்ற நோய்கள் ஏற்படாமல் விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்துவதும், சுகாதாரக் கல்வியை மக்கள் மத்தியில் கொண்டு சென்றும அவர்கள் சுகாதாரமாக வாழ்வதற்கு விழிப்புணர்வை ஏற்படுத்துகின்றது.

மேலும், யாழ்.மாவட்டத்தில் பெரும்பாலான பிரதேசத்தில் இந்திய வீட்டுத்திட்டத்தை இலங்கை செஞ்சிலுவைச் சங்க IFRCயின் உதவியுடன் கோப்பாய, சங்கானை, நல்லூர், வேலணை, சண்டிலிப்பாய், சாவகச்சேரி, தெல்லிப்பழை, ஊர்காவற்றுறை, யாழ்ப்பாணம் ஆகிய பிரதேச செயலக பிரிவுகளில் 5ஆயிரத்திற்கும் மேற்பட்ட வீடுகளை தற்பொழுது அமைத்து வருகின்றது. இவர்களுக்கான வாழ்வாதாரத்தை வழங்குவதற்கான திட்டமும் செஞ்சிலுவைச்சங்கத்திடம் உண்டு.

எனவே செஞ்சிலுவைச் சங்கமானது சர்வதேச ரீதியிலும், தேசிய அடிப்படையிலும், இயற்கை மற்றும் செயற்கை அனர்த்தம் ஏற்படும் போது பாதிக்கப்பட்ட மக்களின் துன்பத்தையும், துயரத்தையும் துடைத்து அவர்களின் எதிர்காலத்திற்கான நம்பிக்கையை உருவாக்கும் ஓர் சர்வதேச அமைப்பாகும்.

**கு.பாலகிருஷ்ணன**
**தலைவர்,**
**இலங்கை**
**செஞ்சிலுவைச் சங்கம்,**
**யாழ்.கிளை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிராஞ்சிக் கிராமத்திற்கு

# தும்புத்தொழிற்சாலை அமைக்க மின்சாரத்தினை வழங்குங்கள்

### மக்கள் கோரிக்கை

பூநகரி பிரதேச செயலக பிரிவிலுள்ள கிராஞ்சி கிராமத்தில் மக்கள் மீள்குடியேறி 5 வருடங்கள் கடந்துள்ள நிலையில் தமக்கான மின்சாரம் இதுவரை வழங்கப்படவில்லை யெனவும் இதனால் கிளி/கிராஞ்சி அ.த.க. பாடசாலையில் கல்வி பயின்று வருகின்ற மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளும் பாதிக்கப்பட்டுள்ளதாக கிராஞ்சி கிராம மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

கிராஞ்சி கிராமத்தில் சுமார் 500 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் மீள்குடியேறியுள்ள நிலையில் தரம்-ஒன்று முதல் க.பொ.த.(சா/த) வரை சுமார் 400 மாணவர்களைக் கொண்ட கிளி/கிராஞ்சி அ.த.க பாடசாலையில் மின்சாரம் இன்மையால் பல்வேறு பாதிப்புக்களை மாணவர்கள் எதிர்கொண்டுள்ளனர்.

கிராமத்திற்கு மின்சாரத்தை வழங்கு வதற்குரிய மின்சார இணைப்பு வேலைகள் முடிவு பெற்று பல மாதங்கள் கடந்த நிலையில் இதுவரை மின்சாரம் வழங்கப்படவில்லை.

இக்கிராமத்தினைக் கடந்து அயல்கிராமங்களான வேரவில், வலைப்பாடு ஆகிய கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இக்கிராமத்தில் நூற்றுக்கணக்கான இளைஞர்,யுவதிகள், உழைப்பாளிகளை இழந்த பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் வேலையற்று உள்ள நிலையில் இவர்களுக்கு வேலை வாய்ப்புக்களை வழங்கக்கூடியதென்னந் தும்புத் தொழிற்சாலையொன்று அமைக்கக் கூடிய வாய்ப்புக்கள் இருக்கின்ற போதும் அதனை இயங்க வைப்பதற்கு மின்சாரம் வழங்கப்படாமையால் தொழிலை ஆரம்பிக்க முடியாத நிலை காணப்படுகின்றது.

எனவே கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர், கிளிநொச்சி மாவட்ட மின் அத்தியட்சகர் ஆகியோர் இவ்விடயத்தில் கவனம் செலுத்தி தமது கிராமத்திற்கு மின்சாரம் கிடைக்க ஆவன செய்ய வேண்டுமென பாதிக்கப் பட்டுள்ள கிராஞ்சி கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-15)

## காணிகள் கையளிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்

### மீள்குடியேற்ற அமைச்சர்

யாழ்ப்பாணம் பலாலி விமான நிலையத்தினை, புதிய அரசாங்கத்தின் திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யும் பணிகள் விரைவில் மேற்கொள்ளப்படும் என மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் தெரிவித்தார்.

இலங்கை மத்திய வங்கியின் கிளிநொச்சி பிராந்திய காரியாலயம் திறப்பு விழா நேற்று முன்தினம் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

100 நாட்கள் வேலைத்திட்டத்தின் முன்மொழியப்பட்ட வேலைத்திட்டங்கள் தொடர்ந்து முன்னெடுக்கப்படும். யாழ்ப்பாணம், மூதூர் ஆகிய பகுதிகளிலுள்ள மக்களின் காணிகள் மக்களிடம் கையளிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

100 நாட்கள் வேலைத்திட்டத்தில் கூறப்பட்டு, முடிக்கப்படாமல் இருக்கும் வேலைத் திட்டங்கள் தொடர்ந்து முன்னெடுக்கப்படும். அதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன என்றார். (2)



கிளிநொச்சி கந்தசுவாமி கோவில் பஞ்சதள இராஜகோபுர கும்பாபிஷேகம் அண்மையில் நடைபெற்ற போது...

## முல்லைத்தீவு மாவட்டத்தில் தேங்காய்களுக்கு தட்டுப்பாடு

(முள்ளியவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக தேங்காய்களுக்கு பலத்த தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

அத்துடன் தேங்காய்களின் விலைகளில் ஏற்றம் ஏற்பட்டுள்ளதாகவும் ஒரு தேங்காய் கடைகளில் 40 ரூபா முதல் 50 ரூபா வரையில் விற்பனை செய்யப்பட்டு வருவதாக பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

முல்லைத்தீவு மாவட்டத்தில் அளம்பில் வற்றாப்பளை, உடுப்புக்குளம், சிலாவத்தை, செம்மலை ஆகிய இடங்களில் தென்னந் தோட்டங்களில் தேங்காய்கள் நிறைந்து காணப்படுகின்ற போதிலும் தற்போது தேங்காய்களுக்கு தட்டுப்பாடு நிலவி வருவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள தென்னம் தோட்டங்களுக்கு பிற மாவட்டங்களில் இருந்து வாகனங்களில் வருகை தரும் மொத்த வியாபாரிகள் தென்னந்தோட்டங்களிலுள்ள இளந்தேங்காய்கள் உட்பட அனைத்துத் தேங்காய்களையும் கொள்வனவு செய்து வருகின்றனர்.

இதனால் தேங்காய்களுக்கு பலத்த தட்டுப்பாடு நிலவி வருவதுடன் ஒரு தேங்காய் 40 ரூபா முதல் 50 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டு வருவதாகவும் அறிய முடிகின்றது.

வற்றாப்பளை பொங்கல் எதிர்வரும் ஜூன் மாதம் முதலாம் திகதி நடைபெறவுள்ளது. இந்நிலையில் தேங்காய்க்கு அதிக தேவையுள்ளமையால் தேங்காயின் விலை மேலும் அதிகரிக்கப்படலாம் எனவும் தேங்காய்களுக்கு தட்டுப்பாடு ஏற்படலாம் எனவும் மக்கள் அச்சம் அடைந்துள்ளனர். (2-302)

## மின்னல் தாக்கி குடும்பஸ்தர் பலி

(கிளிநொச்சி)

வயலில் மாடுகளை மேய்த்துக் கொண்டிருந்த குடும்பஸ்தர் மின்னல் தாக்கி உயிரிழந்தார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை 4.30 மணியளவில் பூநகரி-முக்கொம்பன் 65 வீட்டுத்திட்டம் வயல் வெளிப்பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் நடராசா சுசிகுமார் (வயது-35) என்ற இருபிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவராவார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

பிரஸ்தாபநபர் சம்பவம் நடைபெற்ற தினம் வயல்வெளியில் மாடுகளை மேய்த்துக் கொண்டிருந்தபோது இடியுடன் கூடிய மழை பெய்தது.

இதனை அடுத்து ஏற்பட்ட மின்னலினால் தாக்கப்பட்டு அவர் உயிரிழந்தார். இவரது சடலம் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.(2-271-254)

வன்னி வலம்

## மின்சாரம் இன்று தடைப்படும்

உயர் அழுத்த மற் றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று வெள்ளிக் கிழமை காலை 8.30 மணி தொட க்கம் மாலை 5.30 மணிவரை மின்சாரம் தடைப்பட்டிருக்கும் என இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது.

கிளிநொச்சி முள்ளிவாய்க்கால், கரைச்சிக்குடியிருப்பு, வட்டுவா கல் கடற்படை முகாம் ஆகிய இடங் களிலும், வவுனியா பிரதேச த்தில் பட்டானிச்சூர், பட்டக்காடு பிரதேசம், வேப் பம் குளம், நெளுக் குளம், பம்மைமடு, மாமடு வில் இருந்து மகாகச் சக்கொடி யவரை, பொக வஸ்வேவ, சளலிங்கம, நமலகம, பிரம்பன்மடு, ஒமேகா லைன், தொழில்நுட்பக் கல்லூரி, வவுனியா பல்கலைக் கழகம் மற் றும் பல்கலைக்கழக விடுதி, CEC கல்லுடைக்கும் ஆலை ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்பட்டிருக்கும். (2-9)

## இலக்கத்தகடுகள் பொருத்தப்படாது பயணிக்கும் உந்துருளிகளை பொலிஸார் கட்டுப்படுத்த வேண்டும்

(கிளிநொச்சி)

அரச வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு உந்துருளிகளுக்கான இலக்கத்தகடுகள் வழங்கப்பட்டும் அவை பொருத்தப்படாது காணப்படுவதுடன் சில பிரதேசங்களில் சமூக விரோத செயற்பாடுகளுக்கு பயன்படுத்தப் படுவதாக பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் வழங்கப்பட்ட அனைத்து உந்துருளிகளுக்கும் உரிய [illegible] வனத்திற்கு இலக்கத்தகடுகள் கிடைக்கப் பெற்றுள்ளது.

இதனுடன் மோட்டார் சைக்கிள்களுக்கான காப்புறுதிப்பத்திரங்கள் யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் பெறுவதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இருப்பினும் வழங்கப்பட்ட உந்துருளிகளுக்கு இலக்கத்தகடுகள் பொருத்தப்படாது காணப்படுவதுடன் சமூகவிரோத செயற்பாடுகளுக்கும் பயன்படுத்தப்படுகின்றது.

அத்துடன் அரச வெளிக்கள உத்தியோகத்தர்கள் அல்லாதோர்களும் இவ்வுந்துருளிகளைப் பயன்படுத்துவதை அவதானிக்க முடிகின்றது.

எனவே இவ்விடயத்தில் வீதி போக்குவரத்து பொலிஸார் கவனம் செலுத்தி சட்ட விரோத உந்துருளி பயன்பாட்டை தடுக்கும் வகையிலான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-272)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளப்பற்றாக்குறைகளுடன் இயங்கும் மாங்குளம் ஆதார வைத்தியசாலை

(மல்லாவி)

**ஏ-9 வீதியிலுள்ள மாங்குளம் ஆதார வைத்தியசாலையானது பல்வேறு வளப்பற்றாக் குறைகளுடன் இயங்குவதால் அவசர சிகிச்சை தொடக்கம் மகப்பேறுவரை கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை அல்லது வவுனியா மாவட்ட வைத்தியசாலை ஆகியவற்றுக்கு நோயாளர்களை மாற்றுகின்ற சூழ்நிலை காணப்படுவதால் வடக்கு மாகாண சபையின் சுகாதார அமைச்சர் இவ்விடயத்தில் கவனமெடுத்து குறைபாடுகளை நிவர்த்தி செய்து தரவேண்டும் என பாதிக்கப்பட்டுள்ள பிரதேச மக்கள் சமூக ஆர்வலர்கள் ஆகியோர் கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளனர்.**

இது தொடர்பில் தெரியவருவதாவது, ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மாங்குளம் ஆதார வைத்தியசாலையானது ஒலுமடு, பெரிய புளியங்குளம், அம்பகாமம், புலுமச்சி நாதகுளம், மாங்குளம், கரிப்பட்ட முறிப்பு, மேளிவனம், கற்கிடங்கு, பனிக்கன்குளம், கிழவன் குளம், வன்னி விளான் குளம், பாலைப்பாணி, மன்னகுளம் எனப் பல கிராமங்களில் வசிக்கின்ற பல ஆயிரக்கணக்கான குடும்பங்களுக்கு வைத்திய சேவையை வழங்கி வருகின்றது.

ஏ-9 வீதியில் பயணிக்கும் வாகனங்கள் விபத்திற்குள்ளாகும்போது காயமடைகின்றவர்களுக்கு அவசர சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றது.

இவ்வாறான ஓர் நிலையில் இவ் வைத்தியசாலையில் பல்வேறுபட்ட குறைபாடுகள் காணப்படுகின்றன.

ஆண்நோயாளர் விடுதி, பெண் நோயாளர் விடுதி, சிறுவர்களுக்கான சிகிச்சை விடுதி, மகப்பேற்று விடுதி என்பன தனித்தனியாக அமைக்கப்படாது இருப்பதுடன் ஒரு சிறிய கட்டடத்தில் மேற்படி நோயாளர்களுக்கான சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை சடலங்களைப் பாதுகாக்கும் பிரேத அறை அமைக்கப் படாதுள்ளது.

தற்போது மின்பிறப்பாக்கி வைக்கப்பட்டுள்ள கொட்டகையின் ஒரு பகுதியில் சடலங்கள் வைக்கப்படுகின்றன.

வெயிலிலும் மழையிலும் சடலங்கள் இருப்பதைக் காணக்கூடியதாக இருப்பதாக நோயாளர்களால் சுட்டிக்காட்டப்படுகின்றது.

சமையல் கூடத்தைப் பொறுத்த வரையில் கட்டடம் இடிந்து விழும் அபாயநிலையை எட்டியுள்ளது.

சமையல் கூடத்தை சுற்றியுள்ள பகுதிகள் செடிகளாலும் புற்களாலும் நிறைந்து காணப்படுகின்றது.

திடீர் விபத்துகளுக்குள்ளாகின்றவர்கள், மகப்பேற்றுத்தாய்மார், வயோதிபர்கள் உட்பட மாற்றுத் திறனாளிகள் சிகிச்சைக்காக வருகை தருகின்றபோது அவர்களை வைத்தியர்களிடம் அழைத்துச் செல்வதற்கும் பின்னர் விடுதிகளில் தங்கவைக்கக் கொண்டு செல்வதற்கும் சக்கர நாற்காலிகள், நோயாளர்களை படுக்கவைத்து தள்ளிச் செல்லும் தள்ளு வண்டில்கள், நோயாளர்கள் காவு வண்டிகள் என்பன இல்லாது பணியாளர்களும் நோயாளர்களும் பல்வேறு அவல நிலைக்குள்ளாகின்றனர். காயப்பட்டவர்களுக்கு மருந்து கட்டுவதற்குரிய சிகிச்சை அறைகள் இல்லாது இருப்பதால் வெளி நோயாளர் பகுதியின் ஒரு பகுதி திரை சீலையினால் மறைக்கப்பட்டு சிகிச்சை வழங்கப்படுகின்றது.

இதன்போது பெண் நோயாளர்கள் அவலநிலை அடைகின்றனர்.

இதேவேளை வைத்தியசாலை வளாகத்தை சுற்றி பற்றைச் செடிகளும் புற்களும் நிறைந்து காணப்படுகின்றது.

இவற்றை துப்புரவு செய்வதற்கு உபகரணங்கள் இன்றி காணப்படுவதுடன் குப்பை வண்டில்கள் உட்பட புல்வெட்டும் இயந்திரம் கூட இல்லாத நிலை காணப்படுகின்றது.

இரண்டு ஆண் சிற்றூழியர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளநிலையில் இரவுக்கடமைகளில் இவர்கள் ஈடுபடுகின்ற போது பகல் வேளைகளில் ஆண் நோயாளர்களை சிகிச்சைக்காக அழைத்து செல்வது முதல் ஏனைய விடுதிக் கடமைகளை நிறைவேற்றுவதற்கு எவரும் இல்லாத நிலையில் பெண் சிற்றூழியர்கள் ஆண் நோயாளர்களுக்கான பணிகளை நிறைவேற்ற வேண்டிய நிலை காணப்படுகிள்றது.

ஐயங்கன்குளம் கிராமிய வைத்தியசாலையில் மகப்பேற்றுக்காக அனுமதிக்கப்படுகின்ற தாய்மார்களையும் மாங்குளம் ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு வரவேண்டிய நிலை காணப்படுகின்ற போது குழந்தைப் பிரசவத்திற்குரிய அடிப்படை வசதிகள் இவ்வைத்தியசாலையில் இதுவரை ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை

இதனால் அவர்கள் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கே கொண்டு செல்லப்படுகின்றனர்.

எனவே பல்வேறுபட்ட அடிப் படை வசதிகளின்றி இயங்கி வருகின்ற மாங்குளம் ஆதார வைத்தியசாலையை முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள ஏனைய ஆதார வைத்திய சாலைகளுக்குள்ள வசதிகளைப் போன்று ஏற்படுத்தி தர வேண்டுமென இப்பிரதேச மக்களும் சமூக ஆர்வ லர்களும் வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் பி.சத்தியலிங்கத்திடம் கோரிக்கை ஒன்றை முன் வைத்துள்ளனர். (2-15)

## 15ஆயிரம் கிராமங்களை அபிவிருத்தி செய்தல் வேலைத்திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டல் ஆரம்பித்து வைத்தார் மகளிர் விவகார பிரதி அமைச்சர்

(கிளிநொச்சி-1)

வீடமைப்பு அபிவிருத்தி அமைச்சின் நிதியொதுக்கீட்டில் 100நாள் வேலைத்திட்டத்தில் உள்வாங்கப்பட்ட ''வீட்டுக்கு வீடு கிராமத்திற்கு கிராமம்'' எனும் தொனிப்பொருளில் நாடளாவிய ரீதியில் 15ஆயிரம் கிராமங்களை அபிவிருத்தி செய்தல் எனும் திட்டத்தில் கிளிநொச்சி மாவட்டத்தில் நான்கு பிரதேச செயலக பிரிவுகளிலும் உள்ள 95கிராமங்களிலும் தலா ஒரு மில்லியன் வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதற்கான அடிக்கல் நாட்டி வைக்கும் ஆரம்ப நிகழ்வு அண்மையில் நான்கு பிரதேசசெயலக பிரிவுகளிலும் நடைபெற்றது. மகளிர் விவகார பிரதி அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் அடிக்கல்லை நாட்டி வைத்தார்.



அந்த வகையில் கரைச்சி பிரதேச செயலக பிரிவில் ஆனந்தபுரம் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் கண்டாவளை பிரதேச செயலக பிரிவிலுள்ள உமையாள்புரம் கிராமத்தில் முன்பள்ளி அமைத்தலுக்கும் பூநகரி பிரதேச செயலக பிரிவில் கறுக்காய்த்தீவு கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பித்தலுக்கும் பளை பிரதேச செயலக பிரிவில் இத்தாவில் கிராமத்தில் சனசமூக நிலையம் அமைத்தலுக்கும் அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டன. (2-277)

## மாணவர்கள் தளபாடங்களின்றி தரையில் அமர்ந்து கல்வி கற்று வருகின்றனர்

### கிளி.வலயக் கல்விப் பணிப்பாளருக்கு பெற்றோர் மகஜர்

(கிளிநொச்சி)

கிளி/சிவபாத கலையகம் அ.த.க. பாடசாலையில் தரம்-3இல் கல்வி பயின்று வருகின்ற மாணவர்கள் உட்பட பெரும்பாலான மாணவர்கள் தளபாடமின்றி தரையில் அமர்ந்து சிரமத்தின் மத்தியில் கல்வி கற்று வருவதாக பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த பாடசாலையில் கல்வி பயின்று வருகின்ற மாணவர்களுக்கு போதுமான தளபாடங்களை வழங்கி அவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவுமாறு கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளருக்கு பெற்றோர்கள், நலன் விரும்பிகள், பொன்னகர் கிராம மக்கள் ஒன்றிணைந்து மகஜர் ஒன்றை வழங்கியுள்ளனர்.

எனவே உரியவர்கள் அக்கறை கொண்டு பாடசாலைக்கு தள பாடங்களை வழங்கியுதவ வேண்டுமென பெற்றோர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-254)




## வடக்கு மாகாணத்திலுள்ள காடுகளை தேசிய சரணாலயங்களாக மாற்றத் திட்டம்

வடக்கு மாகாணத்திலுள்ள சுண்டிக்குளம், மடு மற்றும் நெடுந்தீவு காடுகளை தேசிய சரணாலயங்களாக மாற்றுவதற்கு வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் திட்டமிட்டுள்ளது.

தேசிய சரணாலயங்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் திட்டத்திற்கமையவே வடக்கில் இது நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதற்குரிய சட்ட நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதாக வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் எச்.டி.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அத்துடன், வடக்கு மாகாண காடுகளில் காணப்படுகின்ற வன விலங்குகளை பாதுகாக்கின்ற புதிய சாரணாலயங்கள் உருவாக்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

பருவகாலங்களில் இந்தியாவில் இருந்து வரும் பறவைகள் வடக்கு மாகாண காடுகளில் தங்கும் இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள அதேவேளை மேலும் புதிய சரணாலயங்களை உருவாக்குவதன்மூலம் சுற்றுலாத்துறையின் ஊடாக மக்களின் பொருளாதாரத்தையும் மேம்படுத்த முடியும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (2-281)

## கனகாம்பிகை அம்மன் ஆலயத்தை பார்வையிட்டார் மீள்குடியேற்ற அமைச்சர்

(கிளிநொச்சி )

கிளிநொச்சி இரணைமடு கனகாம்பிகை அம்மன் ஆலயத்தின் கிழக்கு பகுதி வீதி இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் உள்ளமை தொடர்பில் கோவில் நிர்வாகத்தினர் பாராளுமன்ற உறுப்பினா மு.சந்திரகுமாரின் ஊடாக மீள்குடியேற்ற அமைச்சர் சுவாமிநாதனின் கவனத்திற்கு கொண்டு சென்றனர்.



குறித்த கோவில் பகுதிக்கு நேற்று முன்தினம் விஜயம் மேற்கொண்ட அமைச்சர் குழுவினர் இராணுவத்தினரின் பாவனையில் உள்ள கோவிலின் கிழக்கு வீதியை பார்வையிட்டனர். பார்வையிட்ட சந்தர்ப்பத்தில் கோவில் நிர்வாகத்தினர் கோவிலின் முக்கியம் வாய்ந்த குறித்த பகுதி தொடர்பில் அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வந்தனர்.

இடத்தினை பார்வையிட்ட அமைச்சர் குறித்த பகுதி கோவிலிற்குமிக முக்கியம் வாய்ந்த பகுதி எனவும் குறித்த பகுதியை கோவில் நிர்வாகத்தினரின் பொறுப்பில் விடுவதற்கான நடவடிக்கைகளை தான் முன்னெடுப்பதாக கருத்து தெரிவித்தார்.

பரவிப்பாஞ்சான் பகுதி தொடர்பில் வினவிய போது குறித்த பகுதியை பார்வையிட்டதன்பின்பே கருத்து கூற முடியும் எனத் தெரிவித்தார். (2-281)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சுதந்திரம்

...பிறந்த தினத்தை விமர்சையாகக் கொண்டாட விரும்பிய ரகு, அன்றைய தினம் தன் நண்பர்களை வீட்டுக்கு அழைத்தான்.

கூண்டில் பல சரிகைக் காகிதங்களையும், வண்ணப் பூக்களையும் பொருத்தி அழகு செய்தான்.

கிளி உண்ண பல விதமான பழங்களை ஏற்பாடு செய்தான்.



நண்பர்கள் புடைசூழ பிறந்த தின விழா நன்கு நடந்து முடிந்தது.

ஆனால் விழாவின் முக்கிய விருந்தாளியான கிளி மட்டும் சோகமாக இருந்தது.

கிளியின் சோகத்திற்குக் காரணமறியாத ரகு அதைப்பற்றி சிந்தித்துக் கொண்டே நண்பகலிலேயே தூங்கிப் போனான்.

"ரகு! நீ யாருக்காக இந்த பிறந்த தின விழா ஏற்பாடு செய்தாய்? எதற்காக செய்தாய்?" என்று கிளி அவன் கனவில் தோன்றி கேள்வி கேட்டது.

"உனக்காகத்தான்" என்றான் ரகு.

"அதன் நோக்கம் என்ன? உன்னுடைய மகிழ்ச்சிக்காகவா அல்லது என்னுடைய மகிழ்ச்சிக்காகவா? ரகு!

ஏனெனில் நீ எனக்கு அளித்த வாக்குறுதியை மறந்து விட்டாய்!

என்னை சுதந்திரமாக வானில் பறக்க விடாமல் பிறந்த நாளன்று என்னைக் கூண்டில் அடைத்து வைத்துவிட்டாய்.

கூண்டில் அடைபட்ட நான் எவ்வாறு மகிழ்ச்சியாக இருக்க முடியும்?" என்று கேட்டது.

அப்போது கனவு கலைந்தது.

தடுக்கிட்டு எழுந்த ரகு நேராகக் கூண்டை நோக்கிச் சென்றான்.

நடுங்கும் கரங்களுடன் கூண்டின் கதவைத் திறந்தான்.

உடனே, கிளி கூண்டை விட்டு வெளியே வந்தது.

தன் சிறகுகளைப் படபடவென அடித்துக் கொண்டு உற்சாகத்துடன் பறந்து சென்று மரத்தில் அமர்ந்தது.

தான் பெற்ற சுதந்திரத்தைக் கொண்டாட மட்டற்ற மகிழ்ச்சியுடன் குரலெடுத்துக் கத்த, பல கிளிகள் பறந்து அங்கு வந்து சேர்ந்தன.

அவை அனைத்தும் தங்கள் தோழனின் உற்சாகத்தில் பங்கேற்றன.

கிளிகளின் குரல் கேட்டு ரகுவின் பெற்றோரும், நண்பர்களும் அங்கு வந்தனர்.

ரகுவின் தாய் அவனை நோக்கி, "ரகு! இப்போது நீ செய்ததுதான் மிகச் சரியானது.

உன்னுடைய செல்லக் கிளிக்கு நீ அளித்த மிகச் சிறந்த பிறந்தநாள் பரிசு இதுதான்!

சுதந்திரம் பெற்ற கிளியின் முகத்தில் தெரியும் ஆனந்தத்தைப் பார்!

சுதந்திரம் நம் போன்ற மனிதர்களுக்கு மட்டுமல்ல, அனைத்து ஜீவராசிகளுக்கும் தேவை!

நம்முடைய கலாசாரமும் இதைத் தான் வலியுறுத்துகிறது.

ஒரு புறாவிற்காகத் தன் உயிரையே தர முன் வந்த சிபிச் சக்கரவர்த்தி போன்றவர்களின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி நடக்க வேண்டும்!" என்றாள்.

"ஆம்! என்றான் ரகு!

(முற்றும்)




- 1450 - இங்கிலாந்தில் கென்ட் நகரில் ஆறாம் ஹென்றி மன்னனுக்கெதிராக ஜாக் கேட் என்பவன் தலைமையில் கிளர்ச்சி இடம்பெற்றது.
- 1821 - கிரேக்க விடுதலைப் போர்: கிரேக்கர்கள் துருக்கியர்களை கிராவியா என்ற இடத்தில் இடம்பெற்ற போரில் தோற்கடித்தனர்.
- 1861 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: அமெரிக்க மாநிலங்களின் கூட்டமைப்பின் தலைநகராக வேர்ஜீனியாவின் ரிச்மண்ட் நகரம் தேர்ந்தெடுக்கப்பட்டது.
- 1886 - ஜோன் பெம்பர்ட்டன் கொக்கக் கோலா எனப் பின்னர் பெயரிடப்பட்ட மென்பானத்தைக் கண்டுபிடித்தார்.
- 1914 - பராமவுண்ட் பிக்சர்ஸ் நிறுவனம் ஆரம்பிக்கப் படடது.
- 1933 - மகாத்மா காந்தி ஹரிஜன் மக்களின் நலனுக்காக 21-நாட்கள் உண்ணாநோன்பை ஆரம்பித்தார்.
- 1942 - இரண்டாம் உலகப் போர்: கொக்கோஸ் தீவுகளில் நிலைகொண்டிருந்த பிரித்தானிய இலங்கை இராணுவப் பிரிவை சேர்ந்த இராணுவத்தினர் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். இக்கிளர்ச்சி அடக்கப்பட்டு மூவர் தூக்கிலிடப்பட்டனர்.
- 1945 - அல்ஜீரியாவின் சேட்டிஃப் என்ற இடத்தில் நூற்றுக்கணக்கான அல்ஜீரியர்கள் பிரெஞ்சுப் படைகளினால் கொல்லப்பட்டனர்.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனியப் படைகள் நிபந்தனையின்றி சரணடைந்தன.
- 1984 - லாஸ் ஏஞ்சலஸ் ஒலிம்பிக் விளையாட்டுக்களைப் பகிஷ்கரிக்கப்போவதாக சோவியத் ஒன்றியம் அறிவித்தது.
- 2007 - புதிய வட அயர்லாந்து உயர் சபை அமைக்கப்பட்டது.

### பிறப்புக்கள்

- 1828 - ஹென்றி டியுனண்ட், செஞ்சிலுவைச் சங்கத்தை நிறுவியவர் (இ. 1910)
- 1916 - சுவாமி சின்மயானந்தா, இந்திய ஆன்மிகவாதி (இ. 1993)

### இறப்புகள்

- 1947 - றொபேர்ட் ஹோர்விட்ஸ், மருத்துவத்துக்கான நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர்
- 1951 - மு. நல்லதம்பி, ஈழத்துப் புலவர்

### சிறப்பு நாள்

- உலக செஞ்சிலுவை தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



### உலக செஞ்சிலுவை மற்றும் செம்பிறை தினம்

உலக செஞ்சிலுவை மற்றும் செம்பிறை தினம் (International Red Cross and Red Crescent Day) மே 8 ஆம் திகதி அனைத்து நாடுகளிலும் கொண்டாடப்பட்டு வருகிறது.

முதலாவது நோபல் விருதைப் பெற்றவரும் செஞ்சிலுவைச் சங்கத்தின் ஆரம்ப கர்த்தாவுமான ஹென்றி டியூனண்ட் (Henry Dunant) அவர்களின் பிறந்த நாளான (மே 8, 1828) இந்நாள் 1948 ஆம் ஆண்டிலிருந்து சிறப்பு நாளாக அங்கீகரிக்கப்பட்டது.

முதலாம் உலகப் போரின் பின்னர் சமாதானத்துக்கான தேவை உணரப்பட்டது.

செக்கோஸ்லொவாக்கியாவில் சமாதானத்தை வலியுறுத்தி 1922 இல் ஈஸ்டர் திருநாளுக்காக மூன்று நாள் யுத்த நிறுத்தத்துக்கான வேண்டுகோள் விடப்பட்டது.

இதுவே பின்னர் செஞ்சிலுவை மற்றும் செம்பிறை நாளாக அனுசரிக்கத் தூண்டுதலாக அமைந்தது எனலாம்.

1934 ஆம் ஆண்டு டோக்கியோவில் இடம்பெற்ற செஞ்சிலுவைச் சங்கத்தினரின் 15ஆவது அனைத்துலக மாநாட்டில் இது கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

இருப்பினும் 1948 ஆம் ஆண்டிலேயே இந்நாளை செஞ்சிலுவைச் சங்கத்தை ஆரம்பித்தவரான ஹென்றி டியூனண்ட் அவர்களின் நினைவாக ஆண்டுதோறும் கொண்டாடும் தீர்மானம் எடுக்கப்பட்டது.

முதலில் இந்நாள் செஞ்சிலுவைச் சங்க தினம் என்றே அழைக்கப்பட்டது.

எனினும் பின்னர் பல மாற்றங்களுக்குள்ளாகி 1984 இல் இருந்து இந்நாள் உலக செஞ்சிலுவை மற்றும் செம்பிறை தினம் என அழைக்கப்படுகிறது.

# சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் வாழ்க்கை வரலாறு

'...கதை, நடிப்பு, பாட்டு என்று சகல அம்சங்களும் நன்றாக இருந்ததால், படம் இமாலய வெற்றி பெற்றது.

**கதை**

ஆட்டோக்காரன் மாணிக்கமாக அறிமுகமாகிறார், ரஜினி. தன் சித்தியிடமும், ஒரு தம்பி, 2 தங்கைகள் ஆகியோரிடமும் மிகுந்த பாசம் கொண்டிருக்கிறார். இந்த தம்பியும், தங்கைகளும் கூடப் பிறந்தவர்கள் இல்லையென்றாலும் அவர்கள் மீது உயிரையே வைத்திருக்கிறார்.

தந்தைக்கு கொடுத்த வாக்குறுதியின்படி, மூத்த தங்கைக்கு நல்ல இடத்தில் திருமணம் செய்து வைக்கிறார். தம்பிக்கு பொலீஸ் அதிகாரி வேலை வாங்கித் தருகிறார். கடைசி தங்கைக்கு அவள் விருப்பப்படி 'மெடிக்கல்' சீட் கிடைக்கிறது.

நக்மா ஒரு பணக்காரரின் (தேவன்) மகள். ஒருநாள் ஆட்டோவில் பயணம் செய்யும் நக்மா, ரஜினியின் நற்பண்புகளைக் கண்டு அவரைக் காதலிக்கிறார்.

ஆனந்தராஜ் தலைமையில் இயங்கும் ஒரு ரவுடிக் கூட்டத்திடம் சிக்கிக்கொள்ளும் தம்பியைக் காப்பாற்ற, ரவுடிகள் கொடுக்கும் அடிகளையெல்லாம் புத்தரைப்போல பொறுமையாக தாங்கிக்கொள்ளும் ரஜினி, தன் தங்கையை ரவுடி கடத்திச்செல்ல முயன்ற போது, சிங்கமாகச் சீறி, ரவுடிக் கூட்டத்தை பந்தாடுகிறார்.

'ஒரு சாதாரணமான மனிதனால் இத்தனை பேர்களை அடித்து துவம்சம் செய்ய முடியாது' என்று டாக்டர்கள் கூற, அண்ணன் மீது சந்தேகம் கொள்கிறான் பொலீஸ் தம்பி.

'நீங்க யாரு? மும்பையில் இருந்தபோது என்ன செய்துகிட்டு இருந்தீங்க?' என்று தம்பி கேள்விக்கணைகளால் துளைத்தெடுக்க,

ஆட்டோ மாணிக்கம் பற்றிய 'பிளாஷ் பேக்' விரிகிறது.

**ரகுவரனின் யமன்**

மும்பையில் மார்க் ஆண்டனி (ரகுவரன்) பெரிய தாதா. அவனிடம் வேலை பார்க்கும் விசுவாசி விஜயகுமாரின் மகன்தான் ரஜினி.

ஆண்டனியின் அட்டூழியங்களைக் கண்டு சகிக்காத ரஜினி, தன் உயிர் நண்பன் அன்வரின் மரணத்துக்கு பழி வாங்குவதாக சபதம் செய்துவிட்டு, ஆண்டனிக்கு எதிரான தாதாவாக மாறுகிறார்.

'மாணிக் பாட்ஷா'' என்பது இப்போது அவருடைய பெயர். பணக்காரர்களின் பணத்தை ஏழைகளுக்குப் பங்கிட்டுத் தருகிறார். இதனால் ஏழைகளின் கடவுளாக போற்றப்படுகிறார்.




ரஜினிக்கும், ஆண்டனிக்கும் தகராறு முற்றுகிறது. சமரசம் செய்து கொள்ள ஆண்டனி முன்வந்தும், ரஜினி சம்மதிக்கவில்லை.

இருதரப்புக்கும் மோதல் நடக்கும் தருணத்தில், ஆண்டனிக்கு விசுவாசிபோல் அதுவரை நடித்து வந்த தேவன், ஆண்டனியின் குடும்பத்தினரைக் கொன்றுவிட்டு, பணம் - நகைகளுடன் தப்பிவிடுகிறான். பழி, பாட்ஷா மீது விழுகிறது. ஆண்டனி, பொலீசாரிடம் பிடிபடுகிறான்.

சிறையில் இருந்து தப்பும் ஆண்டனி, தனக்கு துரோகம் செய்துவிட்டு, தன் குடும்பத்தை அழித்தவன் தேவன் என்பதை அறிந்து, அவனை சுட்டுக் கொல்கிறான். மாணிக்கத்துடன் மோதி அவன் குடும்பத்தையும் அழிக்க முயற்சி செய்கிறான்.

அவனை ரஜினி கொல்லப் போகும் போது, பொலீஸ் அதிகாரி அதைத் தடுத்து, 'பாட்ஷா ஏற்கனவே செத்துப்போய் விட்டான் நீ ஆட்டோக்காரன் மாணிக்கம்' என்று கூறி, ஆண்டனியை கைது செய்து, அழைத்துச் செல்கிறார்.


நக்மாவை கைப்பிடிக்கிறார், ரஜினி.

**மகத்தான வெற்றி**

வேகமும், விறுவிறுப்பும் கொண்ட இந்தப்படம், அனைத்து தரப்பினரையும் கவர்ந்து பிரமாண்டமான வெற்றியைப் பெற்றது. 'ஊட்டி மலை சிகரத்தில் இருந்த ரஜினியின் புகழ், இந்தப்படத்தின் மூலம் எவரெஸ்ட் உயரத்துக்கு உயர்ந்து விட்டது' என்று பத்திரிகைகள் எழுதின.

*(தொடரும்)*

# கருவாச்சி காவியம்



## வைரமுத்து-134

....ஒண்ணு ரெண்டு மூணு சொல்லி வந்ததுல இருவத்தி ஒம்போது வரைக்கும் ஆண்டவன் அருள் அவன் பக்கந்தான் இருந்துச்சு. முப்பது வந்தவுடன் கடவுளே அவனக் கைவிட்ருச்சு.

முப்பதுன்னு சொல்லத்தான் அவன் நெஞ்சு நெனைக்குது. ஆனா நுப்பதுன்னுதான் நாக்குல வருது.

நுப்பது இல்லடா முப்பது.

நுப்பது.

மு..மு...மு....சொல்லு.

மு...மு...மு...

வந்திருச்சு. இப்பச் சொல்லு.

மு...மு...மு... முப்பது

மு... மு....மு.... நுப்பது.

சில பொம்பளைக ஒழுங்காத்தான் தோச போடுவாக; பெரட்டிப் போடத் தெரியாமப் பிச்செடுத்துருவாக. அந்த மாதிரி இந்தப் பய எழுத்துல ஒழுங்கா இருக்கான் வார்த்தையில ஒலப்பிடுறானே!

அவன் பாவம் வச்சுக்கிட்டா வஞ்சகம் பண்றான்? வரல.

இன்னைக்கு ஒனக்காச்சு எனக்காச்சுடா மகனே. பாத்திருவோம். மனசுக்குள்ள வேட்டிய மடிச்சுக் கட்டி ஒரு மல்யுத்தத்துக்குத் தயாராயிட்டாரு -வாத்தியாரு.

இப்பச் சொல்றா மு...

மு....மு... முப்பது.

மு...மு...மு... நுப்பது.

என் முப்பத்தோரு வருச அனுபவத்தையும் இவன் வம்புக்கிழுக்கிறானே!

தோல உரிச்சுக்க. நாக்கத் துண்டா அறுத்துட்டுப்போயி விடிய விடிய வீட்ல வச்சுச் சொல்லிக்குடு. வரவே வராதுங்கிறான் பய. அவன் கண்ணுரெண்டும் கம்மாயாப்போச்சு.

பொத்திப்பொத்தி வச்சு[illegible]ந்த பொறுமை ஒடைஞ்சு மணி அடிக்கிற வரைக்கும் வேர்வையா ஒடுது வாத்தி அவன முட்டிக்கால் போட



யாருக்கு. கொதிக்கிற வெயி வச்சிட்டாரு.

[illegible] முழங்கால்ல முள்ளுத்

தச்சமாதிரி வலி. பள்ளிக்கூடத்துப் ப்யக நாப்பத்திரண்டு பேரும் கேவலமாப் பாக்கிறாங்களேங்கிற அவமானம். நம்ம நல்லதுக்குத்தான் வாத்தியாரு செஞ்சாருன்னு நெனைக்காம பழிவாங்குற எண்ணம் பதிபோட்டு உக்காந்திருச்சு அவன் மனசுல.

ஒவ்வொரு வகுப்பையும் ரெண்டுரெண்டு வருசமாத் தாண்டி வந்ததுல அஞ்சாவது முடிக்க முன்ன பாதினாலு வயசாகிப்போச்சு அழகுசிங்கத்துக்கு.

பதினாலு வயசுலயே முக்கா ஆம்பளைக்கும் முழு ஆம்பளைக்கும் மத்தியில தெரண்டு நிக்கிறான். கூடப் படிக்கிற பயலுக அவனப் பாத்துப் பயப்படறாங்க.

வாத்தியாரப் பழி வாங்கணுங்கிற எண்ணம் மட்டும் தண்ணிக்குள்ள கெடக்கிற கல்லுமாதிரி அப்படியே கெடக்கு மனசுக்குள்ள.

*(தொடரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# யாழ். குடாநாட்டு நிலத்தடி நீரில் எண்ணெய் விஞ்ஞான சங்கத்தின் கலந்துரையாடல்

JAFFNA SCIENCE ASSOCIATION



Dr.K.Velauthamurty Dr.T.Jeyasingham Mr.S.Ravenndran

யாழ். விஞ்ஞான சங்கத்தின் 2015 ஆம் ஆண்டு விஞ்ஞான வார வைபவம் கடந்த செவ்வாய்க்கிழமை (05.04.2015) தொடங்கி மூன்று நாட்கள் நடைபெற்றது.

இந்த மூன்று நாட்களும் விஞ்ஞான விரிவுரைகள், கருத்துரைகள், குழு விவாதம் மற்றும் ஆய்வுக் கட்டுரைகள், வாசிப்பு என்பன இடம்பெற்றன. இந்த நிகழ்வில் தொனிப்பொருளாக நிலத்தடி நீர் அமைந்தது மிகவும் பொருத்தமான ஒரு விடயமாக அமைந்தது. இங்கு நிலத்தடி நீர் சார்ந்த விடயங்களுக்கு பலரால் விளக்கமளிக்கப்பட்டது. கலாநிதி த.ஜெயசிங்கம் (கிழக்கு பல்கலைக்கழகம்), கலாநிதி கு.வேலாயுத மூர்த்தி (யாழ் பல்கலைக் கழகம்) , செ.ரவீந்திரன் (யாழ். பல்கலைக் கழகம்) ஆகியோர் மிகவும் சிறந்த விடயங்கள் பற்றிப் பேசினார்கள்.

இங்கு பல விடயங்கள் அலசப்பட்ட போதும் 06.05.2015 அன்று நடந்த கலந்துரையாடலில் நிலத்தடி நீரில் உள்ள எண்ணெய் கலப்பு சம்பந்தமாக இந்தத் துறையில் நீண்ட கால அனுபவமுள்ள கலாநிதி மு. வேலாயுதமூர்த்தியின் உரை சிறப்பு வாய்ந்ததாக இருந் தது.

இந்தக் கலந்துரையாடலில் நிகழ்ந்த சில சுவாரசியமான கேள்விகளும் அதற்கான பதில்களின் தொகுப்பும் வருமாறு:

**BTEX என்ற பதார்த்தமும் எண்ணெய் மாசுபடலில் அதன் முக்கியத்துவமும்.**

BTEX என்பது பெற்றோலிய எண்ணெயில் உள்ள நான்கு, வளைய ஐதரோகாபன் (Mono cyclic hydrocarbon) ஆகும். இவை தவிர இங்கு ஏனைய சங்கிலி ஐதரோ காபன்களும் (aliphatic ) பல வளைய ஐதரோகாபன்களும் (Polycyclic hydro carbon) உள்ளன.

BTEX என்பது பெற்றோலியம் எண்ணெயில் உள்ள கரைந்து காணப்படக் கூடியதும் இலகுவில் அடையாளம் காணக்கூடியதுமான சேர்வைகள் ஆகும். ஏனைய சேர்வைகள் குறைந்த கொதி நிலை (Boiling temperature) உடையன.

ஆகவே நாட்கள் செல்ல செல்ல ஆவியாகி விடும். ஆகவே BTEX பெற்றோலிய எண்ணெய் கலப்பின் தன்மையை அறிய ஒரு சிறந்த சேர்வை ஆகும். இங்கு இது பெற்றோலிய எண்ணெய்க் கலப்பின் ஒரு பிரதிநிதியாக (Representative) உள்ளது. மற்றும் இது, பெற்றோலிய எண்ணெயில் உள்ள கூடுதலான நச்சுத்தன்மை வாய்ந்த ஒரு பொருளாகவும் உள்ளது.

**BTEX இல்லை என்றால் அந்த நீர் பாவிக்க உகந்ததா?**

இல்லை, என்பதே இங்கு நடந்த உரையாடலில் இருந்து எடுக்கப்பட்ட முடிவாகும்.

**BTEX ஒரு மாதிரியில் இல்லாதிருக்கக் கூடிய சாத்தியம்**


இங்கு இந்தச் சேர்வை மண் மற்றும் ஏனைய காரணிகளால் அகற்றப்பட அல்லது உறிஞ்சப்பட (degradation and absorption/adsorpiton) உள்ள வாய்ப்புகள் பற்றி ஆராயப்பட்டது. இதனால் மண் மாதிரிகளும் ஆய்வு செய்யப்பட வேண்டிய முக்கியத்துவம் கூறப் பட்டது.

**எண்ணெய் மற்றும் கிரீஸ் (Oil and Grease) பகுப்பாய்வு மற்றும் அதன் மட்டுப்பாடுகள்**

ஹெக்சேன் (hexane) பகுப்பாய்வு முறையில் உள்ள மட்டுப்பாடுகள் (limitations) மற்றும் இந்த முறையின் வெவ்வேறு வகைகள் பற்றி ஆராயப்பட்டன. இந்த முறையில் எண்ணெய் மட்டுமல்லாது , எல்லா சேதனச் சேர்வைகளும் ஒன்றாகவே கருதப்படும் (all organic matters will be analysed) என்றும் சில மேம்படுத்தப்பட்ட முறைகள் இந்த வழுக்களைத் தவிர்க்கும் என்றும் கூறப்பட்டது.

மிகச் சிறந்த முறையாக GC எனப்படும் Gas Chromotaography முறையே அறிவிக்கப்பட்டது. இதிலும் வெளிநாடுகளில் செய்யப்படும் பகுப்பாய்வு அறிதிறன் கூடியதாகவும் இங்கு இலங்கையில் செய்யப்படும் முறை அறிதிறன் ஓரளவு குறைந்தது என்றும் கூறப்பட்டது. இங்கு வெளிநாட்டு அல்லது திறன் கொண்ட ஆய்வு கூடம் ஒன்றின் தேவையும் ஆராயப்பட்டது. இந்தக் கலந்துரையாடல் பல விடயங்களில் சிறந்த வெளிப்படுத்தல்களை கொண்டதாகவே கூறலாம். இந்தக் கலந்துரையாடலை ஏற்பாடு செய்த விஞ்ஞான சங்கத்தின் தூய விஞ்ஞானப் பிரிவின் வெற்றியாக இதைக் கூறலாம்.

**க.கஜபதி**
**விரிவுரையாளர்,**
**விலங்கியற்றுறை,**
**யாழ்.பல்கலைக்கழகம**




Mono Cydic and polycydic compounds in petroleum oil

புதிர்க்கேள்வியும் கடந்த புதிருக்கான விடையும் அடுத்த பகுதியில் வெளிவரும்.

| Reference method | Country | Solvent used | Evaporation Temperature(p C) | Status |
|---|---|---|---|---|
| ASTM D4281-95 | USA | Feron | 70 | - |
| METHOD 5520 B | USA | n-hexaneMTBE | 85 | In use |
| EPA 413.1 | USA | Feron | 70 | - |
| EPA 1664 A | USA | n-Hexane | 85 | In use |

All Hexane extraction methods

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்நாட்டு விசாரணையை ஏற்றுக்கொள்ள முடியாது

## கஜேந்திரகுமார் தெரிவிப்பு



(கொழும்பு)

**உள்நாட்டு விசாரணைகளை ஏற்றுக் கொள்ள முடியாது என்று தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.**

சர்வதேச ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் அவர் இதனைக் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க இராஜாங்க செயலாளர் ஜோன் கெரி இலங்கைக்கு விஜயம் செய்திருந்த பின்னர், அவர் உள்நாட்டு விசாரணைக்கே முக்கியத்துவம் வழங்கி இருப்பதாக தெரிவிக்கப்பட்டு வருகிறது.

இது தொடர்பில் கருத்து தெரிவித்துள்ள கஜேந்திரகுமார் பொன்னம்பலம், உள்நாட்டு விசாரணையின் மூலம் குற்றவாளிகள் பாதுகாக்கப்படும் வாய்ப்புகள் அதிகமாக இருப்பதாக தெரிவித்துள்ளார்.

இதனால் தமிழ் மக்களால் உள்நாட்டு விசாரணைகளை ஏற்க முடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-5)

# ஒரு வாரத்தில் 200 பேருக்கு இரட்டை குடியுரிமை வழங்கல்

கடந்த வாரத்தில் மாத்திரம் 200 பேருக்கு இரட்டை குடியுரிமை பெற்றுக் கொடுத்துள்ளதாக குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

இரட்டை குடியுரிமைக்கு விண்ணப்பித்துள்ள நபர்களுகத ஆவண அடிப்படையில் முழு தகுதி உடையவர்களுக்கு இரட்டை குடியுரிமை வழங்கப்பட்டுள்ளதாக குடிவரவு குடியகல்வு கட்டுப்பாளர் எம்.என்.ரணசிங்க தெரிவித்தார்.

இலங்கையர்களுக்கு இரட்டைக் குடியுரிமை வழங்குவது கடந்த நான்கு வருடங்களுக்கு முன் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில் கடந்த 30 ஆம் திகதி தொடக்கம் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, குறிப்பிட்ட 9 நாடுகளில் வசிக்கும் இலங்கையர்களுக்கு இரட்டை குடியுரிமை வழங்கப்படுகிறது.

மேலும் பலர் இரட்டை குடியுரிமைக்கு விண்ணப்பித்துள்ளதாகவும் அவர்களுக்கு விரைவில் தகுதி அடிப்படையில் வழங்கப்படும் என்றும் குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளர் தெரிவித்தார். (இ-5)

# மகிந்த இணையவில்லை என்றால் அரசியலில் இருந்து விலகுவேன்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட தலைவர்கள் தொடர்ந்தும் ஒற்றுமையாக செயற்படவில்லை எனில் தாம் அரசியலில் இருந்து ஓய்வுபெற போவதாக நாடாளுமன்ற உறுப்பினர் விதுர விக்ரமநாயக்க தெரிவித்துள்ளார்.

ஹொரணையில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

கட்சியின் தலைவர்கள் இடையில் ஏற்பட்டுள்ள கருத்து முரண்பாடுகள் காரணமாக கட்சியினர் பெரும் அழுத தங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஏதேனும் பிளவுகள் ஏற்பட்டால், அதனால், ஐக்கிய தேசியக் கட்சியே பயன் அடையும். இது நாட்டுக்கு மாத்திரமல்லாது ஸ்ரீல ங்கா சுதந்திரக் கட்சிக்கும் கெடுதியானது.

இதனால் கட்சியினரை சிரமங்களுக்குள் தள்ளாது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் ஜனாதிபதிகளான மகிந்த ராஜபக்ஷ மற்றும் சந்திரிகா பண்டார நாயக்ககுமாரதுங்க ஆகியோர் இணைந்து கட்சியை வழி நடத்த வேண்டும் அப்படி இல்லையென்றால் தெளிவான அரசியல் தீர்மானம் ஒன்றை எடுப்பேன் எனவும் விதுர விக்ரமநாயக்க தெரிவித்தார். (இ-5)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி | சுன்னாகம் | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 90 | 80 | 70 | 80 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 40 | 50 | 60 | 40 | 40 |
| தக்காளி | 120 | 60 | 80 | 70-100 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 60 | 40 | 40 |
| கோவா | 40 | 70 | 50 | 30-50 | 40 |
| கரட் | 80 | 130 | 140 | 120-160 | 100 |
| பூசணி | 40 | 30 | 40 | 40 | 40 |
| புடோல் | 60 | 60 | 50 | 60 | 70 |
| வாழைக்காய் | 50 | 50 | 50 | 40 | 50 |
| சின்ன வெங்காயம் | 100 | 100 | 100 | 60-100 | 60 |
| பெரிய வெங்காயம் | 110 | 110 | 120 | 120 | 90 |
| பாகற்காய் | 100 | 90 | 80 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 140 | 40 | 60 | 60-100 | 100 |
| கருணைக் கிழங்கு | 80 | 80 | 80 | 90 | 80 |
| பயற்றங்காய் | 80 | 100 | 40 | 60-80 | 60 |
| லீக்ஸ் | 160 | 150 | 180 | 160 | 160 |
| பீற்றூட் | 50 | 70 | 80 | 60 | 40 |
| கறிமிளகாய் | 80 | 90 | 80 | 60 | 70 |
| முருங்கைக்காய் | 450 | 500 | 400 | 250-350 | 400 |
| போஞ்சி | 160 | 180 | 200 | 140 | 160 |
| கத்தரிதம்புள்ள | 80 | 70 | 60 | — | 60 |
| கீரை – 1 பிடி | 30 | 20 | 30 | 30 | 20 |
| தேசிக்காய் | 160 | 150 | 200 | 170 | 180 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 40 | 50-60 | 60 | 60 |
| இராசவள்ளி | 100 | 150 | 100 | 140 | 120 |
| வெங்காயப்பூ | — | — | — | — | --- |
| முள்ளங்கி | 50 | 40 | 80 | 60 | 50 |
| பொன்னாங்காணி | 20 | 30 | 30 | 30 | 25 |
| வல்லாரை | 10 | 20 | 20 | 10 | 20 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 364

Search for people, places and things Nagendram Home

இலக்கியா நகுலன்




கிரிஸ் கிரி





தனு தனுசியா




பிரவின் தாஸ்




ராஜா தனு




டொறின் மன்மதநாயகம்





நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “ஆம் அது இன அழிப்புத்தான்”

திரத்துக்கும் தன்மானத்துக்குமான தமிழர்களுடைய தாகம் ஒருபோதும் தணிந்துவிடாது என்று பல சந்தர்பங்களில் லீ குவான் கூறியுள்ளார்.

லீ குவான் யீவ் உடனான கலந்துரையாடல்கள்: சிங்கப்பூர் குடிமக்கள்: ஒரு நாட்டை எப்படிக் கட்டுவது? என்ற நூலின் எழுத்தாளரான ரொம் பிளேட், லீ குவானை நேர்கண்ட போது அவர் இனவாத சிங்கள தேசம் குறித்தும் தமிழர்களுடைய ஆயுதப் போராட்டம் வெடித்ததன் அவசியம் குறித்தும் மிகத் தெளிவாக சர்வதேசத்துக்கு உண்மை



....தற்போதைய சீன அதிபர் ஹி ஜின்பிங்க், “லீ குவானின் மாதிரியை கற்பதற்காக சிங்கப்பூருக்குச் சென்ற பல பத்தாயிரக்கணக்கான சீன அதிகாரிகளாலே சீனாவின் நவீனமயமாக்கல் செயற்றிட்டம் மறுசீரமைக்கப்பட்டுள்ளன,” என அவரே தெரிவித்துள்ளார்.

லீ குவான் 30 தடவைகளுக்கும் மேல் சீனாவுக்குச் சுற்றுப்பயணம் சென்று, மாவோவில் இருந்து ஹி ஜின்பிங்க் வரையான தலைவர்களைச் சந்தித்து மதியுரை வழங்கியுள்ளார்.

சீனா மீது லீ குவானுடைய செல்வாக்கு இருந்துவந்த நிலையில், மேற்கத்திய தலைவர்களும் பீஜிங்கை எவ்வாறு கையாள்வது என்பது குறித்து மதியுரையைப் பெறுவதற்காக அவரிடம் சென்றுள்ளார்கள்.

ஹென்றி கிஸ்ஸிங்கரில் இருந்து ரொனி பிளேயர் வரைக்கும் லீ குவான் பல தசாப்தங்களாக அரசியல் தலைவர்களுக்கு மதியுரை வழங்கியுள்ளார்.

2009 இல் சிங்கப்பூருக்குச் சென்ற அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா லீ குவானிடம் அமெரிக்காவின் ‘ஆசிய அச்சு’ குறித்து மதியுரை பெற்றிருந்தார்.

லீ குவானைப் பாராட்டி அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தெரிவிக்கையில், “ஆசியா, பூகோள அரசியல் மற்றும் பொருளாதாரம் என்பவற்றின் மீதான அவரது நுண்ணறிவு, உலகெங்கும் உள்ள பலரின் சிந்தனைகளை வடிவமைத்துள்ளது,” என்றார்.

“ஆசியப் பசுபிக்கிற்கான அமெரிக்காவின் மீள் சமநிலைக் கொள்கையை மறுசீரமைப்பதற்குத் தனக்கு உதவியதில் லீ குவான் மிகப்பெரிய முக்கியத்துவம் வகித்துள்ளார்,” என ஒபாமா தெரிவித்துள்ளார்.

கிட்டத்தட்ட உலகின் ஒவ்வொரு தலைவர்களையும் சந்திப்பதற்கான வாய்ப்பு கிஸ்ஸிங்கருக்கு இருந்தது.

“கிரான்ட் மாஸ்ரர்” என்ற நூலுக்கான முகவுரையில், “அவர் மிக அதிகம் கற்றுக்கொண்ட ஒருவர் லீ குவான் யீவ்,” எனக் குறிப்பிட்டுள்ளார்.

அந்த முகவுரையில், “தனித்துவமான மூலோபாய அறிவு ஜீவி” என லீ குவானை கிஸ்ஸிங்கர் போற்றுகிறார்.

“ஒரு அமைதியான உலகின் வளர்ச்சிக்கும் பாதுகாப்பிற்கும் அவரது கருத்துக்கள் அமெரிக்காவுக்கு தவிர்க்கமுடியாத பங்களிப்பாக அமைந்திருந்தன,” என கிஸ்ஸிங்கர் தெரிவித்துள்ளார்.

பலர் அவதானித்தது போல் லீ குவானால் எதிர்காலதைப் பார்க்க முடிந்தது. உண்மையில், சிங்கப்பூரில் ஒரு எதிர்காலத்தையே அவர் கட்டியுள்ளார்.

சுதந்திரச் சந்தைக்கான வெற்றிகரமான சீனத் தலைவர்களின் விரைவான பாய்ச்சலுக்கும், நிக்சனிலிருந்து ஒவ்வொரு அமெரிக்க ஜனாதிபதிக்கும் அறிவுரை வழங்கும் வழிகாட்டியாக இருந்த லீ குவானுடைய மதியுரை எதிர்காலத்தை வடிவமைத்தது.

தேசத்தைக் கட்டியெழுப்பக் கூடியவர்கள் எனக் கருதப்பட்டவர்களான இனப்படுகொலையால் சூறையாடப்பட்ட ருவாண்டாவின் போல் கெகமி என்பவரிலிருந்து சோவியத் யூனியனுக்குப் பிந்தைய கஸகஸ்தானின் நுர்சுல்தான் நக்ஷார்பயேவ், மொங்கோலியாவின் திஸாகியாகியின் எல்பெக்டோர்ஜி வரை வெறுமனே அவருடைய எழுத்துக்களைப் படித்தது மட்டுமன்றி, பல தடவைகள் அடிக்கடி சிங்கப்பூரின் ஞானியிடம் வழிகாட்டலுக்காக நாடியுள்ளார்கள்.

“லீ குவான் யீவ்: சிறந்த மேதையின் சீனா, அமெரிக்கா மற்றும் உலகம் குறித்த நுண்ணறிவு” என்ற நூலின் ஆசிரியரான கிரகம் அல்லிசன் என்பவர் லீ குவானை நேர்கண்ட போது, சீனாவின் அண்மைய தலைவர்கள் எதிர்கால ஆசியாவில் அமெரிக்காவை முதற்தர வல்லரசிலிருந்து மாற்றியமைப்பதில் தீவிரமாக உள்ளார்களா எனக் கேட்டதற்கு, அவர் கூறிய விடை: “நிச்சியமாகத் தீவிரமாக உள்ளார்கள். ஆசியாவில் முதற்தர வல்லரசாக இருப்பதற்கு எப்படி அவர்களால் ஆசைப்படாமல் இருக்க முடியும்?” எனப் பதிலளித்துள்ளார்.

சீனாவுடைய எழுச்சியை அமெரிக்கா தடுத்து நிறுத்துமா என்று கேட்டதற்கு அவர் இவ்வாறு பதிலளித்தார், “சீனாவின் எழுச்சியைத் தடுத்து நிறுத்த முடியாது. எப்போதும் அமெரிக்காவின் நிலைக்குச் சவால்விடுக்கப் போதிய பெரிய நாடு இல்லாதிருந்து வந்த அமெரிக்காவுக்கு, முற்றிலும் புதுமையாக இருக்கக்கூடிய, ஒரு மிகப்பெரிய சீனாவுடன் தான் வாழவேண்டியிருக்கும்,” என்றார். ஆனால், சீனாவின் விடயத்தில் “உலக வரலாற்றிலே சீனாதான் மிகப் பெரிய ஆட்டக்காரன்,” எனப் பலதடவை அவர் கூறியுள்ளார்.

விசாலமான ஞானம், இராஜதந்திரம், தொலைநோக்கிப் பார்க்கும் திறன், பூகோள அரசியல் மற்றும் மூலோபாயம் ஆகியவற்றில் கடந்த அரை நூற்றாண்டின் சிறந்த மேதையான லீ குவான் யீவ், தமிழீழ விடுதலைப் போராட்டத்தை வெளிப்படையாக ஆதரித்து தமிழர்களுக்கு உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்பதை எப்போதும் வலியுறித்தி வந்தார்.

தமிழ்நாட்டின் முதலமைச்சர் திரு.பன்னீர்ச்செல்வம் மறைந்த லீ குவான் யீவ் இற்கான தனது இரங்கல் செய்தியில், “உலகெங்கும் உள்ள தமிழர்கள் ஒரு நல்ல நண்பனை இழந்துவிட்டனர்,” என்றார்.

முன்னாள் தமிழ்நாட்டு முதலமைச்சர் அறிஞர். அண்ணாத்துரை 1965 இல் சிங்கப்பூர் சென்றிருந்தவேளை, அங்கு அவர் ஆற்றிய உரையை லீ குவான் மிகவும் ரசித்திருந்தார். உலகில் எத்தனையோ நாடுகள் இருக்கையில், 2003 சமாதான காலத்தில் நோர்வேயின் ஏற்பாட்டில், தமிழீழ விடுதலைப் புலிகளின் போர்க்கள நாயகனும் வரலாற்று நாயகனுமான பிரிகேடியர் பால்ராஜ் அவர்களுக்கு லீ குவானுடைய சிங்கப்பூர் நாட்டிலேதான் இதயச் சத்திர சிகிச்சை வழங்கப்பட்டது. தமிழர்களை மேலாதிக்கம் செய்யும் சிங்களவர்களை விமர்சிப்பதில் லீ குவான் சிறிதும் தயக்கம் காட்டியதில்லை.

ஆதிக்க இனத்தின் இராணுவ பலம் என்னவாக இருந்தாலும், அடக்குமுறையில் இருந்து சுதந்திரத்துக்கும் ... களைப் பதிவுசெய்துள்ளார்.

தமிழர்களுடைய ஆயுதப் போராட்டத்தைப் பயங்கரவாதமாகச் சித்தரிக்கும் இந்த உலகிற்கு, இந்த உலகமே அறிவுரைக்காக நாடும் ஒரு மேதையிடம், “ஆசியா கண்டது இனவழிப்புத் தானா” என்ற கேள்விக்கு அவர் கூறிய பதில் : “That's right”

“ஆம். அது இன அழிப்புத் தான்,” என்றார்.

கடந்த 2013 இல் வெளியிடப்பட்ட லீ குவானின் இறுதி நூலான “ஒற்றை மனிதனின் உலகப் பார்வை” இல் அவர் தான் செய்த கடமைகளை மீட்டுள்ளதோடு, பின்வருமாறு கூறி அந்த நூலை நிறைவு செய்துள்ளார்: “என்னைப் பொறுத்த வரை, நான் என்ன செய்ய வேண்டியிருந்ததோ, அதை நான் எனது ஆற்றலுக்கு எட்டிய வரை செய்துள்ளேன். நான் மனநிறைவடைகிறேன்.”

சிங்கப்பூரைக் கட்டுவது அவரது பேரார்வம் எனக்கூறி, அந்நாட்டின் பிரதமர் தனது தந்தையின் பின்வரும் மேற்கோளை வாசித்தார் : “ஒரு நாளின் முடிவில் எதை நான் பெற்றேன்? ஒரு வெற்றிகரமான சிங்கப்பூரை. நான் எதை இழந்தேன்? எனது வாழ்க்கையை.” (முற்றும்)

-இணையம்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச நீதிமன்றம் மூலம் இலங்கையிடம் விசாரணை

(கொழும்பு)

**தமிழ் மக்களுக்கு எதிராக இழைத்த போர்க்குற்றங்கள், இனப்படுகொலை தொடர்பாக இலங்கையை சர்வதேச நீதிமன்றத்தின் முன் ஐக்கிய நாடுகள் சபை நிறுத்த வேண்டும் என நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் விசுவநாதன் ருத்திரகுமாரன் வலியுறுத்தியுள்ளார்.**



இலங்கை குறித்த ஐ.நா. உள்ளக மதிப்பீட்டு அறிக்கையின்படி, 2009 ஆம் ஆண்டு போரின்போது முதல் ஆறு மாதங்களில் 70 ஆயிரம் தமிழர்கள் உயிரிழந்ததாக கூறப்படுகிறது. இந்த போர்க்குற்றங்கள் தொடர்பாக, ஒரு உள்நாட்டு அமைப்போ அல்லது வேறொரு வெளிநாட்டு ஒத்துழைப்புடன் கூடிய உள்நாட்டு அமைப்போ தமிழ் மக்களுக்கு நீதியை அளிக்காது என நாங்கள் உறுதியாக நம்புகிறோம்.

புதிதாக பொறுப்பேற்றுள்ள இலங்கை அரசு ஒரு உள்நாட்டு அல்லது கலப்பு அமைப்பைக் கோருவது, சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தின் முன் இலங்கை அரசை நிறுத்தும் கோரிக்கையை திசை திருப்புகிற, தாமதப்படுத்துகிற முயற்சியாகும். மேலும் இலங்கை அரசும், நீதித்துறையும் இன ரீதியாக நடு நிலையாக இல்லை. தமிழர்களுக்கு நீதி வழங்கும் அரசியல் உறுதிப்பாடு இலங்கையில் இல்லை. எனவே, ஜனாதிபதி மாற்றப்பட்டு விட்டாலும் கூட, தமிழர்கள் தொடர்பான அரசியல் சூழல் மாறவில்லை.

போரின் முடிவில் இராணுவ படைத்தலைவராக இருந்த தளபதி சரத் பொன்சேகா உள்ளிட்ட பல முன்னாள் இராணுவ அதிகாரிகள் தற்போதைய அரசாங்கத்தில் முது நிலை பதவிகளில் இருக்கிறார்கள். இராணுவம் இன்னமும் அவ்வாறே உள்ளது. வட கிழக்குப் பகுதிகளில் இராணுவமயமாக்கல் தமிழர்களிடையே அச்சத்தை நீடிக்கச் செய்கிறது.

மேலும் இந்த நடவடிக்கை அங்கு அன்றாட நடவடிக்கைகளில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது. எனவே, பாதிக்கப்பட்டவர்களின் சாட்சிகள் உள்நாட்டு அல்லது கலப்புத் தீர்ப்பாயத்தின் முன்பு உண்மையில் சுதந்திரமாக இருப்பதற்கு சாத்தியமில்லை.

எனவே, இந்த இனப்படுகொலை தொடர்பாக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் முன்பு இலங்கையை நிறுத்த வேண்டும். இல்லையென்றால், அதுபோன்ற ஒரு நம்பகமான சர்வதேச விசாரணை அமைப்பு ஒன்றினை ஐ.நா. சபை நிறுவ வேண்டும்.

இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் முன் நிறுத்த வலியுறுத்தி, 10 இலட்சம் கையெழுத்துகளை திரட்டி ஐக்கிய நாடுகள் சபையிடம் அளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்காக, தமிழகம், உலக நாடுகளில் உள்ள தமிழர்கள் அனைவரும் கையெழுத்திட்டு ஆதரிக்க வேண்டும்.

இந்த கையெழுத்து இயக்கத்தின் மூலம் பெறப்படும் கையெழுத்துகள், ஜூலை மாதம் 15 ஆம் திகதிக்குள் ஐ.நா. சபையிடம் அளிக்கப்படும் என ருத்திரகுமாரன் மேலும் தெரிவித்தார். (இ-5)

# அமைச்சர் பதவியை புண்ணியமாக பெற்றவர் டிலான் பெரேராவே - ஹரின் பெர்னாண்டோ

அரசாங்கத்தின் தற்போதைய பிரதமர் புண்ணியத்திற்கு பிரதமரானவர் எனக் கூறிய அமைச்சர் டிலான் பெரேராவே அமைச்சர் பதவியை புண்ணியமாக பெற்றுள்ளார் என ஊவா மாகாண முதலமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவத்தார்.

கடந்த ஜனவரி மாதம் 8ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தை தோற்கடித்து தற்போதைய அரசாங்கம் 62 இலட்சத்திற்கும் மேற்பட்ட வாக்குகளை பெற்றது.

மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதியாக்குவோம் ரணில் விக்ரமசிங்கவை பிரதமராக்குவோம் என்று கூறி வாக்கு கேட்டதனாலேயே இந்த வரலாற்று சிறப்புமிக்க வெற்றி கிட்டியது.

மகிந்த ராஜபக்ஷவை தோற்கடித்து மக்களின் வாக்குகளினால் தெரிவான இந்த அரசாங்கம் எந்த விதத்திலும் புண்ணியத்திற்கு ஆட்சிக்கு வந்த அரசாங்கம் அல்ல.

ஐக்கிய தேசியக் கட்சி எப்போது தனக்கு உரித்தாகாத எதனையும் பலவந்தமாக பெற்றுக்கொண்டதில்லை. ரணில் விக்ரமசிங்க பிரதமராவதை விரும்பவில்லை என்றால் ஜனவரி மாதம் 8ஆம் திகதி மக்கள் புதிய அரசாங்கத்தை ஆட்சியில் அமர்த் தியிருக்க மாட்டார்கள்.

டிலான் பெரேரா தனது புண்ணிய கதை மூலம் தனது நிலைமையை வெளிப்படுத்திக்கொண்டு விட்டார். டிலான் பெரேரா தற்போதைய அரசாங்கத்தில் பெற்றிருப்பது புண்ணிய அமைச்சர் பதவி.

டிலான் பெரேரா, மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாக செயற்பட்டு விட்டு தற்பொழுது தற்போதைய அரசாங்கத்தில் அமைச்சராக இருந்து வருகிறார் எனவும் ஹரின் பெர்னாணடோ தெரிவித்துள்ளார். (இ-5)

# ஜே.வி.பிக்கு எதிராக சட்ட நடவடிக்கையாம்

## கோத்தபாய தெரிவிப்பு

தனது நற்பெயருக்கு களங்கம் கற்பிக்கும் நோக்கிலேயே ஜே.வி.பி. தனக்கு எதிராக இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்துள்ளதாக முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அம்பாறையில் 2013 ஆம் ஆண்டு நடைபெற்ற தேசத்திற்கு மகுடம் கண்காட்சியுடன் தொடர்புடைய அந்த மாவட்டத்தின் அபிவிருத்தித் திட்டத்திற்காக கோத்தபாயவின் பெயரில் உள்ள வங்கிக் கணக்கிற்கு மூன்று காசோலைகள் மூலம் 13 கோடி ரூபா அனுப்பி வைக்கப்பட்டதாகவும் அதனை செலவிட்டு மூன்று பேருந்து நிலையங்களை நிர்மாணித்ததாகவும் ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

மூன்று பேருந்து நிலையங்களை நிர்மாணித்ததில் பாரிய நிதி மோசடி நடந்துள்ளதாக கூறி ஜே.வி.பி. இலஞ்சம் மற்றும் ஊழல் மோசடி விசாரணை ஆணைக்குழுவில் நேற்று முன்தினம் முறைப்பாடு செய்துள்ளது. எனினும் அப்படியான எவ்வித பணமும் தனது வங்கிக் கணக்கிற்கு வரவில்லை எனவும் எந்த மோச டிக்கும் தான் துணை போகவில்லை எனவும் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பொய்யான குற்றச்சாட்டுக்களை சுமத்தி தனது நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தியமை தொடர்பில் ஜே.வி.பிக்கு எதிராக உடனடியாக சட்ட நடவடிக்கை எடுக்கப் போவதாகவும் அவர் தெரிவித்தார். (இ-5)

# இன்று ஒரு தகவல்

## வெற்றிக்கு வேண்டும் பேச்சாற்றல்

வாழ்க்கையில் வெற்றி பெற்றவர்கள் தங்கள் கருத்துக்களைத் தெளிவாகச் சொல்லும் ஆற்றல் படைத்தவர்களாக இருந்திருக்கிறார்கள். உரையாடுவதில் வல்லவர்களாக இருந்திருக்கிறார்கள். அவர்கள் எந்தத் துறையைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அந்தத் துறையைப் பற்றிய ஆழ்ந்த அறிவும் தாங்கள் சொல்வதை எளிமையாக விளக்கும் ஆற்றலும் பெற்றவர்கள் இவர்கள். இந்தப் பேச்சுக் கலை மற்றவர்களிடம் இருந்து நம்மை வித்தியாசப்படுத்திக் காட்டும். பதற்றமான சூழ்நிலையில் கைகொடுக்கும்.

**உங்கள் பேச்சாற்றலை வளர்த்துக்கொள்வது எப்படி?**

அனைவருடைய கவனத்தையும் ஈர்க்கும் வகையில் உங்கள் பேச்சு இருக்கவேண்டும். சவட்டத்தில் உள்ளவர்கள் யாரும் பேசிக்கொண்டிருக்காமல் உங்கள் பேச்சு போரடிக்கிறது என்பதை சேஷ்டைகள் செய்து காட்டாத வகையில் உங்கள் வார்த்தைகளில் அவர்கள் மெய்மறந்து போக வேண்டும். நீங்கள் பேசும் ஒருவார்த்தையைக்கூட அவர்கள் கவனிக்காமல் விட்டுவிடக்கூடாது. வார்த்தைகள், சம்பவங்கள், மேற்கோள்கள், நகைச்சுவை என உரை கவனமாகத் தயாரிக்கப்படவேண்டும்.

**மனதை ஒருமுகப்படுத்துவது**

உங்கள் சிந்தனை, ஞாபகத்திறன், கற்பனை எல்லாம் உங்கள் பேச்சின் உள்ளடக்கத்தை ஒட்டியே இருக்க வேண்டும். அடுத்து என்ன வார்த்தையைப்பிரயோகிப்பது, என்ன கருத்தைக் கூறுவது எனத் தயங்குவதும் அதனால் கோர்வையாகப் பேசுவதை விட்டுவிட்டுச் சம்பந்தமில்லாத கருத்துக்களைக் கூறுவதும் உங்கள் பேச்சின் வீச்சைக்குறைத்துவிடும். உங்கள் கவனத்தைச் சிதறவைக்கும் சம்பவங்கள் நீங்கள் பேசும்போது உங்களைச் சுற்றி நிகழ்ந்தாலும் அதிலெல்லாம் வீழ்ந்துவிடாமல் மனதை ஒருமுகப்படுத்திப் பேசுவதும் ஒரு கலைதான்.

**உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தவேண்டும்.**

ஒரு சிலர் மேடைக்குப் பேச வந்தவுடனேயே தயாரித்ததையெல்லாம் மறந்து விடுகிறார்கள். பயம், பதற்றம், பரபரப்பு எல்லாம் அவர்களைத் தொற்றிக் கொள்ள வார்த்தைகள் தொலைந்து போகின்றன. நா உலர்ந்து போகின்றது. இதற்குத்தான் உணர்ச்சிகளைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும். பார்வையாளர்களின் பலதரப்பட்ட பாவனைகளில் உங்கள் சிந்தனைத் திறத்தை இழக்காமல் பேசுவதற்கு கற்றுக்கொள்ளவேண்டும்.

**கனிவுடன் பேசுவது அவசியம்.**

உரையிலே அனல் தெறித்தாலும் அது பார்வையாளர்கள் மீது பற்றிவிடாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். சொல்ல வந்த கருத்துக்களில் உக்கிரம் இருக்கவேண்டுமே தவிர வார்த்தைகள் தீயனவாய் இருக்கக்கூடாது.

**உங்கள் தலைமையுணர்வு உங்கள் பேச்சின் மூலம் வெளிப்படவேண்டும். உரையாற்றுவது என்பது வெறுமனே பேச்சல்ல.உங்கள் தலைமைக்குணத்தை வெளிப்படுத்தும் தருணம் அது. மற்றவர்களுக்கு நம்பிக்கையூட்டும் உங்கள் உரையில் உங்கள் நம்பகத்தன்மை வெளிப்படுகின்றது. தங்களுடைய இன்றைய பிரச்சினைகளுக்கும் நாளைய கனவுகளுக்கும் உங்கள் உரையின் வழியாக வடிகால் தேடுகிறார்கள் மக்கள்.**

***பேசும்போதே சிந்திக்கப் பழகவேண்டும்***

மேடைப்பேச்சை மனனம் செய்து ஒப்பிக்கும் பழக்கத்தை அறவே விட்டொழியுங்கள். பேசும்போதே சிந்திக்கப் பழகிக் கொள்ளுங்கள். இவ்வாறு பேசுவதற்குத்தான் தயாரிப்பு அதிகம் தேவை. நிறைப் படிப்பது. குறிப்பெடுத்துக் கொள்வது. அவ்வப்போது திருப்பப் படித்துப்பார்ப்பது என்ற வழக்கத்தை மேற்கொண்டால் உங்கள் உரை சிறப்பாக அமையும்.

***உங்கள்குரலுக்கு ஒரு தனித்தன்மை வேண்டும்***

உங்கள் தெளிவான உச்சரிப்பு, குரலின் ஏற்ற இறக்கம், வார்த்தைகளை விழுங்காமல் பேசுவது, உணர்ச்சிகளை விழுங்காமல் பேசுவது, உணர்ச்சிகளை குரலில் கொட்டுவது என குரலை வளப்படுத்த நிறையப் பயிற்சிகள் செய்ய வேண்டும். உங்கள் குரலின் தனித்தன்மையைப் பாதுகாக்க வேண்டும். ஒரு நல்ல உரை என்பது எடுத்துக்கொண்ட மையக்கருத்தை தெளிவாகவும் தொடர்ச்சியாகவும் கூறுவது தான். தாங்கள் விற்பனை செய்யும் பொருட்களை சாமர்த்தியமாக விற்க பேச்சுக்கலையை பயன்படுத்துவது சிறப்புத்தான். ஆனால் பிறரை ஏமாற்ற அந்தக் கலையைப் பயன்படுத்தக்கூடாது.

*கலைமாமணி முனைவர் இளசை சுந்தரம்*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “இது ஐந்தாம் ஆண்டு அல்ல; இறுதி ஆண்டு”

சொத்துக் குவிப்பு வழக்கில் ஜெயலலிதாவுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி, நெருங்கி வரும் தே.மு.தி.க என அடுத்தடுத்த சாதகமான அம்சங்கள் தி.மு.க-வை மிகுந்த உற்சாகத்தில் தள்ளி உள்ளன.

தி.மு.க இனி ஆட்சிக் கட்டிலில் அமருமா என சந்தேகத்தில் இருந்த தி.மு.க-வினர் எல்லாம், 2016-ல் தி.மு.க ஆட்சி அமைவது உறுதி என பேசத் தொடங்கிவிட்டனர். ‘முதல்வர் வேட்பாளர் மு.க.ஸ்டாலின்தான்’ என கட்சி அதிகாரப்பூர்வமாக அறிவிக்கவில்லையே தவிர, மேடைதோறும் ‘வருங்கால முதல்வர்’ என ஸ்டாலினை அழைக்கத் தொடங்கிவிட்டனர் தி.மு.க-வினர். ஸ்டாலினிடமும் இந்த உற்சாகத்தைக் காண முடிகிறது.

இலவச திருமண நிகழ்ச்சியில் ஸ்டாலின்...



இதனால் மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்கும் விழா, இலவச திருமணங்கள் நடத்திவைக்கும் விழா, கட்சி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம், தொழில் முனைவோருடனான சந்திப்பு என பரபரப்பு காட்டும் அவர், மறுபுறம் முதல்வர் ஓ.பன்னீர்செல்வத்துக்கு மனம் திறந்த கடிதம், அரசின் மீதான விமர்சனங்கள் என சட்டமன்றத் தேர்தல் முஸ்தீபுகளில் இறங்கிவிட்டார்.

“அடுத்த ஆண்டு மே மாதத்தில் ஆட்சி மாற்றம் ஏற்படும். தி.மு.க ஆட்சி மலரும். தமிழகத்தில் தி.மு.க ஆட்சி அமைவது உறுதி” என சென்னையில் மேதின விழாவில் பேசிவிட்டு, மூன்று நாள் பயணமாக கோவை வந்தார்.

கோவை விமான நிலையத்தில் தொடங்கி, அன்னூர், மேட்டுப்பாளையம், குன்னூர் என அனைத்து இடங்களிலும் வழக்கத்தை விட சிறப்பான வரவேற்பு அவருக்குக் கொடுக்கப்பட்டது.

குன்னூரில் பள்ளி மாணவர்களுக்குக் கல்வி உதவித் தொகை வழங்கும் விழாவை நடத்திய நீலகிரி மாவட்ட தி.மு.க-வினர், விழா நடத்த குன்னூர் புனித ஜோசப் கல்லூரி ஆடிட்டோரியத்தைக் கேட்டனர்.

இந்தக் கல்லூரியில் தான் கடந்த ஆண்டு ஜெயலலிதா நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியை நடத்தினார் என்பதாலும், அ.தி.மு.க ஆட்சி என்பதாலும் இங்கு இடம் கிடைக்குமா என்ற சந்தேகத்தில்தான் கல்லூரி நிர்வாகத்தைத் தி.மு.க-வினர் அணுகியுள்ளனர்.

முன்னாள் துணை முதல்வர் ஸ்டாலின் வருகிறார் எனச் சொல்லி, நீலகிரி மாவட்டச் செயலாளர் முபாரக், கல்லூரி நிர்வாகத்திடம் அனுமதி கேட்டார். ‘முன்னாள் துணை முதல்வர் எனச் சொல்ல வேண்டாம். வருங்கால முதல்வர் எனச் சொல்லுங்கள்’ என்று கூறி, அனுமதி கொடுத்ததோடு?, விழாவில் கலந்து கொண்டு ஸ்டாலினை வாழ்த்தியும் பேசினார் கல்லூரியின் முதல்வர் டோம்னிக் ஜேக்கப்.

விழாவில் பேசிய ஆ.ராசா, “இங்கே பேசியவர்கள் எல்லோரும் தமிழகத்தை ஆளப்போகிறவர் நீங்கள்தான் என ஸ்டாலினைப் பார்த்துச் சொன்னார்கள்.

அது உறுதிப்படுத்தப்பட்ட ஒன்று” என்றார். வழக்கமாக, ஸ்டாலினை அடுத்த முதல்வர் என யாராவது அறிவித்தால், அதை மறுத்து, ‘அடுத்த முதல்வர் கலைஞர்தான்’ எனச் சொல்லும் ஸ்டாலின், இந்த முறை அடுத்த முதல்வர் என தன்னை கட்சியின் முக்கிய நிர்வாகிகள் உட்பட அனைவரும் குறிப்பிட்டதைப் புன்னகையுடன் ஏற்றுக்கொண் டார்.

ஸ்டாலின் பேசும்போது, “தமிழகத்தில் கல்வி நிலை மோசமாக இருப்பதாக பள்ளி யின் முதல்வர் வேதனையோடு குறிப்பிட்டார். இதைப் பற்றி முதல்வரும் கவலைப்பட வேண்டியது இல்லை. நீங்களும் கவலைப்பட வேண்டியது இல்லை. நல்ல ஆட்சியாக தமிழகத்தில் தி.மு.க ஆட்சி உருவாகும். அதற்கு நீங்கள் துணை நிற்க வேண்டும்.

அ.தி.மு.க-வுக்கு இது ஐந்தாண்டு அல்ல... இறுதி ஆண்டு” எனப் பேசியவர், 1,367 மாணவர்களுக்கு சுமார் 3 மணி நேரத்துக்கும் மேலாக மேடையில் நின்று கல்வி உதவித் தொகையை வழங்கி, அவர்களோடு புகைப்படம் எடுத்துக்கொண்டுதான் அங்கிருந்து புறப்பட்டார்.

மூன்றாவது நாள் கோவையில் தனது 63 ஆவது பிறந்த நாளையொட்டி ஏற்பாடு செய்திருந்த 115 ஜோடிகளுக்கு இலவச திருமணம் நடத்தும் நிகழ்ச்சியில் ஸ்டாலின் கலந்து கொண்டார். 115 ஜோடிகளுக்கும் தனித்தனியாக அவரே தாலி எடுத்துக்கொடுத்து திருமணத்தை நடத்தி வைத்தார்.

விழாவில் பேசிய மாவட்டச் செயலாளர்கள், முன்னாள் அமைச்சர்கள் என அனைவரும், தி.மு.க ஆட்சி 2016 இல் அமைவது உறுதி என்றும், அடுத்த முதல்வர் ஸ்டாலின்தான் என்றும் அழுத்தம் திருத்தமாகச் சொல்ல ஆர்ப்பரித்தது கூட்டம்.

விழாவில் பேசிய முன்னாள் மத்திய அமைச்சர் சுப்புலட்சுமி ஜெகதீசன், “கடந்த 3 நாட்கள் ஸ்டாலினின் வருகை மேற்கு மண்டலத்தில் பெரும் எழுச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அடுத்து ஸ்டாலின்தான் முதல்வர். எல்லாத் துறைகளிலும் தமிழகம் முன்னேற இருக்கிறது. எனவே யாரும் கவலைப்பட வேண்டியதில்லை” என்றார். ஆ.ராசா, “பேரறிஞர் அண்ணா அனைத்துத் தலைவர்களையும் விமர்சித்து வந்தபோது, டெல்லியில் அவரை சந்தித்த பத்திரிகையாளர்கள், ‘நீங்கள் எல்லோரையும் விமர்சிக்கிறீர்கள்.

தலைவருக்கான தகுதியாக எதைப் பார்க்கிறீர்கள் எனக் கேட்டனர். அதற்குப் பதிலளித்த அண்ணா, ‘தினந்தோறும் புதிராய், தேடுதலுக்கு உட்பட்டவராய் இருக்கக் கூடியவர்தான் தலைவர்’ என்றார். அப்படி பெரியார், அண்ணா, கலைஞர் வழியில் தேடுதலுக் கும் ஆச்சர்யத்துக்கும் உட்பட்டவர்தான் ஸ்டாலின். தமிழகம் எதிர்பார்க்கக் கூடிய தலைவராக ஸ்டாலின் இருக்கிறார்” என்று படபடத்தார்.

ஸ்டாலின், “ஜெயலலிதா மீதான சொத்துக் குவிப்பு வழக்கில் நீதிபதி விரைவில் தீர்ப்பளிக்க இருக்கிறார். தற்போதைய அ.தி. மு.க ஆட்சி இயங்காத அரசாக, பன்னீர்செல்வம் செயற்படாத முதல்வராக இருக்கிறார். தமிழகத்தில் சிறப் பான ஆட்சி உருவாக வேண்டும் என்றால், அது தி.மு.க ஆட்சிதான். அதற்கு நீங்கள் உறுதுணையாக இருக்க வேண்டும்” என்றார்.

தி.மு.க. தனது தேர்தல் பயணத்தைத் தொடங்கிவிட்டது.

-யூனியர் விகடன்-




# துயர நிகழ்வின் மிச்சம் சிறு நம்பிக்கை!

இந்தோனேஷிய அரசால் மரண தண்டனை நிறைவேற்றப்பட்ட ஆண்ட்ரூ சான் மற்றும் மயூரன் சுகுமாரன் நினைவாக எதையாவது செய்ய வேண்டும், எதையாவது சொல்ல வேண்டும், தங்கள் மனதின் சோகத்தை எப்படியாவது வெளிப்படுத்த வேண்டும் என்று ஆஸ்திரேலியா முழுவதும் உள்ள மக்கள் நினைக்கிறார்கள்.

சான் மற்றும் சுகுமாரனின் வாழ்க்கை மற்றும் மரணம் குறித்து யோசித்துக் கொண்டே இருக்கும் அவர்களால், இது ஒரு சோக சம்பவம் என்ற நினைவுடன் இயல்பு வாழ்க்கைக்கு அத்தனை சுலபமாகத் திரும்ப முடியாது என்பது உறுதி.

ஃபேஸ்புக் நிலைத் தகவலாகட்டும், வீடுகளில் மெழுகுவர்த்தி ஏற்றுவதாகட்டும், நாடு முழுவதும் இரவுகளில் நடக்கும் அஞ்சலிக் கூட்டங்களாகட்டும், ஆஸ்திரேலியர்கள் ஒன்றிணைந்து இந்தத் துக்கத்தில் பங்கெடுத்துக்கொள்கிறார்கள்.

இது வழக்கமாக நிகழ்வதல்ல. ‘நாடு சகஜ நிலைக்குத் திரும்பும்’ என்ற உறுதி கொண்ட ஆஸ்திரேலியாவில் - அதுவும் எதற்கும் கலங்காத குணம் கொண்ட பிரிட்டன் மக்களின் வழித் தோன்றல்கள் வாழும் ஆஸ்திரேலியாவில் - தேசிய அளவிலான துக்க தருணங்கள் இத்தனை பெரிய தாக்கத்தை இதுவரை செலுத்தியதில்லை.

வெற்றியைக் கொண்டாடும் தருணங்களில் ஒன்றிணைந்து கொள்வதில் நாம் சிறந்தவர்கள். அதிகாரத்தில் இருப்பவர்களைப் பற்றி கேலியாக விமர்சனம் செய்வதில்கூட நாம் ஒன்றிணைந்துதான் செயற்படுவோம்.

ஆனால், தேசிய துக்க நிகழ்வுகளில் பங்கெடுப்பது நம் பழக்கம் அல்ல. சமீபத்தில் காலமான முன்னாள் பிரதமர்கள் மால்கம் ஃபிரேஸர் மற்றும் காஃப் விட்லம் ஆகியோருக்குப் பலரும் அஞ்சலி செலுத்தினார்கள். அவர்களது வாழ்க்கை மற்றும் சாதனைகள் குறித்து நம்மில் பலரும் நினைவுகூர்ந்தனர்.

ஆனால், மால்கம் ஃபிரேஸர் மற்றும் காஃப் விட்லம் ஆகியோரின் மரணங்கள் முற்றிலும் வேறானவை. நீண்ட நல் வாழ்வுக்குப் பின்னர், அமைதியான முறையில் அவர்களின் வாழ்வு முடிவுக்கு வந்தது. ஆனால், சான் மற்றும் சுகுமாரனின் மரணம் தான் எத்தனை பயங்கரமானது. கொடூரமானது!

தவறான முடிவுகளை அவர்கள் எடுத்தது நாம் அறிந்ததுதான். அதே சமயம் அந்த முடிவுகளை மாற்றிக் கொள்ள அவர்கள் எல்லா முயற்சிகளையும் எடுத்தார்கள். அவர்களுக்குத் தங்களைத் திருத்திக்கொள்ளும் வாய்ப்பு இருந்ததையும் நாம் பார்த்தோம்.

சட்ட அமைப்பு அவர்கள் இருவரையும் காக்கும் என்று நாம் நம்பினோம். நமது வேண்டுதல்கள், இந்தோனேஷிய அதிபர் ஜோக்கோ விடோடோவின் சிந்தனையிலும் மனதிலும் மாற்றத்தை ஏற்படுத்தும் என்று நம்பினோம்.

பிலிப்பைன்ஸைச் சேர்ந்த பணிப்பெண் மேரி ஜேன் வெலோஸோ விடயத்தில் நடந்ததுபோல், கடைசி நிமிடத்தில் ஏதாவது நடந்து அவர்களின் உயிர்கள் காக்கப் படும் என்று நம்பினோம்.

ஆனால், அப்படி ஏதும் நடக்கவில்லை. அந்தப் பயங்கரமான செய்தியுடன்தான் நாம் கண் விழித்தோம். அவர்கள் இருவருக்கும் கருணை காட்டப்படவில்லை என்றும் மூர்க்கமான முடிவு எடுக்கப்பட்டதும் நீதி தோல்வி அடைந்ததும் தான் நம காதுகளை எட்டிய விடயங்கள்.

துக்கத்துக்கு ஏழு நிலைகள் உண்டு என்று சொல்வார்கள் - அதிர்ச்சி, மறுத்தல், கோபம், கெஞ்சுதல், குற்ற உணர்வு மற்றும் மன அழுத்தம். இதன் கடைசி நிலை, நம்பிக்கைதான்.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து இயல்பு வாழ்க்கைக்கு அத்தனை சுலபமாகத் திரும்ப முடியாது என்பது உறுதி. அதே சமயம், உலகம் முழுவதும் உள்ள மக்களில் சிலர், இந்நிகழ்வுக்குப் பிறகு மரண தண்டனைகுறித்த தங்கள் பார்வையை மாற்றிக் கொள்வார்கள் என்று நம்பலாம்.

இந்த மோசமான நிகழ்வின் எதிர் விளைவாக ஏற்படும் சிறு நன்மை இதுதான்!

-அவுஸ்திரேலிய ஊடகம்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லாட்சி நிலவுவதாக எனக்கு தெரியவில்லை

## பாலித தெவரப்பெரும தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் நல்லாட்சி நில்வுவதாக எனக்குத் தெரியவில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் களுத்துறை மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் பாலித தெவரப்பெரும தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் 100 நாள் திட்டம் பூர்த்தியாகியுள்ளது. 100 செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

வெள்ளைவான் கலாசாரம் இல்லாதொழிக்க ப்பட்டு மக்களது ஜனநாயக உரிமைகள் உறுதி செய்யப்பட்டுள்ளன.


எனினும் பொலிஸ் நிலையத் திற்கு அழைத்துச் செல்லப்படும் நபர் தாக்கப்படுகின்றார்.

நல்லாட்சி என்றால் அனைத்து விடயங்களும் கட்டுப்படுத்தப்பட வேண்டும். எந்த அரசாங்கம் என் றாலும் அதனையே செய்ய வேண் டும்.

மதுபான விற்பனை சாலைகள், கசினோ சூதாட்ட மையங்கள் தொடர்ந்தும் இயங்கி வருகின்றன.

திருடர்களுக்கு அமைச்சுப் பதவி வழங்கப்பட்டுள்ளது. திருடர் களுக்கு அமைச்சுப் பதவிகளை வழங்கி நாட்டில் நல்லாட்சியை ஏற்படுத்த முடியாது.

எனக்கு இதில் நல்லாட்சி எது வும் தென்படவில்லை என பாலித தெவரப்பெரும சிங்கள ஊடகமொ ன்றுக்குத் தெரிவித்துள்ளார். (இ-5)




ஜனாதிபதியிடமே கரண்டி உள்ளது. தட்டுகளை கழுவியதன் பின்னர் அவர் சோற்றை பரிமாறுவார்.

# ஜனாதிபதி விரும்பும் தினத்தில் நாடாளுமன்று கலைக்கப்படும்

## பிரதி சபாநாயகர் தெரிவிப்பு

**(கொழும்பு) ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு தேவையான தினத்திலேயே நாடாளுமன்றம் கலைக்கப்படும் என பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார்.யார் என்ன சொன்னாலும், நாடாளுமன்றத்தை ஜனாதிபதி விரும்பினால் மட்டுமே கலைக்க முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.**



இது ஓர் வித்தியாசமான காலமாகும்.

ஐக்கிய தேசியக் கட்சி ஆதரித்த வேட்பாளர் ஜனாதிபதி தேர்தலில் வெற்றியீட்டினார், எமது வேட்பாளர் தோல்வியைத் தழுவினார்.

வெற்றியீட்டிய வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன சுதந்திரக் கட்சியின் தலைவரானார்.

62 இலட்சம் வாக்குகளைப் பெற்றுக் கொண்டவரும், 58 இலட்சம் வாக்குகளைப் பெற்றுக்கொண்டவரும் இன்று எமது கட்சியில் இருக்கின்றார்கள்.

ரணில் விக்கிரமசிங்க ஓர் சதிகாரர், 19ஆம் திருத்தச் சட்டம் குறித்து உச்ச நீதிமன்றில் தடுத்த சரத்துக்களை மெதுவாக நிறைவேற்றிக் கொள்ள முயற்சித்தார்.

எனினும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன இந்த அனைத்து சதிகளையும் முறியடித்தார் என சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார்.

அண்மையில் யக்கமுல்ல பிரதேசத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (இ-5)

# மலையகத்தில் 100 நாட்களில் 300தனி வீடுகள்

## *10ஆம் திகதி காணி உறுதி*

மலையகப் பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு சொந்தக்காணியில் தனிவீடு எனும் அரசியல் கோரிக்கையின் அடிப்படையில் புதிய அரசாங்கத்தின் 100 நாள் வேலைத திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்டுள்ள 300 வீடுகளுக்கான காணியுறுதிப்பத்திரங்கள் நாளை மறுதினம வழங்கப்படவுள்ளதாக பெருந தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சின் ஊடகப் பிரிவு விடுத்திருக்கும் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாளை மறுதினம் தலவாக்கலையில் நடைபெறவுள்ள தொழிலாளர் தேசிய சங்கத்தின் ஐம்பதாண்டு நிறைவைக் கொண்டாடும் பொன்விழா ஆரம்ப நிகழ்வு நடைபெறவுள்ளது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் பங்குபற்றுதலோடு இடம்பெறும் இவ்விழாவில் மேற்படி 300 வீடுகளுக்கும் மற்றும் மீரியபெத்தையில் அமைக்கப்பட்டுக் கொண்டிருக்கும் 75 வீடுகளுக்கும் காணியுறுதிப்பத்திரங்கள் வழங்கப்படவுள்ளன.

மீரியபெத்தையில் இடம்பெற்ற மண்சரிவு அவலத்தில் பாதிப்புற்ற 75 குடும்பங்களுக்கான வீடமைப்புக்கான அடிக்கல் கடந்த அரசாங்கத்தினால் இடப்பட்டது. எனினும் அப்போது வீடமைப்புக்காக தெரிவு செய்யப்பட்டிருந்த இடம் மக்களின் விருப்புக்கும் வசதிக்கும் அமைய இடம்பெறவில்லை என எழுந்த சர்ச்சையை அடுத்து புதிதாக உருவாக்கப்பட்ட தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு புதிய இடத்தினைத் தெரிவு செய்து தற்போது 75 வீடுகளை நிர்மாணித்து வருகிறது. நகர அபிவிருத்தி அதிகார சபையின் ஆலோசனை வழிகாட்டலோடு இலங்கை இராணுவத்தினரால் கட்டுமானப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மலையகப் பெருந்தோட்ட மக்களுக்கான தனி வீடுகளின் தேவை சுமார் 160ஆயிரம் என அடையாளம் காணப்பட்டுள்ளது. எனினும் 100 நாள் வேலைத்திட்டத்தின் கீழ் மாதிரி வீடுகளாக 300 வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன. இந்த 300 வீடுகளும் மண்சரிவு, மண்சரிவு அபாயத்திற்கு உட்பட்ட வீடுகள் என அடையாளம் காணப்பட்டு தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இத்தகைய ஆபத்து உள்ள வீடுகள் என சுமார் 5600 வீடுகள் தேசிய கட்டட ஆய்வு நிறுவனத்தினால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அவற்றில் இருந்து 300 வீடுகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளது. இவ்வாறு தெரிவு செய்யம்போது மலையக மாவட்டங்கள் தோறும் பரவலாக வீட்டுத்திட்டங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளமை சிறப்பம்சமாகும்.

அபாயம் காரணமாக மக்களுக்கு நன்கொடையாக இந்த வீடுகள் வழங்கப்படுகின்றன. நுவரெலியா மாவட்டம் (மஸ்கெலியா மொக்கா, சாமிமலை- லெட்புளூக், நோர்வூட்- சென்ஜோன் டில்லரி, டிக்கோயா- டன்பார், கொட்டகலை- யுலிபீல்ட், தலவாக்கலை- ஹொலிரூட், கந்தப்பளை- கொன்கோடியா),பதுளை மாவட்டம் (எல்ல -நிவ்பேர்க், ஹப்புத்தளை- விஹாரகல) ,கண்டி மாவட்டம் (புசல்லாவை - சோகம), மாத்தளை மாவட்டம் (கந்தேநுவர - பிட்டகந்த) ,இரத்தினபுரி மாவட்டம் (நிவித்திகல- தொலஸ்வல), கேகாலை மாவட்டம் (அட்டாலே நிவ் அராந்திரா) என மலையக மாவட்டங்கள் தோறும் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. (இ-5)

# ஜெயராஜ் கொலையுடன் சம்பந்தப்பட்ட சந்தேகநபர்களிடம் தொடர்ந்து விசாரணை

முன்னாள் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேவின் கொலையுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் தொடர்ந்தும் தடுத்து வைத்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஜெயராஜ் கொலையுடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர் உள்ளிட்ட 20 தமிழீழ விடுதலைப் புலி சந்தேக நபர்கள் இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

முன்னளாள் அமைச்சர் மகிந்த விஜேசேகர மீது தாக்குதல் நடத்தியமை, மாத்தறை, பதுளையில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பங்கேற்ற கூட்டங்களை இலக்கு வைத்து குண்டுத் தாக்குதல் நடத்த முயற்சித்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் இந்த சந்தேக நபர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

நதிமன்றில் வழக்கு விசாரணை செய்யப்பட்டு வரும் ஆறு பேர் இந்தக் குழுவில் உள்ளடங்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பயங்கரவாத தடுப்புப் பிரிவினர் இந்த 20 சந்தேக நபர்களையும் தடுத்து வைத்து விசாரணை செய்து வருகின்றனர்.

பயங்கரவாதத் தடுப்புப் பிரிவின் முன்னாள் பொலிஸ் அத்தியட்சகர் லக்ஸ்மன் குரேவும் இந்த சந்தேக நபர்களில் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.



பூசா தடுப்பு முகாமில் இவர்கள் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழீழ விடுதலைப் புலி சந்தேக நபர்களிடம் விசாரணை நடத்தப்பட்டுள்ளது.

பெரும் எண்ணிக்கையிலானவர்கள் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு சமூகத்துடன் மீள இணைக்கப்பட்டுள்ளனர்.

பாரியளவில் குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எவ்வாறான தடைகள் ஏற்பட்டாலும் குருநாகல் கூட்டம் நடந்தே தீரும்

## பிரசன்ன ரணதுங்க தெரிவிப்பு

எவ்வாறான தடைகள் ஏற்படுத்தப்பட்டாலும் குருநாகலில் நடத்தப்படவுள்ள கூட்டம் நடத்தப்படும் என மேல் மாகாண முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் பிரதமர் வேட்பாளராக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு முனனாள் ஜனாதிபதி மகிந்தவை பெயரிட வேண்டுமெனக் கோரி நாட்டின் பல பகுதிகளிலும் கூட்டம் நடத்தப்பட்டு வருகின்றது.

எந்தவொரு அரசியல் காரணிகள் தேவைகளுக்காக இந்தக் கூட்டம் நிறுத்தப்படமாட்டாது.

கடந்த கூட்டங்களை விடவும் அதிகளவானவர்கள் இந்தக் கூட்டத்தில் பங்கேற்க வேண்டுமென பிரசன்ன ரணதுங்க கோரியுள்ளார்.

குருநாகலில் இன்று நடைபெறவுள்ள கூட்டம் குறித்து சிங்கள பத்திரிகையொன்று எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (இ-5)

# லலித் வீரதுங்கவிற்கு மீண்டும் அழைப்பு!



(கொழும்பு) முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் செயலாளர் லலித் வீரதுங்கவிற்கு நீதிமன்றம் மீண் டும் அழைப்பாணை உத்தரவினை பிறப்பித்துள்ளது.

கடந்த ஜனாதிபதி தேர்தல் காலத்தில் வாக்குகளைப் பெற்றுக் கொள்ள இலஞ்சமாக மக்களுக்கு தியானம் செய்வதற்காக சில் ஆடைகளை இலவசமாக வழுங்கியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் வெற்றியை உறுதி செய்யும் நோக்கில் இவ்வாறு சில் ஆடைகள் வழங்கப்பட்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் பதிலளிப்பதற்காக இன்று நீதிமன்றில் முன்னிலையாகுமாறு உச்ச நீதிமன்றம் அறிவித்துள்ளது.

பவ்ரல் அமைப்பினால் லலித் வீரதுங்க, அனுஷ பெல்பிட்ட உள்ளிட்டவர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

நேற்று முன்தினம் இது குறித்த வழக்கு விசாரணைகளின் போது லலித் வீரதுங்க உள்ளிட்டவர்களுக்கு அழைப்பாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட போதிலும் சட்டத்தரணி களோ அல்லது அவர்களோ முன்னிலையாகியிருக்கவில்லை.

இதனால், மீளவும் நீதிமன்றம் அழைப்பாணை உத்தரவு பிறப்பித்துள்ளது. எதிர்வரும் ஜுலை மாதம் 8ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகுமாறு இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணையாளர், இலஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம், பொலிஸ்மா அதிபர், வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம், முன்னாள் நிதி அமைச்சின் செயலாளர். கணக்காய்வாளர் நாயகம், முன்னாள் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, சட்டமா அதிபர் ஆகியோர் மனுவின் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர். (இ-5)

# 19ம் திருத்தச்சட்டத்துடன் நின்று விடப்போவதில்லை

## சம்பிக்க கூறுகிறார்



19ஆம் திருத்தச் சட்டத்துடன் நின்றுவிடப் போவதில்லை என அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

19ஆம் திருத்தச் சட்டம் நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்டுள்ளது. தற்போது எல்லாம் சரியென்று, இத்துடன் எம்மால் பேசாமல் இருந்து விட முடியாது.

நாம் அவ்வாறு இருக்கப் போவதுமில்லை. 19ஆம் திருத்தச் சட்டம் அமுல்படுத்தப்பட வேண்டுமாயின் 20ஆம் திருத்தச் சட்டமும் நிறைவேற்றப்பட வேண்டும்.

20ஆம் திருத்தச் சட்டத்தை அமுல்படுத்த ஏனைய கட்சிகளின் ஒத்துழைப்பு அவசியமாகின்றது. சில சந்தர்ப்பங்களில் எமக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டாலும் வரலாறு அதனை திருத்தி அமைத்துள்ளது.

19ஆம் திருத்தச் சட்டம் தொடர்பில் நாம் கூறியதனையே உச்ச நீதிமன்றமும் அறிவித்திருந்தது.

20ம்திருத்தச்சட்டம்நாட்டுக்கு அவசியமானது. அதனை எதிர்வரும் 19ஆம் திகதி நாடாளுமன்றில் சமர்பபித்து அமுல்படுத்துவோம் என சம்பிகக ரணவக்க ஊடகமொன்றுக்கு நேர்காணல் வழங்கியுள்ளார். (இ-5)

# விசேட வைத்திய நிபுணர்களுக்கு நாடளாவிய ரீதியில் பற்றாக்குறை

நாடளாவிய ரீதியில் விசேட வைத்திய நிபுணர்களுக்கு பற்றாக்குறை நிலவுவதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவிக்கின்றது.

விசேட வைத்திய நிபுணர்களுக்கு வருடாந்தம் மூன்றுமாத விடுமுறை வழங்கி, தனியார் பிரிவு வைத்தியசாலைகளில் முழுமையாக பணியாற்றுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டுமென சுகாதார அமைச்சிடம் யோசனை முன்வைத்துள்ளதாக சங்கத்தின் உதவிச் செயலாளர் நலிந்த ஹேரத் தெரிவித்தார்.

அரச வைத்தியசாலைகளின் சேவைகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில், உரிய திட்டமிடலுடன் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட வேண்டுமெனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாட்டில் விசேட வைத்திய நிபுணர்களுக்கு பற்றாக்குறை நிலவுவதால், வெளிநாடுகளில் இருந்து வருகைதரும் நிபுணர்கள் பிரபல தனியார் வைத்தியசாலைகளில் சேவையாற்றுவதாக நலிந்த ஹேரத் தெரிவித்தார்.

தமது யோசனைக்கு சுகாதார அமைச்சிடம் இருந்து சாதகமான பதில் கிடைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன், விசேட வைத்திய நிபுணர்களுக்கான பயிற்சிகளை அதிகளவிலானவர்களுக்கு வழங்குதன் மூலம், பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு எதிர்பார்த்துள்ளதாகவும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் சுகாதார அமைச்சின் அதிகாரி ஒருவரிடம் வினவியபோது, சேவைகள் விஸ்தரிக்கப்பட்டுள்ளதால் விசேட வைத்திய நிபுணர்களுக்கு பற்றாக்குறை காணப்படுவதாக அவர் தெரிவித்தார். (இ-5)

# வேலை தேடியலையும் முன்னாள் அமைச்சர்

(எதென்ஸ்)

கடந்த ஆண்டில் கிரேக்க நாட்டின் உள்துறை அமைச்சராக இருந்த அர்கிரிஸ் டினோபோலோஸ் இப்போது இணையத்தள வேலை வாய்ப்பகத்தில் வேலைக்காக விண்ணப்பித்துள்ள நிலைமை அந்நாட்டு மக்களை வியப்பில்ஆழ்த்தியுள்ளது.

"முன்னாள் அமைச்சர், 13 ஆண்டுகள் அரசியல் ஈடுபாடு, கடுமையான நிதி நெருக்கடியை திறம்பட சமாளித்தது, பத்திரிகை துறையில் போர் தொடர்பான செய்தியாளராக 15 ஆண்டுகள் அனுபவம், சட்டத்தரணிகள் பிரச்சினைகளை தீர்க்கும் ஆற்றல், அவற்றை கையாளும் பக்குவம், மிகவும் கடினமான சூழலிலும் முடிவுகளை எடுக்கும் செயலதிறன் கொண்ட நான் ஒரு நல்ல நிறுவனத்தில் வேலையில் அமர விரும்புகிறேன். வேலைக்காக எங்கு வேண்டுமானாலும் குடிபெயர தயார்" என தனது சுய விபரக் கோவையில் இவர் தெரிவித்துள்ளார். (இ-5)

# பிரிவுத்துயர் பகிர்வு



**திருமதி பொன்னையா கண்ணம்மா**

இல.93,பத்திரகாளி கோவில் வீதி, வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா கண்ணம்மா கடந்த 3ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் கோம்பயன் மணல் இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.



**திருமதி செல்லையா வள்ளிப்பிள்ளை**

ரவிதோட்டம் கரவெட்டி மத்தி, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா வள்ளிப்பிள்ளை கடந்த 4ஆம் திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை காலை 9மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் சோனப்பு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



**திருமதி கனகதம்பிராஜா இராசலட்சுமி**

வட்டு வடக்கு சித்தங்கேணி கரை நகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கனகதம்பி ராஜா இராசலட்சுமி கடந்த 5ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் நவாலி மயானத்தில் தகனம் செய்யப்படும்.



**திருமதி அற்புதம் மேரி திரேசா**

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் மன்னாரை வசிப்பிடமாகவும் கொண்ட அற்புதம் மேரிதிரேசா கடந்த 2ஆம் சனிக்கிழமை Leicester இல் காலமானார்.

அன்னாரின் திருப்பலி இன்று வெள்ளிக்கிழமை மு.ப.10மணியளவில் Our Lady of Good Counsel,Peebles Way,Leicester,LE4 7ZB,UK என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.



**திருமதி அரியரத்தினம் வள்ளியம்மை**

(இளைப்பாறிய ஆங்கில ஆசிரியை)

வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தையை வதிவிடமாகவும் கொண்ட அரியரத்தினம் வள்ளியம்மை கடந்த 5ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை பி.ப.1.30மணிதொடக்கம் பி.ப.3.30மணி வரை Jayartne Funeral Directors,Ground Floor Hall A,Elvitigala Mawatha, Borella,Colombo-08 என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



**குமாரு சின்னத்தம்பி**

சுழிபுரம் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் லண்டன்,சுவிஸ் ஆகிய இடங்களை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட குமாரு சின்னத்தம்பி கடந்த 5ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 11ஆம் திகதி திங்கட்கிழமை மு.ப.10மணி தொடக்கம் பி.ப.1மணிவரை Krematorium Nordheim,Halle 1,Kaferholzstrasse 101,8046 Zurich,Switzerland என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



**சுப்பிரமணியம் பொன்னம்பலம்**

(இளைப்பாறிய பிரதம எழுதுவினைஞர்)

அராலியைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரி ஐயா கடையை வசிப்பிடமாகவும் லண்டனை வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் பொன்னம்பலம் கடந்த 30ஆம் திகதி வியாழக்கிழமை காலமானார். அன்னாரின் பூதவுடல் இன்று வெள்ளிக்கிழமை பி.ப.12.30 மணியளவில் City of London Cemetery & Crematorium,Aldersbrook Rd,Manor Park,London E12 5DQ,United Kingdom என்னும் முகவரியில் தகனம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்வேறு துறைகளிலும் ஒத்துழைப்பை அதிகரிக்க சீன பயணம் அடித்தளமிடுமென மோடி நம்பிக்கை

(டில்லி)

பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை அதிகரிக்க எனது சீன பயணம் அடித்தளமிடும் என்று பிரதமர் மோடி நம்பிக்கை தெரிவித்துள்ளார். பிரதமர் நரேந்திர மோடி, 14ஆம் திகதி சீனாவுக்கு செல்கிறார். இதையொட்டி, அவர சமூக வலைத் தளத்தில் தனது கருத்தை வெளியிட்டுள்ளார். அவர தெரிவிக்கையில்,

14ஆம் திகதி முதல் 16ஆம் திகதி வரை, சீனாவில் சுற்றுப்பயணம் செய்ய ஆர்வமாக இருக்கிறேன். இப்பயணம், இரண்டு பழங்கால நாகரிக நாடுகள் மற்றும் மாபெரும் வளரும் நாடுகளிடையே நட்புறவை அதிகரிக்கும்.

எனது பயணம், பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை அதிகரிக்கும் என்று நம்புகிறேன். ஆசிய கண்டத்தில், ஸ்திரத்தன்மை, முன்னேற்றம், செழுமை ஆகியவற்றை வலுப்படுத்தும் என்று கருதுகிறேன்.

சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங், பிரதமர் லீ கேகியாங் ஆகியோருடன் ஆக்கபூர்வ பேச்சுவார்த்தை நடத்த காத்திருக்கிறேன். சீன ஜனாதிபதியின் சொந்த ஊரான ஜியான் மற்றும் பீஜிங், ஷாங்காய் ஆகிய நகரங்களுக்கு செல்வேன். ஷாங்காய் நகரில் தொழில் துறை தலைவர்களை சந்திக்கப் போகிறேன். இந்தியாவில் முதலீட்டுக்கான வாய்ப்புகள் குறித்து அவர்களுடன் பகிர்ந்து கொள்வேன்.

சீனாவைத் தொடர்ந்து, மங்கோலியா நாட்டுக்கும் செல்கிறேன். அந்நாட்டில்ஜனநாயகம் மலர்ந்த வெள்ளி விழாவிலும், நமது ராஜ்ய உறவின் 60ஆம் ஆண்டு விழாவிலும் கலந்து கொள்ளப்போகிறேன்.

மங்கோலியா, நமது ஆன்மீக நட்பு நாடு ஆகும். ஜனநாயகமும், புத்த மதமும் இரு நாடுகளையும் பிணைத்துள்ளன. மங்கோலியாவுடன், வர்த்தக மற்றும் முதலீட்டு உறவை அதிகரிக்கும் வாய்ப்பை ஆராய்வேன். மங்கோலியாவுக்கு அனைத்து துறைகளிலும் இந்தியா தொடர்ந்து ஆதரவு அளிக்கும் என பிரதமர் மோடி தெரிவித்துள்ளார். (இ-5)

# ஐ.நாவில் இந்தியாவுக்கு நிரந்தர இடம் அவசியம்

## *பிரான்ஸ் ஆதரவு*

(நியூயோர்க்)

ஐ.நா. பாதுகாப்புச் சபையில் இந்தியாவுக்கு நிரந்தர இடம் கிடைக்க பிரான்ஸ் ஆதரவளிக்கும் என்று ஐ.நாவுக்கான பிரான்ஸ் தூதுவர் பிராங் சுவா டெலாட்டர் உறுதிபட தெரிவித்தார்.

இரண்டாம் உலகப் போரில் இறந்தவர்களுக்கான நினைவு நிகழ்ச்சி ஐ.நா. பொது சபையில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில், ஐ.நாவுக்கான பிரான்ஸ் தூதர் ஃபிராங்சுவா டெலாட்டர் பேசியதாவது. ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் விரிவாக்கப்பட வேண்டியது தற்போதைய அவசர மற்றும் முக்கிய தேவையாக உள்ளது.

இந்த கவுன்சில் விரிவாக்கம் செய்யப்படுவதையும், அதில் இந்தியாவுக்கு நிரந்தர இடம் கிடைப்பதையும் பிரான்ஸ் ஆதரிக்கிறது. ஜேர்மனி, ஜப்பான், பிரேசில் மற்றும் ஆபிரிக்க நாடுகளும் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் இடம் பெற வேண்டுமென்பதே பிரான்ஸின் விருப்பமாகும் என்று பிராங்சுவா டெலாட்டர் தெரிவித்தார். (இ-5)

# வாட்ஸ்- அப் மூலம் ராஜினாமா கடிதம்

தொழில்நுட்ப புரட்சியின் உச்சமாக, ஒரு சப்-இன்ஸ்பெக்டர் தனது பதவியை ராஜினாமா செய்து அதற்கான கடிதத்தை வாட்ஸ்-அப் மூலம் உயர அதிகாரிக்கு அனுப்பியுள்ளார்.

உத்தரப்பிரதேசம் மாநிலத்தில் உள்ள சில மாவட்டங்களில் பொலிஸ் துறை கணனிமயமாக்கப்பட்டு 176 பொலிஸ் நிலையங்களுக்கும் பொதுவான அவசர உதவி தொலைபேசி புகார் பிரிவு அமைக்கப்பட்டுள்ளது. மேலும், மக்கள் தங்களது கருத்துக்களை பதிவு செய்ய வசதியாக "வாட்ஸ் -அப்"புடனும் இந்த அவசர உதவி எண் இணைக்கப்பட்டுள்ளது.

கான்பூர் மாவட்டத்தில் உள்ள ரசுலாபாத் பொலிஸ் நிலையத்தில் சப்-இன்ஸ்பெக்டராக பணியாற்றி வந்தவர் வினோத் குமார். இவர், மேலதிகாரிகளின் தொல்லையை தாங்கிக்கொள்ள முடியாமல் தனது பணியை ராஜினாமா செய்வதாக உயர் அதிகாரிக்கு கடிதம் அனுப்பியுள்ளார். அவர், நேற்று முன்தின இரவு "வாட்ஸ் - அப்" மூலம் தனது ராஜினாமா கடிதத்தை அனுப்பியுள்ளார். (இ-5)

# பட்டாசு ஆலையில் திடீர் தீ விபத்து!

(கொல்கத்தா)

**மேற்கு வங்காளத்தில் பட்டாசு ஆலையில நேற்று ஏற்பட்ட திடீர் தீ விபத்தால் ஏற்பட்ட விபத்தில் சிக்கி 15 பேர் உடல்கருகி உயிரிழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.**



15 பேர் பலி


மேற்கு வங்காள மாநிலம் மேற்கு மிட்னாபூர் மாவட்டத்தில் செயற்பட்டுவந்த பட்டாசு ஆலையில் வெடிவிபத்து ஏற்பட்டது. விபத்து குறித்து தகவல் அறிந்ததும், மீட்பு குழுவினர் சம்பவ இடத்திற்கு விரைந்துவந்து தீயை அணைக்க போராடினர். விபத்தில் 15 பேர் உயிரிழந்தனர். 10 பேர் காயம் அடைந்தனர்.

காயம் அடைந்தவர்கள் உடனடியாக மீட்கப்பட்டு வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். வைத்தியசாலையில் அவர்களுக்கு தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

பட்டாசு ஆலையில் வெடி விபத்து ஏற்பட்டதற்கான கார ணம் வெளியாகவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-5)

# உணர்ச்சி வசப்படாமல் நிதானமாக இருங்கள்

## தொண்டர்களுக்கு ஜெயலலிதா அறிவுரை



உணர்ச்சி வசப்படாமல் நிதானமாக இருங்கள் என்று அ.தி.மு.க. தொண்டர்களிடம் ஜெயலலிதா வலியுறுத்தி உள்ளார்.

இதுகுறித்து அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா வெளியிட்டுள்ள அறிக்கையில், "என் மீது பேரன்பு கொண்டு பல்வேறு தியாகங்களை தொடர்ந்து செய்து வரும் தொண்டர்கள், அவ்வப்போது ஒரு சில இடங்களில் எனக்கு பெரிதும் மன வருத்தம் தருகின்ற வகையில் தங்கள் இன்னுயிரையே மாய்த்துக்கொள்ளும் செயல்களிலும் ஈடுபட்டு விடுகின்றனர்.

அண்மையில் விழுப்புரம் மாவட்டம் செஞ்சி பேரூராட்சி 8ஆவது வார்டை சேர்ந்த இளைஞர் பாசறை உறுப்பினர் ஆர்.கார்த்திக் தூக்கில் தொங்கி தன் உயிரை மாய்த்துக் கொண்டுள்ளார் என்ற செய்தி அறிந்து ஆற்றொணாத் துயரம் அடைந்தேன்.

என் உயிரினும் மேலான தொண்டர்கள் உணர்ச்சி வசப்படாமல் நிதானம் காக்க வேண்டும் என்று மீண்டும் வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறேன்.

கார்த்திக்கை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்வதுடன், அன்னாரது ஆன்மா இறைவன் திருவடி நிழலில் அமைதி பெற எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறேன்.

மேலும் அவரது குடும்பத்திற்கு அ.தி.மு.க. சார்பில் குடும்ப நல உதவியாக ரூபா 3 இலட்சம் வழங்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்" என்று மேலும் வலியுறுத்தியுள்ளார். (இ-5)

# துறைமுகம் மேம்பாடு இந்தியா ஒத்துழைப்பு

## *ஈரான் நம்பிக்கை*

(டெஹ்ரான்)

ஈரான் நாட்டில் உள்ள சாப்ப ஹார் துறைமுகம் மேம்படுத்துவதில் ஈரான் மற்றும் இந்தியா இரு நாடுகள் ஒத்துழைப்பதன் மூலம் புதிய அத்தியாயம் படைக்கும் எனஈரான் ஜனாதிபதி ரஹானி தெரிவித்துள்ளார்.

துறைமுக மேம்பாட்டு விழாவில் கலந்து கொண்ட ஈரான் ஜனாதிபதி கூறுகையில், இந்த துறைமுகத்தை மேம்படுத்துவதில் இந்தியாவின் ஒத்துழைப்பு பெரும்பங்கு வகிக்கும் எனவும இதன்மூலம் இந்திய சரக்கு போககுவரத்தில் செலவீனங்கள் குறைய வாய்ப்பு உள்ளதாக தெரிவித்தார்.

ஈரானின் உட்கட்டமைப்பு வசதிகளான வீதி போக்குவரத்து வசதி மற்றும் ரயில்வே வசதிகளை மேம்படுத்துவதில் இந்திய முதலீட்டாளர்கள் முன்வர வேண்டும் என ஈரான ஜனாதிபதி வேண்டுகோள் விடுத்தார். விழாவில் கலந்து கொண்ட மத்திய வீதி போக்கு வரத்து துறை அமைச்சர் நிதின் கட்காரி கலந்து கொணடு பரதமரின் வாழ்த்து கடிதத்தை ஜனாதிபதியிடம் வழங்கினார். தொடர்ந்து பேசிய கட்காரி ஈரான் துறை முக [illegible] ங்கும் என தெரிவித்தார். (இ-5)

## பாரதச் செய்தி

# சல்மானுக்கு 2நாள் பிணை

(மும்பை)

குடிபோதையிலும், உரிமம் இல்லாமலும் கார் செலுத்தி, விபத்து ஏற்படுத்தி ஒருவரை கொன்ற வழக்கில், இந்தி நடிகர் சல்மான்கானுக்கு விசாரணை நீதிமன்றம் 5 ஆண்டு சிறைத்தண்டனை விதித்து நேற்று முன்தினம் அதிரடி தீர்ப்பு வழங்கியது. இதனால் அவர் உடனடியாக சிறையில் அடைக்கப்பட வேண்டிய சூழல் உருவானது.

ஆனால் அவரது சார்பில் மும்பை உயர்நீதிமன்றில் மனு தாக்கல் செயயப்பட்டது. அந்த மனு நீதிபதி அபய் திப்சே முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. சல்மான்கான் சார்பில் மூத்த சட்டத்தரணி ஹரிஷ் சால்வே ஆஜரானார். அவர், "தீர்ப்பின் நகல் சல்மான்கானுக்கு வழங்கப்படவில்லை. எனவே அதுவரையில் அவருக்கு பிணைவழங்கப்பட வேண்டும்" என வாதிட்டார்.

ஆனால், அதை அரசு சட்டத்தரணி சந்தீப ஷிண்டே எதிர்த்தார். "தீர்ப்பு நகல் இன்றி, சல்மான் கான் மனுவை விசாரிக்கவே கூடாது" என கூறினார்.

இருப்பினும் நீதிபதி அபய் திப்சே, "வழக்கு விசாரணை முழுமையும் அவர்பிணையில்தான் இருந்திருக்கிறார். அவர் உடனடியாக சிறையில் அடைக்கப்பட வேண்டும். இருப்பினும், அவருக்கு தண்டனை தீர்ப்பின் நகல் இன்னும் வழங்கப்படவில்லை. நீதியின் நலனைக் கருத்தில கொண்டு, உத்தரவு நகல்கிடைக்கிறவரை அவரை காக்க வேண்டியதுதான்சரியானது" என கூறி, இன்று வரை 2 நாட்கள் இடைக்கால பிணை வழங்கி உத்தரவிட்டார். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாற்றுத்திறனாளி நண்பர்களின் மாற்று சிந்தனையின் வெளிப்பாடு



சீனாவை சேர்ந்த 2 மாற்றுத் திறனாளி நண்பர்கள் 13 வருடத்தில் 12 ஆயிரம் மரங்களை நட்டு மிகப்பெரிய ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளனர்.

சீனாவின் வடக்கு பகுதியான எல்லி கிராமத்தை சேர்ந்தவர் ஜியா வெங்கி பார்வையை இழந்தவர்.

இவரது நண்பர் ஜியா ஹாயாக் சியா 2 கைகளையும் இழந்தவர். மாற்றுத்திறனாளிகள் என்ற காரணத்தால் இவர்கள் இருவருக்கும் வேலை கொடுக்க யாரும் முன் வரவில்லை.

இயற்கையின் மீது அதிக காதல் கொண்ட இந்த மாற்றுத் திறனாளி நண்பர்கள் மரங்களை நட்டு அவற்றை பராமரிப்பதை தங்களது அன்றாட வேலையாக மாற்றிக்கொண்டனர்.

கைகளை இழந்தவர், பார்வையற்ற நண்பரை பல இடங்களுக்கும் அழைத்துச்சென்று மரங்களை நட்டார். இவர்கள் கடந்த 13 வருடத்தில் சுமார் 12 ஆயிரம் மரங்களை நட்டு அவற்றை பராமரித்தும் வருகின்றனர். (இ-5)




## நேபாள நிலநடுக்கம்

# பலியானோரின் எண்ணிக்கை 7,757 ஆக அதிகரித்துள்ளது

நேபாள நிலநடுக்கத்தில் பலியானோர் எண்ணிக்கை 7 ஆயிரத்து 757ஆக அதிகரித்துள்ளது. நேபாளத்தில் கடந்த மாதம் 25 ஆம் திகதி நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டரில் 7.9 ஆக பதிவாகியது.

இந்நிலையில்,இதுவரை 7 ஆயிரத்து757பேர் பலியாகி இருப்பதாகவும், 16 ஆயிரத்து390 பேர் காயமடைந்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிந்துபால்சவுக் மாவட்டத்தில் தான் அதிகளவில் உயிரிழப்பு ஏற்பட்டிருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையில் நேபாள அரசு உத்தரவை ஏற்ற இந்தியா உட்பட 12 நாடுகளைச் சேர்ந்த மீட்புக் குழுவினர் 600 பேர் நேபாளத்தில் இருந்து வெளியேறியுள்ளனர்.



இன்னும் நிறையப் பேரை வெளியேறுமாறு நேபாளம் வலியுறுத்தி வருகிறது.

நேபாள நிலநடுக்க பாதிப்பு குறித்து உள்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், "2,79,234 வீடுகள் முற்றிலுமாகவும், 2,37,068 வீடுகள் பகுதியாகவும் சேதமடைந்துள்ளன" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

# 2014-ல் நாள்தோறும் 30 ஆயிரம் அகதிகள்!

## நோர்வே அகதிகள் சபை தகவல்

(ஜெனீவா)

**போர் மற்றும் கலவரம் காரணமாக கடந்த ஆண்டு மட்டும் ஒவ்வொரு நாளும் 30 ஆயிரம் பேர் தங்கள் இருப்பிடங்களில் இருந்து வெளியேறியுள்ளதாக அதிர்ச்சி தரும் தகவலை நோர்வே அகதிகள் சபை வெளியிட்டுள்ளது.**



நோர்வே அகதிகள் சபையின் செயலாளர் ஜான் இக்லாண்ட் இது பற்றி கூறும் போது, "இந்த தலைமுறையில் எப்போதும் இல்லாத அளவிற்கு, ஒரே ஆண்டில் அதிக பட்ச மக்கள் தங்கள் வசிப்பிடங்களை விட்டு வெளியேறியுள்ளனர்.

உள்நாட்டிற்குள்ளாகவே இடம் பெயரும் மக்களின் எண்ணிக்கை 11 மில்லியனில் இருந்து 38 மில்லியனாக உயர்ந்துள்ளது.

கடந்த ஆண்டு சராசரியாக ஒவ்வொரு நாளும் குழந்தைகள், பெண்கள், ஆண்கள் என 30 ஆயிரம் பேர் தங்கள் வசிப்பிடங்களில் இருந்து வெளியேறி தங்கள் நாட்டிலேயே அகதிகளாக ஆக்கப்பட்டுள்ளனர். இதில் அகதிகளாக வெளிநாடுகளுக்கு சென்றவர்களின் எண்ணிக்கை சேர்க்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது" என தெரிவித்துள்ளார்.

முக்கியமாக ஈராக், தெற்கு சூடான், சிரியா, கொங்கோ மற்றும் நைஜீரியா ஆகிய நாடுகளில்10 பேரில் 6 பேர் உள்நாட்டிலேயே அகதிகளாக ஆக்கப்பட்டுள்ளனர்.

இந்த கலவரங்கள் அனைத்தும் அரசியல் மற்றும் மதங்களின் பெயரால் இரக்கமற்ற முறையில் கொடூர ஆயுதங்களால் மேற்கொள்ளப்படுகிறது. இந்த கொடூரத்தை தடுத்து நிறுத்த உலக நாடுகளின் கொள்கைகள், ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானங்கள், சமாதான பேச்சுக்கள் மற்றும் யுத்த நிறுத்த ஒப்பந்தங்கள் ஆகியவை தவறிவிட்டன என நோர்வே அகதிகள் சபை குற்றஞ்சாட்டியுள்ளது. (இ-5)

## தீவிரவாதிகளின் தாக்குதலில் சிக்கிய ஐ.நா.அமைதிப்படையினர் இருவர் பலி

ஆபிரிக்க நாடான கொங்கோவில் 'உகாண்டன் ஜனநாயக படை' என்ற தீவிரவாத இயக்கம் அரசுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது.

இந்த தீவிரவாதிகளின் தாக்குதலில் அந்த நாட்டைச் சேர்ந்த மக்கள் பாதிக்கப்பட்டு உள்ளனர். மக்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் விதமாக ஐ.நா. அமைதிப்படை கொங்கோவில் முகாமிட்டு தீவிரவாதிகள் மீது தாக்குதல் நடத்தி வருகிறது.

இந்தநிலையில் வடக்கு கிவு மாகாணம் பெனி நகரில் இருந்து 50 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள கிகி கிராமத்தில் அமைதிப் படையினர் வாகனத்தில் வந்து கொண்டிருந்தனர்.

அப்போது பதுங்கி இருந்த தீவிரவாதிகள் அமைதிப்படையினர் மீது கடுமையாக தாக்குதல் நடத்தினர். இதில் அமைதிப்படையில் இடம் பெற்றிருந்த தான்சானியாவைச் சேர்ந்த 2 வீரர்கள் நேற்று முன்தினம் உயிரிழந்தனர். 13 பேர் படுகாயம் அடைந்தனர்.

இந்த சம்பவத்திற்கு ஐ.நா. பொதுச்செயலாளர் பான் கீ மூன் கடும்கண்டனம் தெரிவித்துள்ளார்.

கொங்கோ நாட்டு இராணுவம் கடந்த சில தினங்களுக்குமுன்பு நடத்திய தாக்குதலில் இதே மாகாணத்தைச் சேர்ந்த 16 தீவிரவாதிகள் கொல்லப்பட்டது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## எபோலா நோய்த் தாக்கத்தால் 11,000 பேர் இதுவரை மரணம்

### உலக சுகாதார நிறுவனம் தகவல்

எபோலா வைரஸ் நோய் தாக்குதலினால் பலியானவர்களின் எண்ணிக்கை 11 ஆயிரத்தை தாண்டிவிட்டதாக உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது.

கடந்த 2013 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் மேற்கு கினியாவில் தொடங்கிய இந்த நோய் லைபீரியா, சியாராலியோன் ஆகிய நாடுகளுக்கும் வேகமாக பரவி மக்களின் உயிரை பறித்து வருகிறது.

இக்கொடிய வைரஸ் காய்ச்சலால் அதிகம் பாதிக்கப்பட்ட கினியா, நோய் லைபீரியா மற்றும் சியாரா லேபான் ஆகிய நாடுகளில் மட்டும் 11 ஆயிரத்து 5 பேர் பலியாகி உள்ளனர்.

மொத்தமாக 26 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தேக எண்ணங்கள் வௌவால் போன்றவை. அவை மங்கலான வெளிச்சத்தில் தான் பறக்கின்றன. – பேகன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## சோதிடர் சுமணதாசவை சந்திக்காமல் மைத்திரியை சந்தித்தது ஏன்?

சோழியன் குடும்பி சும்மா ஆடாது என்றொரு பழமொழி நம் தமிழில் உண்டு. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதி மைத்திரியைச் சந்தித்து பிரதமர் வேட்பாளர் பதவியில் தன்னை நிறுத்துமாறு கேட்டதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

எனினும் மகிந்தவின் கோரிக்கையை மைத்திரி அடியோடு நிராகரித்ததான செய்திகளும் வெளியாகியுள்ளன. இதேவேளை மைத்திரி–மகிந்த சந்திப்பில் பேசப்பட்ட ஏனைய விடயங்கள் என்ன? என்பது இன்னமும் வெளிவரவில்லை.

கால ஓட்டத்தில் அவை வெளிவரக் கூடும். எதுவாயினும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை மகிந்த ராஜபக்ஷ சந்தித்ததற்குள் இருக்கக்கூடிய உள் நோக்கங்களை மேலோட்டமாகப் பார்த்துவிட முடியாது.

மைத்திரிபால சிறிசேனவை சந்திப்பதன் மூலம் பின்வரும் நோக்கங்களை அடையமுடியும் என மகிந்த எதிர்பார்த்திருக்கலாம். இதில்

- ஜனாதிபதி மைத்திரியைச் சந்தித்து ஒரு உறவு நிலையை ஏற்படுத்துவதன் மூலம் தன்னை எதிர்த்து மைத்திரியோடு சேர்ந்திருப்பவர்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்துவது. அதாவது சந்திரிகா குமாரதுங்க, ரணில் விக்கிரமசிங்க போன்றவர்கள் இச் சந்திப்பால் கடுப்படைவர். இதன் ஊடாக மைத்திரியுடனான அவர்களின் உறவை பாதிப்படையச் செய்தல்.
- மைத்திரியுடனான சந்திப்பை ஏற்படுத்துவதன் மூலம் தனக்கு எதிராக வரக்கூடிய சர்வதேச போர்க்குற்ற விசாரணையை மழுங்கடித்தல்.
- ஜனாதிபதி மைத்திரியைச் சந்தித்து என்னை பிரதமர் வேட்பாளராக நியமிக்கும்படி கேட்டேன். ஆனால் அவர் முடியாது என்று விட்டார். ஆகையால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குப் புறம்பாக ஒரு கட்சியை ஆரம்பித்து அதில் போட்டியிட வேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளது.

விடுதலைப் புலிகளைத் தோற்கடித்த என்னை பிரதம வேட்பாளராக்க முடியவில்லை என்றால், என்னருமை சிங்கள மக்கள்தான் இதற்குப் பதில் கூறவேண்டும் என்றொரு பிரசாரத்தை ஏற்படுத்தல்.

- தன் மீதும் தனது குடும்பத்தின் மீதும் எழக்கூடிய ஊழல் குற்றச்சாட்டுக்களில் இருந்து தப்பித்துக் கொள்வதற்கு ஜனாதிபதி மைத்திரியின் உதவியைப் பெறுதல். அதாவது பிரதம வேட்பாளர் பதவியில் போட்டியிடுவதற்கு எனக்குச் சந்தர்ப்பம் தர முடியாது என்றால், ஊழல் குற்றச்சாட்டுக்களில் இருந்தாவது எங்களை விடுவிக்கலாம் அல்லவா? என்றொரு மாற்றுக் கோரிக்கையை முன்வைத்தல்.

என்றவாறாக பல்வேறு இலக்குகளை மையப்படுத்தி மைத்திரிபால சிறிசேனவை மகிந்த ராஜபக்ஷ சந்தித்தார் என்று சொல்ல முடியும்.

எது எப்படியாயினும் சோதிடர் சுமணதாச அபேகுணவர்த்தனவிடம் கேட்டு தேர்தல் நடத்திய மகிந்த ராஜபக்ஷ இப்போது மைத்திரியிடம் சென்று எனக்கு பிரதம வேட்பாளர் பதவி தாருங்கள் என்று கேட்பது நகைப்புக்குரியதாகும்.

இரண்டு தடவைகள் ஜனாதிபதியாக இருந்து விடுதலைப் புலிகளைத் தோற்கடித்த இறுமாப்பில், உணர்ச்சி மேலீட்டால் விமான நிலையத்தின் புற்றரையில் விழுந்து இலங்கை மண்ணை வணங்கிய மகாராஜா மகிந்த இன்று மைத்திரியை வணங்கி பிரதம வேட்பாளர் பதவி கேட்பது; காலம் கறுத்தாருக்கு மட்டுமல்ல மகிந்தவுக்கும் பிழைக்கும் என்பதையே சொல்லி நிற்கிறது.

மகாராஜா மகிந்த ராஜபக்ஷவே எங்களின் சூரிய சந்திரர் என்று புகழ்பாடிய காலம் இவ்வளவு கெதியாகக் கலையும் என்று யார் நினைத்தார்.

இதுதான் நிலைமை. இதை அனைவரும் உணர்ந்து தத்தம் கடமைகளை ஒழுங்காகச் செய்து, கடவுள் நீதிக்குத் தலை வணங்கினால் எல்லாம் நல்லதாக அவன் நடத்திவிப்பான் என்பது முழுவதும் உண்மை.

# மைத்திரி-மகிந்த சந்திப்பு விபரங்கள் குருநாகல் கூட்டத்தில் வெளியிடப்படும்

## முன்னாள் அமைச்சர் வாசு தகவல்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் இடையில் நேற்று முன்தினம் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் பேசப்பட்ட விடயங்களை இன்றையதினம் குருநாகலில் நடைபெறவுள்ள கூட்டத்தில் வெளியிட போவதாக ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

குருநாகல் கூட்டத்தில் மகிந்த ராஜபக்ஷவை பிரதமர் வேட்பாளராக அறிவிக்க கோரி பாரிய அழுத்தங்களை கொடுக்க எண்ணியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் குருநாகலில் நடைபெற போவது மைத்திரி எதிர்ப்பு கூட்டம் அல்ல. அது ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிரான கூட்டம் என இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட முன்னாள் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அதேவேளை இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்டுள்ள பிவித்துரு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில,

நாடாளுமன்ற வீதியில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடத்துவதை தடுக்க பொலிஸார் அண்மையில் தடை உத்தரவொன்றை பெற்றிருந்ததாக குறிப்பிட்டுள்ளார்.

அப்படியானால், சோபித தேரர் தலைமையில் 19-வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தை ஆதரித்து நடத்திய ஆர்ப்பாட்டத்தை தடுக்க பொலிஸார் ஏன் நீதிமன்ற தடையுத்தரவை பெறவில்லை என உதய கம்மன்பில கேள்வி எழுப்பியுள்ளார். (செ-11)

# வெலிக்கடை சிறையில் மகிந்த

## கைதான முன்னாள் அமைச்சரை பார்க்கச் சென்றார்

முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன பெர்னாண்டோவை பார்வையிட முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று வெலிக்கடை சிறைச்சாலைக்கு சென்றுள்ளார்.

சதொச நிறுவனத்திடமிருந்து ஐந்து மில்லியன் ரூபாய் பெறுமதியான பொருட்களை பெற்றுக்கொண்டு அதற்கான கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டிருக்கவில்லை என்ற குற்றச்சாட்டின் கீழ், ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ கைது செய்யப்பட்டிருந்தார்.

நிதி மோசடி பொலிஸ் பிரிவினால் கைது செய்யப்பட்ட ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ நேற்றுமுன்தினம் குருநாகல் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில், எதிர்வரும் 11-ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

இதேவேளை தன்னை கைது செய்தமையானது, அடிப்படை உரிமை மீறல் என தெரிவித்து முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு கடிதம் ஒன்று அனுப்பி வைத்துள்ளார்.

சதொச நிறுவனத்தில் நிதி மோசடி இடம் பெற்றுள்ளதாக குற்றச்சாட்டப்பட்டு தன்னை கைது செய்தமையானது அநீதியான ஒரு செயலாகும் என அவர் அக் கடிதத்தில் தெரிவித்துள்ளார். (இ-5)

# திருத்தப் பணிகள் காரணமாக புகையிரத சேவையில் மாற்றம்

(யாழ்ப்பாணம்)

பாலம் மற்றும் வீதி திருத்தப் பணிகள் காரணமாக வடக்கிற்கான புகையிரத சேவையில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட புகையிரத நிலைய அதிபர் ரீ.பிரதீபன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாளை 9ஆம் திகதி முதல் 17ஆம் திகதி வரை இந்த மாற்றங்கள் ஏற்படுத்தப்படவுள்ளன.

இதற்கமைய 9ஆம் திகதி கொழும்பு கோட்டையில் இருந்து தலைமன்னார் மற்றும் சுன்னாகம் வரையான சேவையில் ஈடுபடும் இரவு நேர தபால் புகையிரத சேவை இரத்து செய்யப்பட்டுள்ளது.

10, 11ஆம் திகதிகளில் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி புறப்படும் இரவு நேர தபால் புகையிரதம் 55 நிமிடங்கள் தாமதமாகியும், யாழ்ப்பாணத்தில் இருந்து புறப்படும் தபால் புகையிரதம் ஒரு மணித்தியாலம் தாமதமாகி பயணிக்கும்.

அத்துடன் 16, 17ஆம் திகதிகளில் வடக்குக்கான அனைத்து புகையிரத சேவைகளும் இரத்து செய்யப்பட்டு கொழும்பில் இருந்து அனுராதபுரம் வரை புகையிரத சேவை இடம்பெறும்.

அதனை தொடர்ந்து 17ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் இருந்து இரவு 7 மணிக்கு புகையிரத சேவை ஆரம்பமாகி தொடர்ந்து சேவைகள் வழமைபோல் நடைபெறும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# நூலக தகவல் விஞ்ஞான டிப்ளோமா கற்கைநெறி தரம்-3 மீட்டல் வகுப்புகள்

(யாழ்ப்பாணம்)

இலங்கை நூலக சங்கத்தின் யாழ்ப்பாண நிலையத்தினால் நடத்தப்படவுள்ள நூலக தகவல் விஞ்ஞான் டிப்ளோமா கற்கைநெறி தரம் 3 (2014/2015) எதிர்வரும் 23,24 ஆம் திகதி நடைபெற இருப்பதால் இப்பரீட்சைக்குரிய மீட்டல் வகுப்புக்கள் நாளையும் நாளை மறுதினமும் யாழ். பல்கலைக் கழகத்தில் நடைபெறவுள்ளன.

இப்பரீட்சைக்கு தோற்றவிருக்கும் மாணவர்களை கலந்து கொள்ளுமாறு இலங்கை நூலக சங்க யாழ். நிலைய ஒருங்கிணைப்பாளர் திருமதி கல்பனா சந்திரசேகர் தெரிவித்துள்ளார். (இ-7)

# தேர்தலில் மாற்றுக்கட்சியில் களமிறங்க தயாராகும் பந்துல

எதிர்வரும் பொதுத்தேர்தலில் மாற்றுக்கட்சியில் களமிறங்கப்போவதாக பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

சிங்கள ஊடகமொன்றுக்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பாது [illegible] முயற்சிப்பதாகவும் அம்முயற்சி தோல்வியடைந்தால் இவ்வாறான ஒரு நடவடிக்கையை மேற்கொள்ளவுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை பொதுமக்களின் நலனுக்காக மேற்கொள்ளவேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் தொடர்ந்து [illegible]படுத்தப் போவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-5)

# சிறுகதைத் தொகுதி வெளியீடு நாளை

(யாழ்ப்பாணம்)

இராஜேஸ்கண்ணனின் இரகசியமாய்க் கொல்லும் இருள் எனும் சிறுகதைத் தொகுதி வெளியீட்டு நிகழ்வு நாளை சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் இமையாணன் அரசினர் தமிழ் கலவன் வித்தியாலயத்தில் எழுத்தாளர் குப்பிளான் ஐ. சண்முகன் தலைமையில் நடைபெறவுள்ளது. இமையாணன் கலை இலக்கிய மன்றத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் வெளி யீட்டுரையினை கலாநிதி த.கலாமணியும் திறனாய்வுக் கருத்தாடலை சி.ரமேஸ், த.அஜந்த குமார், தி.செல்வமனோகரன் ஆகியோர் ஆற்றவுள்ளனர். (இ-3)

# ஆயுர்வேத மருத்துவமுகாம்

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தால் இலவச ஆயுர்வேத மருத்துவமுகாம் நாளை சனிக்கிழமை கலைமகள் படிப்பகத்தில் கதலை 8.30 மணிமுதல் பிற்பகல் 2மணிவரை நடத்தப்படவுள்ளது.

இந்த இலவச மருத்துவ முகாமில் எந்தக் கிராமத்தைச் சேர்ந்தவர்களும் பங்குபற்றி பயனடைய முடியும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (இ-3)




## பெண் குழந்தை முக்கியம்

★ பெரியோர்களுக்கு கண்ணியம் கொடுக்காதவரும், சிறியோர் மீது இரக்கம் கொள்ளாதவரும் எம்மைச் சேர்ந்தவரல்ல.

★ பெண் குழந்தையை விட, ஆண் குழந்தைக்கு முதன்மை அந்தஸ்து கொடுக்காமல் இருக்கும் ஒருவரை நிச்சயம் அல்லாஹ் சொர்க்கத்தில் நுழைய வைப்பான்.

★ தன்னுடைய வரவுக்குத் தக்கபடி செலவு செய்பவனும் எல்லாச் செயல்களிலும் நடுவுநிலையைக் கை கொள்பவனும் நிச்சயம் ஏழ்மை அடைய மாட்டான்.

★ உங்களை விட கீழ் நிலைமையில் இருப்பவர்களைப் பாருங்கள். உங்களுக்கு மேலான நிலையில் உள்ளவர்களைப் பார்க்காதீர்கள்.

★ செல்வச் செழிப்போடு வாழும்போது நீ இறைவனை நினைத்தால் நீ துன்பம் அடையும்போது இறைவன் உன்னை நினைப்பான்.

★ தற்செயலாக குவிந்து விட்ட பொருள் யாவும் செல்வமில்லை. ஆன்மிகச் செல்வமே செல்வம்.

★ நீங்கள் கற்புடையவர்களாக இருங்கள். உங்கள் மனைவியரும் கற்புடையவர்களாக இருப்பார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டு உபகரணங்கள் பகிர்ந்தளிக்கும் நிகழ்வு



கோப் (HOPE) கனவு காண்பிப்பதற்கல்ல வழிகாட்டுவதற்கு என்ற வேலைத் திட்டத்தின் கீழ், இளைஞர் கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் பகிர்ந்தளிக்கும் நிகழ்வு நாடுபூராகவும் அண்மையில் நடைபெற்றது.

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் ஏற்பாட்டில், HOPE செயற்றிட்டத்தின் கீழ் சண்டிலிப்பாய் சங்கானை, உடுவில், தெல்லிப்பழை மற்றும் காரைநகர் ஆகிய பிரதேச செயலக பிரிவுகளிலுள்ள இளைஞர சேவைகள் மன்றங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு மானிப்பாய் இந்துக் கல்லூரியில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

இளைஞர் சேவைகள் மன்றத்தின் மாவட்ட சம்மேளனத் தலைவர் எஸ்.லக்ஷன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்திராக யாழ் மாவட்ட அரச அதிபர் வேதநாயகன் கலந்து கொண்டார்.

இதில் சங்கானை பிரதேச செயலாளர் பிரிவில் 32 கழகங்கள், தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவில் 31 கழகங்கள், காரைநகர் பிரதேச செயலாளர் பிரிவில் 14 கழகங்கள், சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் 43 கழகங்கள், உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் 41 கழங்கங்கள் என மொத்தம் 161 கழகங்களுக்கு உதைபந்தாட்டம், கரப்பந்துகள், வலைப்பந்துகள, மென்பந்து கிரிக்கெட் உபகரணங்களும் மற்றும் கரம்போட் என்பனவும வழங்கப்பட்டன. (க-23)

## மாவட்ட மட்ட உதைபந்தாட்டம் சென். பற்றிக்ஸ் சம்பியன்



பாடசாலைகளுக்கிடையிலான மாவட்ட மட்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் 19 வயதின் கீழ் ஆண்கள் பிரிவில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி சம்பியனானது. அண்மையில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதிப்போட்டியில் புனித ஹென்றியரசர் கல்லூரி அணியும் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியும் மோதின. இரு அணிகளும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய போதிலும் முதற்பாதி ஆட்டத்தில் சென். பற்றிக்ஸ் வீரர் சுரேஸ் அடித்த அபாரமான கோலின் மூலம் அவ்வணி முன்னிலை பெற்றது.

இதனால் இரண்டாம் பாதி ஆட்டம் சூடுபிடித்தது. இரண்டாம் பாதி ஆட்டத்தை தீவிரப்படுதிய இரு அணிகளும் மாறிமாறி எதிரணி கோல்பரப்பை ஆக்கிரமித்த வண்ணம் இருந்தன. இந்நிலையில் சென். பற்றிக்ஸ் அணி வீரர் எசல் ராஜ் தனது அணிக்கான அற்புதமான இரண்டாவது கோலைப் பெற்று அணியின் வெற்றியை உறுதி செய்தார்.

இறுதிவரை போராடிய புனித ஹென்றியரசர் கல்லூரி கோல் பெற போராடிய போதும் ஆட்ட நேர முடிவு வரை கோல் எதனையும் பெற முடியவில்லை. இதனால் சென. பற்றிக்ஸ்அணி 2-0 என்றகோல் கணக்கில் வெற்றி பெற்றது. மூன்றாம் இடத்தினை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி பெற்றது. (க-20)

## கொற்றாவத்தை அரசினர் தமிழ்க்கலவனை வீழ்த்தியது புனித ஹென்றியரசர் கல்லூரி





பாடசாலைகளுக்கிடையிலான மாவட்ட மட்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் 15 வயதின் கீழ் ஆண்கள் பிரிவில் புனிதஹென்றியரசர் கல்லூரி அணி சம்பியனானது. அண்மையில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் புனித ஹென்றியரசர் கல்லூரியும் கொற்றாவத்தை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை அணியும் மோதின. இரு அணிகளும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய போதிலும் முதற்பாதி ஆட்ட முடிவில் எந்த அணியாலும் கோல் பெற முடியாத சூழ்நிலையில்

இரண்டாம் பாதி ஆட்டம் சூடுபிடிதத்து. இரண்டாம் பாதி ஆட்டத்தை தீவிரப்படுத்திய புனிதஹென்றியரசர் கல்லூரி அணி வீரர் அருள் யோசப் முதலாவது கோலை அடித்து அணியை முன்னிலைப்படுத்தினார். தொடர்ந்து புனிதஹென்றியரசர் கல்லூரி அணி வீரர் நிதுசன் தண்டனை உதைவய்பனை கோலாக மாற்றினார். தொடர்ந்து கொற்றாவத்தை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைஅணி வரர்கள் கோல் பெற போராடிய போதும்ஆட்ட நேர முடிவு வரை கோல் எதனையும் பெற முடியவில்லை.

இதனால் புனிதஹென்றியரசர் கல்லூரி அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

மூன்றாம் இடத்துக்கான போட்டியில் தேவரையாளி இந்துக் கல்லூரி அணியை வீழ்த்தி சென் பற்றிக்ஸ் அணி வெற்றி பெற்றது (க-20)

## மகாஜனக் கல்லூரி வெற்றி



இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ். மாவட்ட பாடசாலைகளின் 15 வயதுப்பிரிவு கிரிக்கெட் அணிகளுக்கிடையில் நடைபெற்று வரும் கிரிக்கெட் போட்டியில், என்.நிசானுயன் பெற்ற 5 விக்கெட்டுகளால் மகாஜனக் கல்லூரி அணி வெற்றி பெற்றது.

மகாஜனக் கல்லூரியில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் யாழ்ப்பாணம சென்ஜோன்ஸ் கல்லூ ரியை எதிர்த்து மகாஜனக் கல்லூரி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென் ஜோன்ஸ் கல்லூரி 24 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 132 ஓட்டங்களை பெற்றது.

எம்.சலோமியன் 35, எஸ்.எல்சான் ஆர்.டேனுசன் 23 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தனர்.

மகாஜனக் கல்லூரி சார்பில் பந்து வீசிய என். நிசானுயன் 07 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற ஓவருடன் 17 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மகாஜனாக் கல்லூரி 26.3 ஓவர்களில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

ஆர்.பகீரதன் 25, கி.கிரிசாந் என்.நீல்ஜோன்சன் தலா 14, என்.நிசானுயன் 13 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்தனர். சென்ஜோன்ஸ் கல்லூரி சார்பில் பந்து வீசிய கே.கஜதீபன் 10 ஓவர்கள் பந்துவீசி 2 ஓட்டமற்ற ஓவர்களுடன் 30 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், ஆர்.தனுசன் 4 ஓவர்கள் பந்து வீசி 31 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர். (க-23)

## வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் நாளை ஆரம்பம்

வடமாகாண கல்வித் திணைக்களத்தால் வடமாகாணப் பாடசாலை வீர, வீராங்கனைகளுக்கிடையில் நடத்தப்படும் விளையாட்டுப் போட்டிகள் நாளை ஆரம்பமாகவுள்ளது.

முதல் நிகழ்வாக அரைமரதன் ஓட்டப்போட்டி முல்லைத்தீவு மாவட்டத்தில் நடைபெறவுள்ளது. தொடர்நது 4 கட்டங்களாக பெரு விளை யாட்டுக்கள் நடைபெறவுள்ளன. முதலாம், இரண்டாம் கட்டங்கள் முல்லைத் தீவிலும் மூன்றாம் கட்டம் வவுனியாவிலும் நான்காம் கட்டம் யாழ்ப் பாணத்திலும் நடைபெறவுள்ளன.

மாகாண மட்டப் போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ள தனிநபர் போட்டியாளர்கள், முதல் ஆறு இடங்களைப் பெறுபவர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்குதல், குழு நிலைப் போட்டிகளில் முதல் நான்கு இடங்களைப் பெறுபவர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்குதல் என்பன இந்தாண்டு முதன்முதலாக அறிமுகப்படுத்தப்படுகின்றது.

கடந்த காலங்களில் முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்களுக்கு மட்டும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டதாகவும் இம்முறை மாகாண விளையாட்டுப் போட்டி சம்பந்தமாக நடைபெற்ற கலந்துரையாடலில் கலந்துகொண்ட வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, இதனை வலியுறுத்தியதாகவும் இதன் அடிப்படையில் இம்முறை அதிக எண்ணிக்கையானவர்கள் மாகாண மட்டத்தில் சான்றிதழ்களை பெறவுள்ளதாகவும் மாகாண கல்வித் திணைக்களம் தெரிவித்தது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொல்கத்தா வெற்றி

ஐபிஎல் சீசன் 8-ன் நேற்றைய ஆட்டத்தில் டெல்லியை வீழ்த்தி கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி 13 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. முன்னதாக நாணயச்சுழற்சி வென்ற கொல் கத்தா அணித்தலைவர் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார். இதனையடுத்து களமிறங்கிய கொல்கத்தா அணி 20 ஓவரில் 7 விக்கெடடுகளை இழந்து 171 ஓட்டங்கள் குவித்தது. பின்னர் 172 ஓட்டங்கள எடுத்தால் வெற்றி என களமி றங்கிய டெல்லி அணி 20 ஓவரில் 6 விக்கெட்டுகளை இழந்து 158 ஓட்டங்களை எடுத்தது. எனவே கொல் கத்தா 13 ஓட்டங்கள் வித்தியாச த்தில் வெற்றி பெற்றது. போட்டி யன் ஆட்ட நாயகனாக கொல்கத்தா அணியின் சாவ்லா தெரிவானார். (க)






# ஜதராபாத்திடம் போராடி வீழ்ந்தது ராஜஸ்தான்

ராஜஸ்தானுக்கு எதிரான போட்டியில் ஜதராபாத் அணி 7 ஓட்டங் களால் போராடி வெற்றி பெற்றது.

நடப்பு ஐ.பி.எல் தொடரின் வது போட்டியில் சன்ன.ரசர்ஸ் ஜதராபாத், ராஜஸ்தான் றோயல்ஸ் அணிகள் மோதின.

மும்பை பிராபோர்ன் மைதானத்தில் நடைபெற்ற நேற்றைய போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற ராஜஸ்தான் அணி களத்தடுப்பை தெரிவு செய்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத தாடிய ஜதராபாத் அணியின் தொடக்க வீரர்களான ஷிகர் தவான அரைசதம் கடந்து 54 ஓட்டங்களும், அணித்தலைவர் டேவிட் வார்னர் 24 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தனர்.

இதனையடுத்து களமிறங்கிய ஹென்ரிக்ஸ் 20 ஓட்டங்களும், இயன் மோர்கன் அரைசதம் கடந்து 63 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தனர்.

20 ஓவர் முடிவில் ஜதராபாத் அணி 4 விக்கெட் இழப்பிற்கு 201 ஓட்டங்கள் எடுத்தது. இதனையடுத்து 202 ஓட்டங்கள் என்ற இமாலய இலக்குடன் துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் அணி ஜதராபாத் பந்து வீச்சை சமாளிக்கமுடியாமல் தடுமாறியது.

தொடக்க வீரர்களாக களமிறங்கிய ரஹானே 8 ஓட்டங்களிலும், அணித்தலைவர் வொட்சன் 12 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர்.

அடுத்து களமிறங்கிய ஸ்மித் மட்டும் நிலைத்து நின்று ஆடி 9 பவுண்டரி, 2 சிக்சருடன் அரை சதம் கடந்து 68 ஓட்டங்கள் எடுத்தார்.

11 ஓவரில் 4 விக்கெட்டை இழந்து 77 ஓட்டங்களுடன் ராஜஸ்தான் அணி தடுமாறியது. அடுத்து களமிறங்கிய ஜேம்ஸ் பால்க்னர் 30 ஓட்டங்களும், சஞ்சு சாம்சன் 21 ஓட்டங்களும், ஆட்டமிழக்காமல் கிறிஸ் மோரிஸ் 34 ஓட்டங்களும் எடுத்தனர்.



போராடிய ராஜஸ்தான் அணி 20 ஓவர் முடிவில் 7 விக்கெட் இழப்பிற்கு 194 ஓட்டங்கள் மட்டுமே எடுத்து 7 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

பந்துவீச்சில் ஜதராபாத் அணியின் புவனேஸ் குமார் 3 விக்கெட் வீழ்த்தினார். ஆட்டநாயகனாக இயான் மோர்கன் தெரிவு செய்யப்பட்டார். (க)

# புதிய ஆட்சியில் நான்...

ஜனாதிபதித் தேர்தல் நேரத்தில் விநியோகிப்பதற்காக சதோச நிறுவனத்தில் 52 லட்சம் ரூபாயுக்கு பொருட்களை பெற்று அதற்கான பணத்தை வழங்கவில்லை என்ற குற்றச்சாட்டில் முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில், முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ கைது செய்யப்பட்டமையானது நல்லாட்சியின் மற்றுமொரு பழிவாங்கும் முயற்சி என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

வெலிக்கடை சிறையில் அடைக்கப்பட்டுள்ள ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவை நேற்றைய தினம் சிறைக்கு சென்று சந்தித்து விட்டு வெளியில் வரும் போது ஊடகவியலாளர்களிடம் பேசும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நல்லாட்சியின் மற்றுமொரு முடிவை காண வந்தேன். இது தெளிவான சிவில் வழக்கு.

கடன் வாங்குவதும், கடன் கொடுப்பதும். கடனை செலுத்துவது போன்ற விடயங்கள் சிவில் வழக்குகளுடன் சம்பந்தப்பட்டவை. சிவில் வழக்கொன்று எப்படி குற்றவியல் வழக்காக முடியும் என்பது எனக்கு புரியவில்லை.

இந்தக் காலத்தில் பல விடயங்கள் திரிபுபடுத்தப்படுகிறது. திரிபுபடுத்தப்படுவது நல்ல காரியமாக இருக்காது. சீ.டப்ளியூ என்பது வர்த்தக நிறுவனம். அதில் கடன் கொடுக்கவும் முடியும் கடனை பெறவும் முடியும். பெற்ற கடனை மீண்டும் செலுத்தவும் முடியும். கடன் செலுத்தப்பட்டும் விட்டது.

அத்துடன் இது அரச நிறுவனமும் அல்ல. அது கூட்டுத்தாபனம். இது பொது சொத்துகள் தொடர்பான சட்டத்திற்குள் அடங்காது. எனினும் இதனை பொது சொத்துக்கள் சட்டத்திற்குள் கொண்டு வந்துள்ளனர். சரியாக பசில் ராஜபக்ஷவின் சமுர்த்தி வழக்கு போன்றது.

அமைச்சரவைக்கு அமைச்சர் ஒருவரை நியமிப்பது இலஞ்சமாம். அப்படியானால் தற்போதுள்ள பிரதமர் பதவியில் இருப்பது அனைத்துமே இலஞ்சம்.

தற்போது மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் முற்றாக அரசியல் பழிவாங்கல் என்பது தெளிவானது. இது தவறு என நான் எண்ணுகிறேன்.

இது குறித்து நேற்று நாங்கள் பேசினோம். குறிப்பாக இந்த சட்ட மூலம் அதாவது வர்த்தமானி அறிவித்தல் பற்றி பேசினோம்.

வர்த்தமானி அறிவித்தல் மூலம் மேற்கொள்ளப்படவிருந்த நடவடிக்கைகள் நடக்கவில்லை. பிரதமர் ஒருவருக்கு பொலிஸ் மா அதிபரின் அதிகாரங்களை பெற முடியாது. பிரதமர் உட்பட அமைச்சரவை உப குழு வர்த்தமானி அறிவித்தல் மூலம் பொலிஸ் மா அதிபரின் அதிகாரங்களை பெற்றுள்ளது.

இது தெளிவாக அதிகாரங்களை ஓரிடத்தில் குவித்துள்ளது. ஹிட்லருக்கு பின்னர் இவ்வாறு நடந்திருப்பதாகவே எனக்கு தோன்றுகிறது.

நாட்டின் சுயாதீனத் தன்மையை கெடுக்கும் வகையிலும் அனைத்து அதிகாரங்களையும் தன்னகத்தே இருக்க வேண்டும் என்னும் பதவி ஆசையினால் 18வது சீர்திருத்த சட்டத்தினை நிறைவேற்றி, தான் இரண்டு தடவைகளுக்கு மேல் நாட்டின் தலைவராக இருக்கலாம் என்னும் திருத்தத்தை மேற்கொண்டு உலகத்திற்கு சவால் விடுத்த நபர் இவ்வாறு தெரிவிப்பது வேடிக்கையானது என அரசியல் நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றார்கள்.

தன்னை வலுப்படுத்தினால் நாட்டில் அசைக்க முடியாத நபராக மாறலாம் என்பது இவரின் தாரக மந்திரமாக இருந்தது என்றும், தானே ராஜா தானே மந்திரி என்றிருந்தவர் இப்பொழுது அதிகாரங்கள் ஓரிடத்தில் குவிந்திருப்பதாக கூறுவதென்பது இவரின் அரசியல் அறியாமையை வெளிப்படுத்துவதாக பெயர் குறிப்பிட விரும்பாத அதிகாரியொருவர் தெரிவித்தார். (செ-11)

# சம்பூர் காணிகள் விடுவிப்பு
## ஜனாதிபதி மைத்திரி ஒப்பம்

திருகோணமலை மாவட்டத்தில் சம்பூர் பகுதியில் முதலீட்டு வலயத்துக்காக சுவீகரிக்கப்பட்ட பொதுமக்களின் 818 ஏக்கர் காணி மீளக் கையளிக்கப்படவுள்ளது. இதற்கான வர்த்தமானி அறிவித்தலில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று வியாழக்கிழமை கையெழுத்திட்டார். இதன்படி சம்பூர் மக்கள் தமது காணிகளை இன்று வெள்ளிக்கிழமை முதல் பார்வையிட முடியும்.

சம்பூர் மக்களின் மீள்குடியேற்றம் தொடர்பில் ஜனாதிபதி செயலகத்தில் நேற்று நடைபெற்ற கூட்டத்தின் பின்னர் மேற்படி வர்த்தமானி அறிவித்தலில் ஜனாதிபதி மைத்திரிபால கையெழுத்திட்டார். (செ-11)

# மக்களின் காணிகளை...

தமிழரசுக் கட்சியின் தலைமைக் காரியாலயத்தில் நேற்றுக் காலை ஊடகவியலாளர்களைச் சந்தித்து மீள்குடியேற்றம் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலையே மாவை சேனாதிராசா மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது..

கடந்த காலங்களில் யாழ்ப்பாணத்தில் மட்டுமல்லாது வடக்கு கிழக்கின் பல இடங்களிலும் தமிழ் மக்களுக்குச் சொந்தமான பல ஆயிரம் ஏக்கர் நிலங்கள் இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கின்றது. இவ்வாறு ஆக்கிரமிக்கப்பட்டதோடு மட்டுமல்லாது இதற்கு மேலதிகமாக சுவீகரிக்கும் நடவடிக்கைகளும் வேகமாக முன்னெடுக்கப்பட்டு வந்தன.

இந்நிலையில் நாட்டில் ஏற்படுத்தப்பட்ட ஆட்சி மாற்றத்தினூடாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் புதிய அரசிற்கும் இடையிலான இணக்கப்பாட்டின் அடிப்படையில் வலி வடக்கு மற்றும் வலி கிழக்குப் பிரதேசங்களில் ஆக்கிரமிக்கப்பட்டிருந்த நிலத்தில் முதற்கட்டமாக ஆயிரம் ஏக்கரை விடுவிப்பதாக அரசாங்கம் அறிவித்திருந்தது.

இதற்கமைய ஆயிரம் ஏக்கர் விடுவிக்கப்பட்டிருப்பதுடன் மேலும் ஏனைய பகுதிகளையும் விடுவிப்பதற்குரிய நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதனை விடுவிக்க வேண்டியதன் அவசியம் குறித்தும் தொடர்ச்சியாக நாம் புதிய அரசிடம் வலியுறுத்தியே வருகின்றோம்.

இவ்வாறு நிலங்கள் விடுவிக்கப்படுகின்ற அதே நேரத்தில் நிலங்களைச் சுவீகரிக்கும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இங்கு இடம் பெறுகின்ற சுவீகரிப்புக்கள் மற்றும் விடுவிக்கப்பட வேண்டிய நிலங்கள் தொடர்பில் நாம் அங்கம் வகிக்கும் தேசிய நிறைவேற்றுச் சபை மற்றும் விசேட குழுக்களுடன் விரைவில் கலந்துரையாடலில் ஈடுபடவிருக்கின்றோம்.

இதே வேளையில் விடுவிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்ட பிரதேசங்களில் விடுவிக்கப்பட்டதன் பின்னராக சுவீகரிக்கும் நடவடிக்கைகளை நிறுத்த வேண்டும். அத்தோடு அவ்வாறு சுவீகரிக்கப்பட்ட பகுதிகள் மீளவும் வழங்கப்பட வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைக்க உள்ளோம்.

இங்கு ஆக்கிரமிக்கப்பட்ட மற்றும் அபகரிக்கப்பட்ட நிலங்கள் முழுவதும் விடுவிக்க வேண்டுமென்றே நாம் தொடர்ச்சியாக பேச்சுவார்த்தை நடத்தி அதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றோம். இதன் ஆரம்பமாக வலி வடக்கு, வலி கிழக்கின் ஒரு பகுதிகள் முழுமையாக விடுவிக்கப்பட்டுள்ளது. திருகோணமலையின் சம்பூர் பிரதேசமும் ஜனாதிபதியினால் உத்தியோகபூர்வமாக விடுவிக்கப்பட உள்ளது.

இவ்வாறு ஆக்கிரமிக்கப்பட்ட மக்களுக்குச் சொந்தமான நிலங்கள் அனைத்தும் அவர்களிடம் மீண்டும் கையளிக்க வேண்டுமென நாம் தொடர்ந்தும் கோரி வருவதுடன் அதற்குரிய நடவடிக்கைகளையும் முன்னெடுப்போம் என மாவை சேனாதிராசா மேலும் தெரிவித்தார். (செ-4)

# கிரிக்கெட் போட்டி விண்ணப்பிக்குக

இருபாலை கிழக்கு விளையாட்டுக்கழகம் நடத்தும் அணிக்கு 6 பேர் 5 ஓவர்கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டி எதிர்வரும் சனி, ஞாயிறு தினங்களில் கழக விளையாட்டு மைதானத்தில் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இப் போட்டியில் பங்கு பெற விரும்பும் கழகங்கள் 0776354152 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (க)

# கோத்தபாய...

மோசடி தவிர்ப்பு பிரிவினர் விசாரணை நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

விசாரணைகளின் போது தகவல்களை வழங்க கால அவகாசம் தேவை என கோத்தபாய தெரிவித்தார். (செ-11)

# சம்பூர் கடற்படை...

றும் அவர் கூறியுள்ளார்.

அரச தகவல் திணைக்களத்தில் வியாழனன்று மாலை நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பிலேயே கிழக்கு மாகாண ஆளுநர் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

சம்பூர் கடற்படை முகாமின் பயிற்சி நிலையம் கடந்த 2007 ஆம் ஆண்டு திருகோணமலை கடற்படைத்தளத்தையும்கடற்பரப்பை அண்டியதாகவும் அமைக்கப்பட்டது.

விடுதலைப்புலிகளின் மீள் இணைவு அல்லது இதுபோன்ற வெளிச்சக்திகளின் பாதுகாப்பு அச்சுறுத்லுக்கு எதிராக அந்தப் பிராந்தியத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு இது பெரிதும் உதவி வந்துள்ளதாகத் அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-11)

# நிதிக்குற்றவியல்...

நிறுத்தப்படாது என சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

விசாரணைகளில் அரசியல் தலையீடு கிடையாது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே அறிவித்துள்ளதாக ராஜித தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சந்தித்த போதும், நிதிக் குற்றவியல் விசாரணைப் பிரிவின் நடவடிக்கைகள் குறித்து கேள்வி எழுப்பியதாகவும் ராஜித தெரிவித்துள்ளார்.

தேர்தலில் அளிக்கப்பட்ட வாக்குறுதிக்கு அமைய நிதிக் குற்றவியல் விசாரணைப் பிரிவின் பணிகள் தொடரும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, மஹிந்தவிடம் கூறியதாகஅமைச்சர்மேலும் தெரிவித்துள்ளார். (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சட்டம் அனைவருக்கும்...

கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

ஏதாவது குற்றம் தொடர்பாக ஆட்சியாளர்களிடம் விசாரணை மேற்கொள்ள வேண்டும் என்று நீதிமன்றத்திற்கோ அல்லது குற்றப் புலனாய்வு விசாரணை பிரிவிற்கோ அழைக்கப்பட்டால், அங்கு செல்ல வேண்டியது அவர்களின்கட்டாய தேவையாகும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டின் சட்டத்திற்கு தலைகுனிய பழகிக்கொள்ளவேண்டியதே நல்லாட்சி என அவர் குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் அரசாங்கத்தின் அமைச்

## பசிலு...

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த பசில், நேற்று கடுவல நீதவான் நீதிமன்றில் மீண்டும் ஆஜர்படுத்தப்பட்டார்.

இதன் போது கடுவல நீதவான் இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

மேலும் பசில் ராஜபக்ஷவுடன் சேர்த்து நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளர், திவிநெகும திணைக்கள பணிப்பாளர் மற்றும் சாரதி ஆகியோரும் மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சுகவீனம் காரணமாக முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் நிஹால் ஜயதிலக நீதிமன்றில் ஆஜராகவில்லை என தெரிவிக்கப்படுகின்றது. (செ-11)

சர்கள் மற்றும் உறுப்பினர்கள் இது குறித்து இன்னும் சரியாக புரிந்து கொள்ளவில்லை எனவும் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். (செ-11)

## விமானக்குண்டு...

பட்டமை மக்களால் அடையாளப்படுத்தப்பட்டது.

இந்நிலையில் விடயம் தொடர்பாக படையினருக்கும் முறையிட்டிருந்தனர். இதனையடுத்து குறித்த குண்டுகள் நான்கும் படையினரால் நேற்றையதினம் காலை மீட்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட குண்டுகளில் 3 செயலிழந்துள்ளதாகவும் ஒன்று வெடிக்கும் நிலையில் இருந்ததாகவும் படையினர் தெரிவித்துள்ளனர். (செ-11)

## பெருமளவு சொத்து...

மதியான சொத்துக்களை மறைத்து வைத்துள்ளதாக இலங்கை புலனாய்வு பிரிவினர் மதிப்பிட்டுள்ளனர். இந்தளவு தொகை பணம் இலங்கையின் ஊழியர் சேமலாப நிதியத்திலும் இல்லை.

வங்கிகளுக்கு சென்று பணத்தை எடுப்பது போல் ராஜபக்ஷவினர் வெளிநாடுகளில் மறைத்து வைத்துள்ள பணத்தை ஒரே தடவையில் எடுக்க முடியாது. அதனை எடுகக நீண்டகாலம் செல்லும்.

சர்வாதிகார ஆட்சியை நடத்திய சில நாடுகளின் தலைவர்கள் வெளிநாடுகளில் பதுக்கி வைத்துள்ள சொத்துக்களை அந்நாடுகள் தொடர்ந்தும் கண்டுபிடித்து வருகின்றன.

மொஹமட் கடாபிக்கு வெளிநாடுகளில் 80 பில்லியன் டொலர் பெறுமதியான சொத்துக்கள் உள்ளன.

அவற்றில் 3.4 பில்லியன் டொலர் பெறுமதியான சொத்துக்களே தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

எகிப்து முன்னாள் ஜனாதிபதி ஹொஸ்னி முபாரக் வெளிநாடுகளில் பதுக்கி வைத்திருக்கும் 700 பில்லியன் டொலர் பெறுமதியான சொத்துக்களில் 800 மில்லியன் டொலர் பெறுமதியான சொத்துகளே தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

துனிசியாவின் பென் அலி வெளிநாடுகளில் பதுக்கியுள்ள 4 பில்லியன் பெறுமதியான சொத்துக்களில் 69 மில்லியன் டொலர் பெறுமதியான சொத்துக்களே தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இதனால், இது ஒரு நீண்டகால செயற்பாடு.

மோசடியாளர்களுக்கு தண்டனை வழங்க வேண்டாம் என மக்கள் கூறவில்லை. தண்டனை கொடுக்குமாறே மக்கள் கூறுகின்றனர்.

சொத்துக்களை கண்டுபிடிப்பதில் ஏற்படும் தாமதமே பிரச்சினையாக உள்ளது எனவும் மங்கள சமரவீர குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற மைத்திரி - மகிந்த சந்திப்பு குறித்து கருத்து வெளியிட்ட மங்கள சமரவீர, மகிந்த ராஜபக்ஷ வெட்கமின்றி, பிரதமர் பதவியை கேட்பதற்காக நேற்று பேச்சுவார்த்தை நடத்தியதாக கூறியுள்ளார். (செ-11)

## மணற்கொள்...

நபரும் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதனை காங்கேசன்துறை பொலிஸ் பிராந்தியம் பிரிவு 2-க்கு பொறுப்பான உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஏ.எம்.ஜவ்பர் உறுதிப்படுத்தியுள்ளார்.

மணற்கொள்ளையில் 12 பேர் கொண்ட கும்பல் ஈடுபடுகின்றனர் என பருத்தித்துறை பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் சிவில் உடையில் அங்கு சென்ற பொலிஸார் மீது கொள்ளையர்கள் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

இதனையடுத்து, பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர். இதில் ஒருவர் படுகாயமடைய மிகுதிப் பேர் தப்பி ஓடியுள்ளனர். மிகுதிப் பேரைக் கைது செய்வதற்கான தேடுதல் நடவடிக்கை முடுக்கி விடப்பட்டுள்ளதாக ஜவ்பர் தெரிவித்தார். (செ-4,60)

## இளைஞர் ஒரு...

கல் தொங்கிய நிலையில் சடலமாக காணப்பட்டுள்ளார்.

இவரது சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இவரது காற்சட்டைப் பொக்கற்றினுள் இருந்து கடிதம் ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.

அதில் எனக்கு இரு சகோதரர்கள் தினேஸ், புவின். எனது காதலியின் பெயர் XXXXXX எனக் குறிப்பிட்டு காதலியைக் கேட்டால் முழு விடயமும் தெரியும் என்று எழுதி ஒப்பமிட்டு விரல் அடையாளமும் இடப்பட்டுள்ளதாக வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (செ-3,60)


யாழ் - கொழும்பு முண்ணனி நிறுவனங்கள் மற்றும் வர்த்தக மையங்களில்
உடனடி வேலைவாய்ப்புக்கள்
1000 ற்கும் மேற்பட்ட வெற்றிடங்கள்
சுயவிபரக்கோவையுடன் மே 15 க்கு முன் நேரில் வரவும்
சிகரம் தொழில் வங்கி
SIKARAM
Get Set for Careers & Take off Your Dreams
Sikaram (Pvt) Ltd.
275-2/1 & 2/2, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம் (வைத்தியசாலை பின்புறம்)
(C-913) Tel: 077 36 16 798

17 Batch
LOGIC
எஸ்.எஸ்.மனோகரன்
ஆரம்பம் : 09.05.2015
சனி 12.00 மணி
(C-920)
BEACON யாழ்நகர் (வெலிங்டன் சந்தியடி)

அரசியல் விஞ்ஞானம்
A/L - 2017
K.சுகாஷ்
DCM - யாழ்.நகர்
Economics Hall - யாழ்.நகர்
DCM - சுன்னாகம்
அஸ்மின் - சண்டிலிப்பாய்
SUBRA - சித்தன்கேணி
புதிய பிரிவுகள் ஆரம்பம்
(299) 09.05.2015

வேலைவாய்ப்புக்கள்
Golden group (Advertising)
எமது நிறுவனத்தில் உருவாக இருக்கும் புதிய கிளைகளுக்கான
- மேற்பார்வையாளர்
- விநியோகஸ்தர்
- உதவி முகாமையாளர்
- முகாமையாளர்
போன்ற பதவியாளர்கள் தேவைப்படுகின்றனர்.
O/L இல்லாதவர்களுக்கும் விசேட பதவி வாய்ப்புக்கள் உள்ளன.
O/L, A/L உள்ளவர்கள் உடனே தொடர்பு கொள்ளவும்.
கிளிநொச்சி,முல்லைத்தீவு,வவுனியா,மன்னார்,யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது. No. 8.6ம் குறுக்கு தெரு. யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு :- 0779987699
(C-922)

IELTS இல்லாமல்
ஐரோப்பா போக
பிரான்ஸ், இத்தாலி, ஜேர்மனி, நோர்வே உள்ளிட்ட 23 நாடுகளுக்குச் செல்லக்கூடிய செங்கன் விசா
பகுதி நேர வேலைவாய்ப்புடன் பட்டக்கல்வியைத் தொடர்ந்து, வேலைவாய்ப்புடன் விரும்பிய நாட்டில் குடியேறலாம்
க.பொ.த. உயர்தரத்தில் 3 பாடச் சித்தி அவசியம்!
அழையுங்கள்
0777 324 004
SIKARAM
Education Abroad
Work, Migration & Visa Solutions
எந்தவொரு நாட்டுக்குமான எந்த வகை விசா என்றாலும்
Sikaram (Pvt) Ltd.
(C-913) 275-2/1 & 2/2, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம் (வைத்தியசாலை பின்புறம்)
யாழ் பஸ் நிலையத்துக்கு மிக அருகில்

கடை வாடகைக்கு
யாழ்ப்பாணம் சிவன் கோயிலுக்கும் மனோகரா சந்திக்கும் இடையில் கடை வாடகைக்கு உண்டு. (419)
மேலதிக விபரங்களுக்கு : 0775905166

வேலைவாய்ப்பு
Innovage நிறுவனத்திற்கு 12 முழு நேர நிரந்தர வேலை வாய்ப்புக்கான வெற்றிடங்கள் உள்ளன.
01. Customer Service
02. Inventory Administrasion
03. Supervisor's
O/L, A/L முடித்தவராயின் விண்ணப்பிக்கலாம். முன் அனுபவம் அவசியமற்றது. சர்வதேச ரீதியான இலவச பயிற்சியுடன் அதிக வருமானத்தையும் பெற்றுக்கொள்ளலாம்.
No.28, 3rd Cross Street, Jaffna. (420)
தொடர்புகளுக்கு :- 0770771377/0771426379

BA, BCom, BSc
காமராசர் பல்கலைக் கழகம் (மதுரை)
மேற்படி பல்கலைக்கழகத்தினால் வைகாசி 2016 பரீட்சை எடுப்பதற்கான புதிய பதிவுகள் கோரப்படுகின்றன.
- A/L - ல் கலை,வர்த்தகம்,விஞ்ஞானம்,கணிதம் ஆகிய பிரிவுகளில் முழுமைச் சித்தி அடைந்தவர்களும் இரண்டு பாடம் சித்தியடைந்தவர்களும் விண்ணப்பிக்க தகுதியுடையவர்கள் ஆகும்.
- BA- ல் வரலாறு,பொருளியல், சமூக விஞ்ஞானம், தமிழ், ஆங்கிலம், பொது நிர்வாகம், JOURNALISM & MASS COMMUNICATION, அரசியல் விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் ஒன்றினைத் தெரிவு செய்ய முடியும்.
- BSc - ல் உளவியல், கணிதம், COMPUTER SCIENCE ஆகிய பாடங்களில் ஒன்றினைத் தெரிவு செய்ய முடியும்.
- இப்பட்ட நெறிகள் யாவும் இலங்கைப் பல்கலைக்கழகங்களின் பட்டங்களுக்கு நிகரான பட்ட நெறிகளாக இலங்கை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டவையாகும்.
- மேற்குறிப்பிட்ட பட்ட நெறிகளுக்குரிய பல்கலைக்கழக பதிவுகளும் விரிவுரைகளும் 02.05.2015 ல் இருந்து ஆரம்பமாகிவிட்டன.
- பரீட்சைகள் யாவும் காமராசர் பல்கலைக்கழகத்தின் யாழ் இணைப்பாளராகிய புதிய உயர்கல்லூரி வளாகத்தில் நடைபெறுகின்றன.
யாழ் இணைப்பாளர், காமராசர் பல்கலைக்கழகம் மதுரை.
T.P.No : 0212228148 (C-912)
புதிய உயர்கல்லூரி, ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.


Affordable, Business Data Analysis through Advance Excel @ IIS City Campus
Enroll now on for MAY Intake 10/05/2015
021 4900 900
071 7775 666
info@iis.edu.lk , keerthy@iis.edu.lk
Microsoft Excel ன்
கணக்காய்வு மற்றும் புள்ளிவிபரவியல் துறைகளில்...
புதிய பரிமாணம்...
புதிய நோக்கு...
இதனால் உங்களிடம்...
புதிய பெறுபேறு...
புதிய திருப்தி...
IIS CITY CAMPUS
200, Sivan Pannai Road , Jaffna
Contact : 021 222 8060
Website : www.iis.edu.lk


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.05.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org